REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஏப்ரல் 27 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 91 இல. 98 | Thursday 27, April, 2023 | 16பக்கங்கள் | 50/-

இலங்கை இன்று மறுமலர்ச்சி பாதைக்கு பிரவேசித்துள்ளது

அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை முன்னேற்ற ஜனாதிபதி ரணில் அழைப்பு

IMF உடன்படிக்கையை சபையில் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கை மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்து மீண்டும் உருவாகி வருவதாகவும் அதனை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு முழு நாட்டின் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். கடந்தாண்டு ஜூலை மாதத்தில் நாட்டில் காணப்பட்ட கலவரம், தீ வைப்பு, அரச வங்குரோத்து நிலைமை போன்ற காரணங்களால் வீழ்ச்சியடைந்த இலங்கையின் பொருளாதாரத்தை 8 மாதங்களில் மாற்றியமைத்து வெற்றிகரமாக மாற்ற முடிந்ததாகவும் அது 'Sri Lanka Come Back Story' என அழைக்கப்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை நேற்று (26) பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரை நிகழ்த்தினார்.

ஜனாதிபதி தொடர்ந்தும் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது,

"இலங்கையில் உள்நாட்டு கடனை மறுசீரமைப்பு செய்ய வேண்டும் என வெளிநாட்டு கடன் வழங்குநர்கள் முன்மொழிந்துள்ளனர். எனினும், அரசாங்கம் அது தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளவில்லை. எவ்வாறெனினும், வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களுடனான கலந்துரையாடல்களை ஆரம்பிக்கும் போது, இலங்கை அதன் உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைப்பது தொடர்பில் முடிவெடுக்கும்" என்றார்.

சிலர் தெரிவித்து வருவது போல் உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைப்பதால் உள்ளூர் வங்கிகள் மற்றும் பங்குச் சந்தைகளில் எந்த நெருக்கடியும் ஏற்படாது என்பதைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அத்துடன் ஊழியர் சேமலாப நிதி உறுப்பினர்களுக்கும் எந்த அநீதியும் ஏற்படாது.

எதிர்வரும் 04 வருடங்களுக்குள் இலங்கைக்கு 03 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைக்குமென எதிர்பார்ப்பதாகவும் தெரிவிப்பு.

அதனை அரசாங்கம் உறுதி செய்யும் என்றும் தெரிவித்தார். கடந்த வருடம் ஜூலை மாதத்தில் நாட்டில் நிலவிய அமைதியின்மை, தீ வைப்பு, வங்குரோத்து நிலை போன்ற காரணங்களால் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை 8 மாதங்களில் வெற்றிகரமாக மாற்ற முடிந்துள்ளதாகவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அது தொடர்பில் சிறப்புரையாற்றிய போதே, ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்துடன் 16 தடவைகள் உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ள போதிலும், அந்த 06

புத்தகப்பை, காலணி விலைகள் குறைகிறது

மே 23 முதல் குறைக்க விற்பனையாளர்கள் இணக்கம்

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகள் மற்றும் காலணிகளின் விலையை குறைக்க விற்பனையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

அதன்படி, எதிர்வரும் மே 23ஆம் திகதி முதல் புத்தகப் பைகள் மற்றும் காலணிகளின் விலையை குறைப்பதாக அவர்கள் உறுதியளித்துள்ளதாகவும், 06

நிவாரணம் வழங்கும் திட்டத்தில் அரசியல் தலையீடு எதுவுமில்லை

இடமளிக்கப்படவும் மாட்டாது என்கிறார் செஹான் சேமசிங்க

லோரன்ஸ் செல்வநாயகம்

மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் செயற்பாடுகளில் எந்தவித அரசியல் தலையீடுகளும் கிடையாது என, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நடவடிக்கைகளில் பொதுஜன பெரமுன 06

வெளிநாட்டு தொழில் தேடும் தாய்மார்களுக்கு

இரண்டு வயது குழந்தைகள் இருப்பின் வெளிநாட்டு தொழில் இல்லை

செல்லமுடியாதவாறு புதிய சுற்றறிக்கை வெளியானது

இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளை கொண்ட தாய்மார்கள் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புகளுக்காக செல்லக்கூடாதென, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு புதிய சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.

அமைச்சர் மனுஷ நாணயக்கார, அமைச்சரவைக்கு சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தின் 06

IMF நிதி வசதி திட்ட யோசனைக்கு SLFP ஆதரவு

அதன் தலைவர் மைத்திரிபால அறிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதித் திட்டம் தொடர்பான யோசனையை பாராளுமன்றத்தில் அங்கீகரிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளிப்பதாக, கட்சியின் தலைவர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

புளத்சிங்கள பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் 06

தென்கொரியாவில் 8,000 இலங்கையருக்கு தொழில்

மனுஷவுடன் கொரிய மனிதவள திணைக்களம் உடன்பாடு

தென்கொரியாவில் இலங்கையருக்கான தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கையை இம்முறை 8,000 ஆக அதிகரிக்க கொரிய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கும் கொரிய மனிதவள திணைக்களத்தின் பிரதானிகளுக்குமிடையே நேற்று (26) நடைபெற்ற சந்திப்பின் போதே, கொரிய மனிதவளத் திணைக்களத்தின் பிரதானி, இலங்கையருக்கான தொழில் வாய்ப்புக்கான எண்ணிக்கையை 8 ஆயிரமாக அதிகரிக்க உடன்பாடு தெரிவித்துள்ளார்.

கொரியமொழி ஆற்றலைக்கொண்டு 06

தெற்குக்கு வழங்கப்படும் அனைத்து வசதிகளும் வடக்கு, கிழக்குக்கும் 03

அரசாங்கத்தின் கொள்கை அது என்கிறார் அமைச்சர் பந்துல

மாணவர்களுக்கான மதிய உணவுத் திட்டத்தில் சில குறைகள் 03

விரைவில் நிவர்த்தி செய்யப்படும் என கல்வியமைச்சர் உறுதி

இலங்கை வரும் இந்தியர்களின் பரிவர்த்தனைக்கு சலுகை

இந்திய சுற்றுலா பயணிகள் இனி இந்திய ரூபாவை பயன்படுத்தலாம் 03

சூடானிலிருந்து 13 இலங்கையர் பாதுகாப்பாக வெளியேற்றம்

41 பேரில் 13 பேர் சவூதி ஜெத்தாவுக்கு வந்து சேர்ந்தனர்

சூடானில் உள்நாட்டு யுத்தத்தால் சிக்கித் தவித்த இலங்கையருள் 13 பேர் நேற்று (26) காலை சவூதி அரசாங்கத்தின் உதவியுடன் ஜெத்தாவுக்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

13 இலங்கையரும், இலங்கையின் பதில் தூதரகத்தால் 06

ஒரு கிலோ கஞ்சா கடத்தல் சிங்கப்பூரில் தமிழருக்கு தூக்கு 03

மறுபரிசீலனை செய்யக் கோரிய கோரிக்கைகள் நிராகரிப்பு

EPF, ETF என்பவற்றுக்கு ஏதாவது பாதிப்பு வருமா? 03

சபையில் அரசிடம் சஜித் நேற்று கேள்வி

கொழும்பில் வாகன நெரிசலைக் குறைக்க 04 அடுக்கு மாடி வாகன தரிப்பிட கட்டடங்கள் 03

முதல் கட்டம் அமைச்சர் பிரசன்னவால் திறப்பு

நாட்டில் 04 புதிய

கொவிட் தொற்றாளர் அடையாளம் காணல்

இலங்கையில் மேலும் 4 பேருக்கு கொவிட்19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக, அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று (26) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் (25) வெளியிடப்பட்ட தரவுகளின்படி 06

தங்கத்தின் விலையில் நேற்று சிறு அதிகரிப்பு

நாளாந்தம் ஏற்ற இறக்கத்துடன் பதிவு

நாட்டின் பொருளாதார நிலவரத்துக்கமைய தங்கத்தின் விலையும் ஏற்ற இறக்கங்களுடன் நாளாந்தம் பதிவாகி வருகின்றது. கடந்த காலங்களில் தொடர் வீழ்ச்சி கண்ட தங்கத்தின் விலை நேற்று சற்று அதிகரித்து 06

ராஜித உட்பட மூவருக்கு குற்றப்பத்திரிகை

திருத்தப்பட்ட பிரதிகள் கையளிப்பு

முன்னாள் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன உட்பட மூவருக்கு எதிராக திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகை நேற்று கையளிக்கப்பட்டுள்ளது. கொழும்பு, மட்டக்குளி முகத்துவாரம் 06

ஊடகவியலாளர் ரூபனின் 13ஆவது நினைவேந்தல்!

பொன்னாலை வெண்கரம் படிப்பகத்தில்

மறைந்த ஊடகவியலாளர் செ.ரூபனின் 13ஆவது ஆண்டு நினைவேந்தல் பொன்னாலை வெண்கரம் படிப்பகத்தில் நடைபெற்றது.

ஊடகவியலாளர் ம.ந. கடம்பேசுவரன் தலைமையில் 06

யாழில் கோர விபத்து; பொலிஸ் அதிகாரி பலி

மற்றுமொரு அதிகாரிக்கு படுகாயம்

யாழ். விசேட, பருத்தித் துறை விசேட நிருபர்கள்

யாழ்ப்பாணம், கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எருவன் பிரதேசத்தில் நேற்று முன்தினம் (25) இரவு 06

நகர்வலம்

ரயில் பிரயாணிகளின் கைபேசிகளை

திருடும் நபரொருவர் பொலிஸாரால் கைது

(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

ரயில் பிரயாணிகளின் கையடக்கத் தொலைபேசிகளை அபகரித்துச் செல்லும் நபரொருவரை கம்பஹா மாவட்ட, பல்லேவல பொலிஸார் அண்மையில் கைது செய்துள்ளனர். குறித்த சந்தேக நபர் கணேகொட, ரயில் நிலையத்துக்கு அருகில் புகையிரதம் மெதுவாக சென்று கொண்டிருந்தவேளை பயணியொருவரின் கையடக்கத் தொலைபேசியொன்றை அபகரித்துச் சென்ற சம்பவம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பேரில் மேற்படி நபரை பொலிஸார் சந்தேகத்தில் கைது செய்துள்ளனர்.

ரயில் பெட்டிகளில் அமர்ந்து கொண்டு கைபேசிகளின் மூலம் உரையாடுவோரை இலக்குவைத்து பிரயாணிகளின் கையடக்க தொலைபேசிகளை குறித்த சந்தேக நபர் அபகரித்துச் செல்வதாகவும் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தனது கையடக்க தொலைபேசி அபகரித்துச் சென்ற சம்பவம் தொடர்பாக ரயில் பயணியொருவர் பல்லேவல, பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் பேரில் பொலிஸார் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையின் காரணமாக சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். மேற்படி சந்தேக நபர் போகலகம, யாபலான பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரிய வந்துள்ளது.

பிரச்சினைகளை தீர்ப்பதன்றி தீவிரப் படுத்துபவர்கள் நீங்கள்

அமைச்சர் அலி சப்ரி சபையில் சாணக்கியன் மீது சாடல்

லோரன்ஸ் செல்வநாயகம்

பிரச்சினைகளுக்கு தீர்வை முன் வைக்காமல் பிரச்சினைகளை தீவிரப் படுத்துபவர்கள் நீங்கள் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி சாணக்கியனை சபையில் சாடினார்.

சபையில் நேற்று இடம்பெற்ற வாக்குவாதம் ஒன்றின் போது சாணக்கியன் தெரிவித்த கருத்துக்களுக்கு பதிலளிக்கும் வகையிலேயே வெளிவிவகார அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி:

நாம் அனைவரையும் சமமாக மதிப்பவர்கள். முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள் தொடர்பில் மாத்திரம் நான் பாராளுமன்றத்தில் உரையாற்றுவதில்லை. பொதுவாக நாட்டு மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலேயே பாராளுமன்றத்தில் உரையாற்றுகிறேன்.

தென்னாப்பிரிக்காவுக்கு உல்லாச பயணம் மேற்கொண்டதாக நீங்கள் குறிப்பிடுவதை வன்மையாகக் கண்டிக்கிறேன். மூன்று நாள் பணயத்தில் 20 இற்கும் மேற்பட்ட சந்திப்புக்களை நாம் நடத்தினோம். நீண்டகால பிரச்சினைகளுக்கு தீர்வு காணவே நாம் முயற்சிக்கின்றோம்.

நீங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முன்வைப்பதில்லை. பிரச்சினைகளை தீவிரப்படுத்துகிறீர்கள். கடந்த காலங்களில் ராஜபக்ஷக்களுடன் இணைந்து செயற்பட்டீர்கள்.அதன் போது தோல்வியடைந்தீர்கள்.

தற்போது மக்களால் நீங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளீர்கள். ஒரு இனத்துக்காகவே தற்போது நீங்கள் செயற்படுகின்றீர்கள் என்றும் அமைச்சர் அவரை சாடினார்.

தனியார் காணியில் புதையல் தோண்டிய நால்வர் கைது

அநுராதபுரம் தினகரன், அநுராதபுரம் மாவட்ட குறூப் நிருபர்கள்

கெக்கிராவ இலுக்கேகம பகுதியிலுள்ள தனியாருக்கு சொந்தமான இடமொன்றில் புதையல் தோண்டிக் கொண்டிருந்த சந்தேக நபர்கள் நான்கு பேரை கெக்கிராவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய கடந்த 24 ஆம் திகதி இரவு கெக்கிராவ பொலிஸ் பிரிவிலுள்ள இலுக்கேகம பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது புதையல் தோண்டிக்கொண்டிருந்த சந்தேக நபர்கள் நான்கு பேரை கைது செய்துள்ளதுடன் புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்கள் மற்றும் பூஜைப் பொருட்களை கெக்கிராவ பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 19,24,42,45 வயதுடையவர்களாவர்.

கொழும்பு – 14, கலைமகள் வித்தியாலயத்தில் 306B2 லயன்ஸ் கழகங்களான Colombo Circle மற்றும் Colombo Ocean City ஆகியவற்றின் நிதி உதவியினால் நிர்மாணிக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதி தொகுதிக்கான கட்டட திறப்பு விழா திங்கட்கிழமை (24) நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரமுகர்கள் பலர் பங்கேற்றுள்ளதை படத்தில் காணலாம்.

கிழக்கு மாகாணத்தில்; தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஹர்த்தால் பாரிய தோல்வி

ஐக்கிய காங்கிரஸ் கட்சி தெரிவிப்பு

தமிழ், முஸ்லிம் கட்சிகள் இணைந்து அழைப்பு விடுத்த நேற்றைய ஹர்த்தால் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் பாரிய தோல்வியை கண்டுள்ளது என ஐக்கிய காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

இது பற்றி ஐக்கிய காங்கிரஸ் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

நேற்று வடக்கு கிழக்கில் ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி ஏழு தமிழ் கட்சிகள் கோரிக்கை விடுத்திருந்தன. இந்த ஹர்த்தாலுக்கு ரவூப் ஹக்கீமின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிசாத் பதியுதீனின் மக்கள் காங்கிரஸ், மனோ கணேசன் போன்றோர் ஆதரவு தெரிவித்திருந்தனர். ஆனாலும் இந்த ஹர்த்தால் தேவையற்றது என்றும் இது மக்களை ஏமாற்றி தங்கள் சொகுசு வாழ்க்கையை பலப்படுத்த முயலும் சுயநல கட்சிகளின் கோரிக்கை என்றும், கிழக்கில் அபகரிக்கப்பட்டுள்ள முஸ்லிம்களின் காணிகளை விடுவிக்காதவரை ஹர்த்தாலுக்கு ஒத்துழைக்க முடியாது என்றும் ஐக்கிய காங்கிரஸ் கட்சி மட்டுமே கூறியது.

தமிழ், முஸ்லிம் கட்சிகளின் கோரிக்கையை அம்பாறை மாவட்ட தமிழ் பேசும் மக்கள் குப்பையில் தூக்கி போட்டுள்ளனர். கல்முனை பஸார், கல்முனை சந்தை உட்பட பாண்டிருப்பு மற்றும் கல்முனை தமிழ் பகுதி, காரைதீவு என பல இடங்களிலும் வழமை போல் கடைகள் திறக்கப்பட்டு இயங்கியதை காண்கிறோம்.

இதன் மூலம் தமிழ், முஸ்லிம் கட்சிகள் தம்மை ஏமாற்றி அவர்கள் சொகுசு வாழ்விலும் சொகுசு பயணங்களிலும் ஈடுபடுவதற்காகவே இவ்வாறு மக்களை உசுப்பேற்றுகிறார்கள் என்பதை கிழக்கு மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

எம்பீக்கள் தமது சம்பளங்களை குறைவின்றி பெற வேண்டும், ஹர்த்தால் செய்து பொது மக்கள் மட்டும் பட்டிணி கிடக்க வேண்டுமா என மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

தமிழ் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் இவ்வாறு மக்களை உசுப்பேற்றுவதில்தான் ஒற்றுமைப் படுகின்றார்களே தவிர, முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஒருபோதும் ஒற்றுமைப்படுவதில்லை.

காரணம் மக்களை முட்டாளாக்கி தத்தம் வாக்குகளை காப்பாற்றவே நினைக்கின்றனர்.

தமிழ் பேசும் மக்கள் ஹர்த்தாலை நிராகரித்ததன் மூலம் இந்த எண்ணங்கள் கொண்ட இவர்கள் முகங்களில் உமிழ்ந்துள்ளனர் என்பதே உண்மையாகும்.

உடப்பு தமிழ் கிராமத்தில் தொன்று தொட்டு நடைபெற்று வரும் பாரம்பரிய நிகழ்வான சித்திரைச் செவ்வாய் முளைக்கொட்டு புதன்கிழமை (26) ஆலய முன்றலில் இடம்பெற்றது. இதன் போது சிறுவர், பெண்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு, வர்ண வர்ண புடவை அணிந்து வரிசைக்கிரமமாக முளைக் கொட்டிய போது பிடிக்கப்பட்ட படம். (படம்: உடப்பு குறூப் நிருபர்)

ஜம்இய்யத்துல் உலமா கிண்ணியா கிளை ஏற்பாட்டில் நல்லிணக்க ஒன்றுகூடல்

கிண்ணியா தினகரன் நிருபர்

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கிண்ணியா கிளையின் ஏற்பாட்டிலான நல்லிணக்க ஒன்றுகூடலும் விருந்துபசாரமும் பெருநாள் தினத்தன்று சனிக்கிழமை (22) கிண்ணியா கிளையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிளையின் தலைவர் கலாநிதி அஷ்ஷெய்ஹ் ஏ.ஆர். நஸார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள் ராஜ், கிண்ணியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பெர்னாண்டோ, சீனக்குடா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹெட்டியாராச்சி ஆகியோரோடு சர்வமதத் தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள், பாதுகாப்பு உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

புனித ரமழான் விடுமுறையின் பின் ஆரம்பமான புதிய கல்வியாண்டில் மாணவர்களை சேர்க்கும் நிகழ்வுகள் பல பாடசாலைகளிலும் நடைபெற்று வருகின்றன. சீனன்கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை விடுமுறையின் பின் கடந்த திங்கட் கிழமை ஆரம்பமானபோது மாணவர்கள் மகிழ்ச்சியுடன் வருகை தந்து கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததை படங்களில் காணலாம்.

அல் ஹுமைஸராவின் அஹதிய்யா பாடசாலையில் விசேட நிகழ்வு

பேருவளை, சீனன்கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் இயங்கும் அஹதிய்யாப் பாடசாலையின் ரமழான் விஷேட நிகழ்வுகள் அதன் அதிபர் அஷ்ஷெய்க் ஸப்வான் ஆரிப் (நளீமி) தலைமையில் நடைபெற்றன.

களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளனத்தின் வழிகாட்டலுடனும், அஹதிய்யா நிறுவாகத்தின் பூரண அனுசரணையுடனும் நான்கு வாரங்களாக நடைபெற்ற இத்தொடர் நிகழ்ச்சிகளில் மாணவர்களுக்கான ஹிஸ்ப் மன்றம், ரமழான் விஷேட வழிகாட்டல்கள், இனநல்லிணக்க சந்திப்பு மற்றும் இப்தார் ஒன்றுகூடல் என்பன ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. அத்தோடு, பெற்றோருக்கான விஷேட உளவள ஆலோசனை வழிகாட்டல் நிகழ்ச்சியும் உளவியல் வைத்தியர் கலாநிதி லுக்மானுல் ஹகீமினால் நடத்தப்பட்டது.

நிகழ்ச்சிகளின் இறுதியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. அத்தோடு, இதற்காக உழைத்த அஹதிய்யா நிர்வாகத் தலைவர் நைஸர் ஆசிரியர் உட்பட ஏனைய அங்கத்தவர்களும், ஆசிரியர்களும் நிகழ்வின் இறுதியில் நன்றியோடு நினைவுகூரப்பட்டனர்.

2009ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அல்ஹுமைஸரா அஹதிய்யா பாடசாலை கடந்த 14 வருடங்களாக ஆண் மாணவர்களை மாத்திரம் உள்ளடக்கியதாக வெற்றிகரமாக செயற்பட்டு வருவதோடு, சீனன்கோட்டையின் இளம் சந்ததியினருக்கு மத்தியில் இஸ்லாமிய விழுமியங்களை வளர்ப்பதிலும், பாதுகாப்பதிலும் தொடர்ந்தும் பங்காற்றி வருகின்றது. மேலும், அதன் வரலாற்றில் முதன் முறையாக இம்முறை ரமழான் விஷேட நிகழ்ச்சித் திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஏப்ரல் 27 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்

சுபஹ்	04.41
லுஹர்	12.10
அஸர்	03.23
மஃரிப்	06.19
இஷா	07.30

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் சித்திரை 14

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

கொழும்பில் வாகன நெரிசலைக் குறைக்க 04 அடுக்கு மாடி வாகன தரிப்பிட கட்டடங்கள்

கொழும்பு 02 இல் முதலாவது 08 மாடி கட்டடம் அமைச்சர் பிரசன்னவால் திறப்பு

தினமும் கொழும்பு நகர் மற்றும் புறநகர் பகுதிகளுக்கு வரும் வாகனங்களால் ஏற்படும் நெரிசலை குறைக்கும் நோக்கில் கொழும்பில் 4 அடுக்கு மாடி வாகன தரிப்பிடக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரையின் பிரகாரம், நகர அபிவிருத்தி அதிகாரசபை அரச மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்புடன் இந்த வாகன தரிப்பிடங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.

இவற்றில் இரண்டு வாகன நிறுத்துமிடங்கள், நகர அபிவிருத்தி அதிகார சபையினாலும் மற்றைய இரண்டு வாகன நிறுத்துமிடங்கள் தனியார் நிறுவனத்தினாலும் நிர்மாணிக்கப்படுகின்றன.

கொழும்பு டெலிகொம் நிறுவனத்துக்கு முன்பாக, நாரஹேன்பிட்டி பழைய மீன் சந்தை பகுதிகளில் இந்த வாகன நிறுத்துமிட கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன.

அவற்றில் தனியார் துறையினரின் பங்களிப்பின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கொழும்பு 02, யூனியன் பிளேஸ் பொது வாகன தரிப்பிடம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்

06

தெற்குக்கு வழங்கப்படும் அனைத்து வசதிகளும் வடக்கு, கிழக்குக்கும்

அரசாங்கத்தின் கொள்கை அதுவே என்கிறார் அமைச்சர் பந்துல

லோரன்ஸ் செல்வநாயகம்

தெற்குக்கு வழங்கப்படும் அனைத்து வசதிகள் மற்றும் சலுகைகளை வடக்கு, கிழக்குக்கும் அதேபோன்று பெற்றுக்கொடுப்பதே அரசாங்கத்தின் கொள்கை என, போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த வகையில், தெற்குக்கு வழங்கப்படும் வசதிகள் மற்றும் சலுகைகளில் எந்தவித குறையுமின்றி அவ்வாறே வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும் அவற்றை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் இம்ரான் மஹ்ரூப் எம்.பி. எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ரயில்வே துறையில் காணப்படும் காணிகளை தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு விசேட அபிவிருத்தி திட்டங்களுக்காக வழங்கி, அதன் மூலம் ரயில்வே திணைக்களத்தின் வருமானத்தை அதிகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வரைக்குமான ரயில் பாதைகள் அநுராதபுரம் முதல் முழுமையாக மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. 1,500 கோடி ரூபாவில் அந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு பிரதேசத்தில் உள்ள பொருட்களை திருகோணமலைக்கு கொண்டு வருவதற்காக பிரீமா நிறுவனத்தின் தனியான வேலைத்திட்டம் ஒன்று உள்ளது. அத்திட்டத்தின் மூலம் கோதுமை மா மாத்திரமே கொண்டு செல்லப்படுகின்றது. ஏனைய பொருட்களையும் கொண்டு செல்வதற்காகவும் அதனைப் பயன்படுத்த முடியும் என நான் நினைக்கின்றேன்.

அதேபோன்று, மலைநாட்டு பிரதேசங்களில் உள்ள மரக்கறிகளை கொழும்புக்கு கொண்டு வருவதற்காக புதிய ரயில் பெட்டியை ஏற்படுத்தி, குளிரூட்டிகளையும் அதற்கு உள்வாங்கும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம்.

அதற்கிணங்க, பொருட்கள் போக்குவரத்து வேலைத்திட்டத்தை தனியார் துறையினருடன் இணைந்து எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

ரயில்வே துறையில் பாரிய அளவில் சொத்துகள்

06

தினகரன் பத்திரிகையை வெளியிடும் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் முஸ்லிம் மஜ்லிஸின் இப்தார் நிகழ்வை சிறப்பிக்கும் முகமாக லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவரும் முகாமைத்துவ பணிப்பாளருமான அனுஷ பெல்பிட்டவுக்கு குர்ஆன் பிரதியொன்றை மஜ்லிஸின் பொருளாளர் எம்.என்.ரிஸ்வான் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

உலக நாடுகளின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட இலங்கை

உணவுப் பொருட்களின் விலை யேற்றம் அதிகமுள்ள 10 உலக நாடுகளின் பட்டியலிலிருந்து உலக வங்கி இலங்கையை நீக்கியுள்ளது.

உலக வங்கியால் தொகுக்கப்பட்ட பட்டியலில் பல வாரங்களாக தொடர்ந்து இடம்பெற்று வந்த இலங்கை, புதிய தரவில் நீக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் உணவுப் பாதுகாப்பு மற்றும் பணவீக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

இதன் காரணமாக அதிக உணவுப் பணவீக்கமுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை உள்ளடக்கப்படவில்லையென, உலக வங்கி

06

மாணவர்களுக்கான மதிய உணவுத் திட்டத்தில் சில குறைகள்

விரைவில் நிவர்த்தி செய்யப்படும் என கல்வியமைச்சர் உறுதி

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் நிலவிய நிதி நெருக்கடி காரணமாக பின்தங்கிய பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் செயற்றிட்டத்தில் சிறு பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன், விரைவில் அது நிவர்த்தி செய்யப்படும் என, கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக உணவு விநியோகிப்போருக்கு நிதி வழங்குவது தாமதமாகியுள்ளதாக தெரிவித்த அமைச்சர், கடந்த ஜனவரி மாதத்தில் 9 மாகாணங்களுக்கும் 787.4 மில்லியன் ரூபாவும் பெப்ரவரி மாதத்தில் 61.6 மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மாகாண கல்வித் திணைக்களங்களின் அறிவுறுத்தலுக்கமைய மார்ச் மாதம் 8075.5 மில்லியன் ரூபா அவசியம் என மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை சபையில் சுட்டிக்காட்டிய அமைச்சர், உணவு விநியோகஸ்தர்களுக்கான மார்ச் மாத நிலுவையை எதிர்வரும் மாதத்துக்குள் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். அத்துடன், பாடசாலை மாணவர்களுக்கு

06

வவுனிக்குளத்தில் நீராடிய இருவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வவுனிக்குளத்தில் நீராடுவதற்குச் சென்ற இருவர் நேற்று புதன்கிழமை (26) பகல் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இந்தக் குளத்தில் நீராடிய ஒருவர் நீரில் மூழ்கிய போது, அவரை காப்பாற்றுவதற்காகச் சென்ற மற்றையவரும் நீரில் மூழ்கியுள்ளார். இந்நிலையில், உயிரிழந்த இவர்கள் இருவரின் சடலங்களும் மல்லாவி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நகரிலிருந்து மரண வீடொன்றுக்கு செவ்வதற்காக முல்லைத்தீவுக்கு வந்துள்ளார்களென பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

தேசிய கடன் மறுசீரமைப்பின் போது

EPF, ETF என்பவற்றுக்கு ஏதாவது பாதிப்பு வருமா?

சபையில் அரசிடம் சஜித் நேற்று கேள்வி

லோரன்ஸ் செல்வநாயகம்

தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளில் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றுக்கு பாதிப்பு ஏற்படாதென்பதனை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டுமென, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாதிப்பு ஏற்படாது என்பதை அரசாங்கத்தினால் உறுதிப்படுத்த முடியுமா? என்றும், அவர் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று 27/2 இன் கீழ் எழுப்பிய கேள்விகளின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையில்

06

ஒரு கிலோ கஞ்சா கடத்தல் சிங்கப்பூரில் தமிழருக்கு தூக்கு

மறுபரிசீலனை செய்யக் கோரிய கோரிக்கைகள் நிராகரிப்பு

ஒரு கிலோ கஞ்சா போதைப்பொருளை கடத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட சிங்கப்பூர் பிரஜையான தங்கராஜு சுப்பையா என்பவருக்கு சிங்கப்பூரில் நேற்று மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

தூக்கு தண்டனையை அவசரமாக மறுபரிசீலனை செய்யுமாறு சிங்கப்பூருக்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அலுவலகம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

சமூக ஆர்வலர்கள், சிங்கப்பூர் ஜனாதிபதி ஹலிமா யாக்கூப்பிடம் அவகாசம் கோரினர், அதே நேரத்தில் பிரிட்டன் ஆர்வலர் கோடீஸ்வரர் சேர் ரிச்சர்ட் பிரான்சன், வழக்கு மறு ஆய்வுக்கு அழைப்பு விடுப்பவர்களுடன் தனது குரலைச் சேர்த்தார்.

எவ்வாறாயினும், சிங்கப்பூரைச் சேர்ந்த 46 வயதான தங்கராஜூ சுப்பையாவுக்கு சாங்கி சிறை வளாகத்தில்நேற்று (26) மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது என்று, சிங்கப்பூர் சிறைச்சாலை சேவையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

06

பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரி தொடர்பிலான விமலின் கருத்து அடிப்படையற்றது

பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரி மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவால் தெரிவிக்கப்பட்ட கருத்து அடிப்படையற்றது என பாதுகாப்பு அமைச்சால் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

தென் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் நட்பு நாடுகளுக்கிடையே ஏற்பாடு செய்யப்பட்ட பாதுகாப்பு மாநாடான கொழும்பு பாதுகாப்பு மாநாட்டின் துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நிலை கூட்டம் 2022 ஜூலை 07ஆம் திகதி இந்தியாவில் நடைபெற்றது.

அப்போதைய ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் வழிகாட்டுதல் மற்றும் அனுமதியின் கீழ் இலங்கை பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி (CDS) மற்றும் முன்னாள் இராணுவத் தளபதியான ஜெனரல் ஷவேந்திர சில்வா இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அக்கூட்டத்தில் பங்கேற்றார் என்பதை பாதுகாப்பு அமைச்சு வலியுறுத்துகிறது.

ஆனால் தனியார் தொலைக்காட்சியில் நேற்று இடம்பெற்ற 'பத்தரே விஸ்தரே' பத்திரிகை

06

இலங்கை வரும் இந்தியர்களின் பரிவர்த்தனைக்கு சலுகை;

இந்திய சுற்றுலா பயணிகள் இனி இந்திய ரூபாவை பயன்படுத்தலாம்

இலங்கை மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் தெரிவிப்பு

இலங்கைக்கு வரும் இந்திய சுற்றுலாப் பயணிகள் உள்ளூர் பரிவர்த்தனைகளுக்கு இந்திய ரூபாயை பயன்படுத்த முடியுமென, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய வர்த்தக மற்றும் தொழில் துறை கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த இணைய நிகழ்வு ஒன்றில் கருத்து தெரிவித்த அவர், நியமிக்கப்பட்ட நாணயமாக இந்திய ரூபாயை உருவாக்குவது, இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக தீர்வுக்கு உதவுவது மட்டுமல்லாமல், இலங்கைக்கு வரும் இந்திய சுற்றுலாப் பயணிகளின் பரிவர்த்தனைகளுக்கும் பயன்படுமென்றும் தெரிவித்தார்.

நுவரெலியா, சீதையம்மன் ஆலயம் தொடர்பான சிறப்பு தபால் உறையை பிரதமர் தினேஷ் குணவர்தன வெளியிட்டு வைத்து ஓரிரு நாட்கள் கடந்துள்ள சந்தர்ப்பத்திலேயே, இலங்கை மத்திய வங்கி ஆளுநரின் கருத்து இவ்வாறு வெளியாகியுள்ளது.

இதேவேளை, 'இலங்கையின் பொருளாதார சூழ்நிலையின்

06

பக்தர்கள் சென்ற பஸ்ஸை வழிமறித்து தாக்கிய யானை

உணவுப்பொருட்களை அபகரித்து அட்டகாசம்

ரத்கம, சித்துல்பவ்வ ஆலய வழிபாட்டுக்குச் சென்ற பஸ் ஒன்றின் மீது காட்டு யானை தாக்குதல் நடத்தியதுடன், பஸ்ஸில் பயணித்தவர்களின் உணவுப் பொருட்களையும் அபகரித்துச்சென்ற சம்பவம் பதிவாகியுள்ளது.

யானையின் தாக்குதலால் பஸ்ஸிலிருந்த 30 அடியார்களுள்

06

லண்டனிலிருந்து இலங்கைக்கு மருத்துவ உபகரணங்கள்

என்.எம். அமீன் – சாகிர் நவாஸ் சந்திப்பில் இணக்கம்

லண்டனுக்கு விஜயம் செய்துள்ள முஸ்லிம் கவுன்சில் ஓப் சிறிலங்காவின் தலைவர் என்.எம்.அமீன், லண்டனில் இயங்கும் இலங்கை முஸ்லிம் இயக்கங்களின் கூட்டமைப்பின்தலைவர் (கொஸ்மோஸ்) சாகிர் நவாஸ் மற்றும் அதன் செயலாளர் சிபான் நயீம் ஆகியோரைச் சந்தித்து இரு அமைப்புகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகளைப் பேணுவது பற்றி உரையாடினார்.

இலங்கையிலுள்ள வைத்திய சாலைகளுக்கு சில்வியா லங்கா பவுன்டேசனூடாக கொஸ்மோஸ் ஆதரவுடன் பகிர்ந்தளிக்கும் வைத்தியசாலை உபகரணங்கள் திட்டம் பற்றி இரு தரப்பினரும் கலந்துரையாடினர்.

100 மில்லியன் பவுண் பெறுமதிமிகு 100 கொள்கலன் வைத்திய உபகரணங்களை இலங்கைக்கு அனுப்பி வைக்க முடியுமென, கொஸ்மோஸ் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ஒரு கொள்கலனை தருவிப்பதற்கு 3,000 பவுண் மட்டுமே செலவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சமூக விவகாரங்களில் இரு அமைப்புகளும் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பாக இரு தரப்பினரும் விரிவாகக் கலந்துரையாடுவதற்கு இணக்கம் காணப்பட்டதாக, முஸ்லிம் கவுன்சில் அறிக்கை தெரிவித்தது.

நாணய மாற்று

நாணயம்	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	206.30	219.03
கனடியன் டொலர்	228.52	242.56
யூரோ	343.37	362.22
ஜப்பான் யென்	2.3420	2.4688
சிங்கப்பூர் டொலர்	233.49	246.88
ஸ்டேலிங் பவுன்ஸ்	388.64	409.24
சுவிஸ் பிராங்க்	349.42	371.48
அமெரிக்க டொலர்	313.45	328.67

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	853.41	கட்டார் ரியால்	88.05
குவைத் டினார்	1,050.55	சவூதி ரியால்	85.78
ஓமான் ரியால்	835.69	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	87.61

தினகரன்
THINAKARAN
கிகைரன்
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சோபகிருது வருடம் சித்திரை மாதம் 14ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷவ்வால் பிறை 06

குறள் தரும் சிந்தனை

கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு ஆற்றாதார் இன்னா செயல்

எந்தத் துன்பத்தையும் தாங்கக் கூடிய ஆற்றல் படைத்தவர்களுடன், சிறு துன்பத்தையும் தாங்க முடியாதவர்கள் மோதினால் அவர்களே தங்களின் முடிவுகாலத்தைக் கையசைத்துக் கூப்பிடுகிறார்கள் என்றுதான் பொருள்.

இலங்கையில் மலேரியா மீண்டும் தலைதூக்குமா?

மலேரியா நோய்க்கு உள்ளான ஒருவர் இலங்கையில் உயிரிழந்துள்ளார். பேருவளை, சீனன்கொட்டை பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார். மலேரியா நோயினால் பல வருடங்களுக்குப் பின்னர் ஒருவர் உயிரிழந்திருப்பது பலரதும் அவதானத்தைப் பெற்றுள்ளன.

மாணிக்கக்கல் வர்த்தக்கத்தின் நிமித்தம் தன்சானியா நாட்டுக்குச் சென்று திரும்பியவர் காய்ச்சலுக்கு உள்ளாகி 04 நாட்கள் வீட்டில் இருந்த பின்னர் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து அந்நபர் மரணமடைந்துள்ளார். அவரது மரணத்திற்கு மலேரியா நோய் காரணமென ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

2016 ஆம் ஆண்டில் 'மலேரியா அற்ற நாடு' என்ற சான்றிதழை உலக சுகாதார ஸ்தாபனம் இலங்கைக்கு வழங்கியுள்ளது. இச்சான்றிதழ் எடுத்த எடுப்பில் வழங்கப்பட்ட ஒன்றில்லை. மாறாக 2012 முதல் மூன்றாண்டுகள் பரீட்சிக்கப்பட்ட பின்னரே இச்சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்நாட்டில் 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தான் உள்நாட்டு மலேரியா நோய்க்கு உள்ளான நபர் இந்நாட்டில் இறுதியாகப் பதிவானார். அதன் பின்னர் எவரும் உள்நாட்டில் மலேரியாவுக்கு உள்ளாகவில்லை.

இந்நோய் இப்பிராந்திய நாடுகளிலோ உலகிலோ முற்றாகக் கட்டுப்படுத்தப்படவில்லை. அதனால் மலேரியா அற்ற நாடு என்ற சான்றிதழைப் பெற்றுக் கொண்டாலும், இந்நோய் குறித்து விழிப்புணர்வுடன் இருக்க வேண்டிய அவசியம் நீடித்தே வந்தது. அது தொடர்பில் மருத்துவ நிபுணர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மலேரியா நோயின் மூலகாரணியாக நுளம்புகளால் காவிப்பரப்படும் நுண்ணங்கியான பிளஸ்மோடியம் விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில் இலங்கையில் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ள மலேரியா ஆயிரக்கணக்கானோரின் உயிர்களைக் காவு கொண்டுள்ளது. குறிப்பாக 1934_35 களில் 85 ஆயிரம் பேரின் மரணத்திற்கு காரணமாக அமைந்த இந்நுளம்பு நோய் இந்நாட்டில் கறைபடிந்த வரலாற்றைப் பெற்றுக் கொண்டுள்ளது.

சுகாதாரத் துறையினரின் அர்ப்பணிப்புமிக்க தொடர் நடவடிக்கைகளின் பயனாக 2009 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டில் மலேரியா நோய்க்கு உள்ளாவோரின் எண்ணிக்கையில் பெருவீழ்ச்சி ஏற்பட்டது. அக்காலப்பகுதியில் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் ஓரிரு பிரதேசங்களில் மாத்திரம் இந்நோய்க்கு சிலர் உள்ளாகினர். இந்த நிலையில் 2012 முதல் மூன்று வருட காலம் மலேரியா நோயின் பதிவு குறித்து கண்காணித்த பின்னரே உலக சுகாதார ஸ்தானம் இச்சான்றிதழை வழங்கியது.

தென்னாசியப் பிராந்தியத்தில் இச்சான்றிதழைப் பெற்றுக்கொண்ட முதல் நாடாக இலங்கை விளங்குகிறது. இந்நோய் குறித்து விழிப்புணர்வுடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டிய அவசியம் அன்றே வலியுறுத்தப்பட்டது. ஆனபோதிலும் மக்கள் இது தொடர்பில் போதியளவில் கவனம் செலுத்தத் தவறினர். கவனயீனமும் அசிரத்தையும் மக்கள் மத்தியில் அதிகரித்தன. இதன் விளைவாக மலேரியாவுக்கு உள்ளாவோர் பதிலாகும் நிலைமை நாட்டில் மீண்டும் ஏற்பட்டது.

அந்த வகையில் 2019 இல் 53 பேரும், 2020 இல் 30 பேரும் 2021 இல் 26 பேரும் என்றபடி இந்நோய்க்கு உள்ளானவர்கள் பதிவாகியுள்ளனர். இவ்வருடத்தின் ஜனவரி முதல் இற்றைவரை 10 பேர் இந்நோய்ககு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பகுதியினர் கொழும்பு, கம்பஹா மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்று இலங்கை சமூக மருத்துவ நிபுணர்கள் சங்கமும் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி இலங்கையில் மலேரியா மீண்டும் தலைதூக்கி வருவதாகவே தெரிகிறது. மக்களின் அசிரத்தை மற்றும் கவனயீனத்தின் வெளிப்பாடே இது. ஆனால் நுளம்புகளால் காவிப் பரப்பப்படும் இந்நோய்க்கு உள்ளாவதை முழுமையாகத் தவிர்த்து க்கொள்ளவும் முடியும். அதேபோன்று இந்நோய்க்கு உள்ளானால் முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ளவும் முடியும். அதற்கான சிகிச்சை முறைகளும் புழக்கத்தில் உள்ளன. ஆனால் நோய் குறித்த கனயீனமும் அசிரத்தையும்தான் உயிராபத்துக்கு வித்திடக்கூடியனவாக உள்ளன. அதனால் மலேரியா மீண்டும் தலைதூக்கிவிடுமோ என்ற அச்சமும் உள்ளது.

ஆகவே இந்நோய் குறித்து விழிப்புணர்வோடும் முன்னெச்சரிக்கையோடும் செயற்படுவது அவசியம். இது ஒவ்வொரு குடிமகனினதும் பொறுப்பாகும். அதன் ஊடாக மலேரியா அற்ற நாடு என்ற சான்றிதழின் அர்த்தபூர்வத்தன்மையைத் தொடர்ந்தும் பேணிக் கொள்ளக்கூடியதாக இருக்கும். அதுவே இன்றைய அவசியத் தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

லேக்ஹவுஸ் ஊழியர்களின் நன்மதிப்பை பெற்று விளங்கியவர் அமரர் பொன்னுசாமி கந்தப்பர்

தினகரன் முன்னாள் தலைமை ஒப்புநோக்கரின் மறைவுக்கு பலரும் அனுதாபம்

தினகரன் பத்திரிகையில் அக்காலத்தில் தலைமை ஒப்புநோக்குநராகக் (Head proof reader) திறமையாகப் பணியாற்றியவர் அமரர் பொன்னுசாமி கந்தப்பர் ஆவார். கந்தப்பர் அவர்கள் தனது 90 ஆவது வயதில் கடந்த 2023. 04. 23 ஆம் திகதி ஞாயிறன்று அன்னாரது கொழும்பு இல்லத்தில் காலமானார்.

முதுமை காரணமாக வெகுகாலமாக சுகவீனமுற்ற நிலையில் அவர் வீட்டில் தங்கியிருந்தார். வயது முதுமையினால் உண்டான வியாதிகளால் அவர் இயற்கை எய்தினார். லேக் ஹவுஸ் நிறுவனத்தின் ஊழியர் குழாமில் மிகவும் சிரேஷ்ட பிரஜையாக அவர் விளங்கினார். தனது இறுதிக்காலம் வரை அவர் தினகரனை மிகவும் நேசித்து வந்தார்.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 1933.02.15 ஆம் திகதி அமரர்களான பொன்னுசாமி வள்ளிப்பிள்ளை தம் பதிக்கு கனிஷ்ட புதல்வராகப் பிறந்த அவர் யாழ் கந்தர்மடம் திருமதி மகேஸ் வரியைத் திருமணம் செய்து கொண்டார்.

இரண்டு பெண் பிள்ளைகளுக்கும், ஓர் ஆண் மகனுக்கும் தந்தையான அவர், ஆரம்பத்தில் கொழும்பு கொட்டாஞ்சேனையில் வாழ்ந்தார். அதன் பின்னர் தனது புதல்வியின் வீட்டில் வெள்ளவத்தையில் வசித்து வந்தார்.

தனது கடமையை மிகவும் நேர்த்தியான முறையில்அவர் ஆற்றி வந்தார். ஒப்புநோக்குநர் பிரிவை அவர் திறமையாக வழிநடத்தினார். தனது பணிகளுக்காக அவர் பாராட்டப்பட்டார். அனைவருடனும் மென்மை ததும்பிய முறையில் கனிவாகப் பழகுவார். பண்பும் பாசமும் ஒருங்கமையப் பெற்றவர் அமரர் கந்தப்பர். அதனால் அவருக்கு எதிரிகளே இருந்ததில்லை.

இன,மத, பேதம் கடந்து தனக்குக் கீழ் பணி புரிபவர்களை சமமாக மதித்து அவரவர் மதங்களுக்கு மரியாதையும், மதிப்பும் கொடுத்து வந்தவர். தனது சுவாரஸ்யமான பேச்சின் மூலம் எல்லோர் மனங்களிலும் பிரகாசித்தவர்.

தினகரன் பத்திரிகையின் ஊழியர் குழாம் மத்தியில் மதிப்புக்குரியவராக விளங்கினார். மூவின மக்களின் நன்மதிப்பையும் அவர் பெற்றிருந்தார். அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தவென திரண்டு வந்த மக்கள் கூட்டமே அதற்குச் சான்றாகும்.

காலஞ்சென்ற டொக்டர் திருமதி வாசுகி, வெள்ளவத்தை இராமகிருஷ்ண வித்தியாலய ஆசிரியை திருமதி தேவகி, ஈசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையான அமரர் கந்தப்பர் அவர்களின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக நேற்று புதன்கிழமை காலை 8.30 மணி முதல் இல. 591, காலி வீதி, கல்கிசையில் அமைந்துள்ள மஹிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நண்பகல் 12.00 மணிக்கு கிரியைகள் இடம்பெற்ற பின்னர் பிற்பகல் 1.30 மணிக்கு கல்கிசை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக்கிரியைகள் நடைபெற்றன.

ஐ.எல்.எம். தாஹிர்...✍

பாலமுனையில் மாணவர்கள், உலமாக்கள் கௌரவிப்பு நிகழ்வு

பாலமுனை இளைஞர்கள் சபையின் ஏற்பாட்டில் புனித றமழான் மாதத்தை சிறப்பிக்கு முகமாக நடைபெற்ற இஸ்லாமிய வரலாற்றுச் சொற்பொழிவையும், போட்டி நிகழ்வுகளையும் நடத்திய உலமாக்களையும் மாணவர்களையும் கௌரவித்து நினைவுச் சின்னம் வழங்கி வைக்கும் நிகழ்வு பாலமுனை ஜும்ஆப் பெரியபள்ளிவாசலில் அண்மையில் நடைபெற்றது.

பாலமுனை இளைஞர்கள் சபையின் தலைவர் ஆசிரியர் ஏ.எல்.சீத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இஸ்லாமிய வரலாற்றுச் சிறப்பு சொற்பொழிவினை சிறப்பாக நடத்தி நிறைவு செய்த பாலமுனை மஹாஸினுல் உலூம் இஸ்லாமிய கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் ஏ.எல்.ஸாஜித் ஹுஸைன் பாகவி, பாலமுனை ஜம்யத்துல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் ரீ.நிஸ்தார் நஹ்ஜி உட்பட போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களும் இதன் போது பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பாலமுனை இளைஞர்கள் சபையின் ஆலோசர்களான அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சட்டவைத்தியர் எஸ்.எம்.றிபாஸ்தீன், தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் ஏ.எச்.றிபாஸ், பாலமுனை ஜும்ஆ பெரியபள்ளிவாசல் தலைவர் யூ.எல்.அப்துல் லத்திப், இளைஞர்கள் சபையின் பொதுச் செயலாளர்,பொருளாளர்,அமைப்பாளர், உபசெயலாளர், செயற்பாட்டாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

புனித றமழான் மாதத்தில் தராவிஹ் மற்றும் ஏனைய தொழுகையினை விடாது தொடராக பேணிவந்த மாணவன் சலாகுதீன் சம்திக்கு இந்நிகழ்வில் விசேட பரிசு வழங்கப்பட்டது.

ஐ.ஏ.ஸிறாஜ்...✍
(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்களுக்கான செயலமர்வு

அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் பதவி வகித்த பெண் உறுப்பினர்களுக்கான 'வெறுக்கத்தக்க பேச்சை எதிர்கொள்ளவும் இலங்கையின் சமூக ஒற்றுமையை மேம்படுத்தவும் உரையாடல் மூலம் சமூகங்களை ஈடுபடுத்தல்' எனும் தொனிப்பொருளிலான செயலமர்வு அண்மையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலககேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தரும் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளருமான ஷாஹிரா இஸ்மாயில் தலமையில் இந்நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இச்செயலமர்வினை மட்டக்களப்பு மாவட்ட வண்ணத்துப்பூச்சி சமாதான பூங்கா அமைப்பு நடைமுறைப்படுத்தியிருந்ததுடன், நிதி அணுசரனையினை UNDP, NCEASL நிறுவனங்கள் வழங்கியிருந்தன.

நிகழ்வுக்கு வளவாளராக வண்ணத்துப்பூச்சி சமாதான பூங்காவின் திட்ட முகாமையாளர் து.நகுலேஸ்வரன் கலந்து கொண்டிருந்தார். ரீ.ஜெயசுவாணி, வி.பூபாலதேவன் ஆகியோர் உதவியாளர்களாக கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் உண்டான வாழ்வியல் மாற்றங்கள், அதனை எதிர்கொள்ள மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பில் விரிவான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் சமூக வலைத்தளங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் வெறுப்புப் பேச்சுகள், பெண்கள் அரசியலுக்கு வருவதனை தடுக்கும் வகையில் அந்தந்த சமூகங்களுக்குள் தோற்றுவிக்கப்படும் வெறுப்புப் பேச்சுக்களை அடையாளம் காணுதல், அதனை எதிர்கொள்வதற்கான மனத்தைரியத்தை ஏற்படுத்துதல் மற்றும் அதனைக் கட்டுப்படுத்துதல் எவ்வாறு என்பன பற்றி தெளிவினை வளவாளர் து.நகுலேஸ்வரன் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த செயலமர்வில் அட்டாளைச்சேனை, நிந்தவூர், பொத்துவில் மற்றும் கல்முனை, நாவிதன்வெளி, சம்மாந்துறை, இறக்காமம், ஆலையடிவேம்பு பிரதேச சபைகளில் உறுப்பினர்களாக பதவி வகித்த பெண் உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

றிசாத் ஏ. காதர்...✍
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

பிரித்தானியா அறிவொளி வளையம் உடப்புசல்லாவை மாணவருக்கு உதவி

பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வளையத்தின் நிதி அனுசரணையில் ப்ரண்லி சிப் பௌன்டேசன் மற்றும் நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகம் இணைந்து 100 வறிய மாணவர்களுக்கு அத்தியாவசிய கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு உடப்புசல்லாவை முத்து கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக ப்ரண்லி சிப் பௌன்டேசன் அமைப்பின் தலைவர் வினோஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதன் போது மாணவர்களுக்கு புதிய கற்றல் முறைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வும் நடத்தப்பட்டமை சிறப்பம்சமாகும்.

பிளேலோமவுண்ட் தமிழ் வித்தியாலயத்தில் உள்ள 56 மாணவர்களுக்கும், ரப்பானொக் தமிழ் வித்தியாலயத்தில் உள்ள 18 மாணவர்களுக்கும், சூரியகாபத்தன தமிழ் வித்தியாலயத்தில் உள்ள 26 மாணவர்களுக்கும் மொத்தமாக ரூபா 3 இலட்சம் பெறுமதியான (100 மாணவர்கள்) அத்தியாவசிய கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மக்களுக்கு யோகக் கலையின் உண்மைகளை உணர்த்துது சைவ முன்னேற்றச் சங்கத்தின் மற்றுமொரு சேவையாகும். அப்பணியையும் 'அறிவொளி வளையம்' மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அறிவொளி வளையம் இலங்கையில் பல இடங்களில் சேவைகளைச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வினோஜ்குமார்...✍

ஊடகங்களை கவருவதற்காக பாராளுமன்றத்தில் பலர் ஜனரஞ்சகமான பேச்சுகள் பேசுகின்றனர்

பாராளுமன்ற நிருபர் லோரன்ஸ் செல்வநாயகம்

எஸ்.எம்.எம். முஷாரப் எம். பி உரை

'சமூக ஊடகங்களைக் கொண்டு, மக்களை திசைதிருப்பும் போலித்தனத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்'

'ஊடகங்களைக் கவர வேண்டும் என்பதற்காக பாராளுமன்றத்தில் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனரஞ்சகமான பேச்சுகளைப் பேசுகின்றனர்' என்று நேற்றுமுன்தினம் (25.04.2023) சபையில் உரையாற்றிய எஸ்.எம்.எம். முஷாரப் எம். பி தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது:

"மாகாண சபைகள் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து அப்போதைய அரசு அதனை நிறைவேற்ற முற்பட்டபோது பலரும் கடுமையாக எதிர்த்தார்கள். ஆனால் அந்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற பெரும் அழுத்தம் கொடுத்து இன்று மாகாண சபை தேர்தல் இடம்பெறாமல் இருப்பதற்கு சுமந்திரன் எம்.பியே முதற்காரணமாகும்.

1983 ஆம் ஆண்டு பிறந்த நான் 2020 ஆம் ஆண்டு இந்தப் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டு முதன் முதலில் உரையாற்றினேன். சிரேஷ்ட அமைச்சர்கள், எம்.பிக்கள், கட்சியின் தலைவர்கள் தொடர்பில் காத்திரமான பார்வையும், எண்ணமும் இருந்தன. அவர்கள் நாட்டை வளப்படுத்தும் திறமை கொண்டவர்கள், கனதியானவர்கள், நாட்டுக்கு நன்மை பயக்கக் கூடியவர்கள், நாட்டுக்கு நல்ல சட்டதிட்டங்களை ஆக்குபவர்கள், பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்தக்கூடியவர்கள் என்ற பலமான நம்பிக்கை எனக்குள் இருந்தது.

இங்கு முதன் முதலாக பலரின் பேச்சைக் கேட்கின்ற போது. இன ரீதியான, மத ரீதியான மோதல்கள், ஒருவொருக்கொருவர் இருக்கின்ற ஈகோ மோதல்களைக் கேட்கக் கூடியதாக இருந்தது. 1948 இல் சுதந்திரம் அடைந்து இன்று 2023 வரைக்கும் சுமார் 75 வருடத்தைக் கடந்துவிட்ட போதும்கூட எமது நாடு மிகப்பெரும் பொருளாதார சிக்கலில் திவாலான ஒரு மோசமான நிலைக்குச் சென்றிருக்கிறது என்றால் அந்த அரசாங்கம், இந்த அரசாங்கம் காரணம் என்பதைத் தாண்டி என்னால் புரிந்து கொள்ளக்கூடிய விடயம் என்னவென்றால் இந்தப் பாராளுமன்றத்திற்குள்ளே இருப்பவர்களுக்கிடையிலே ஒரு கலந்துரையாடல் இல்லை, ஒரு நம்பிக்கை பிறக்கவில்லை.

சிற்றுண்டிச்சாலையில் ஒருவருக்கொருவர் நலம் விசாரிக்கும் மனநிலையைப் போல நாட்டுப் பிரச்சினையை, சமூகப் பிரச்சினையை ஒரு மேசையில் உட்கார்ந்து கலந்து பேசி ஒரு முடிவினை எட்டலாம் என்ற நம்பிக்கை இதுவரை எமது நாட்டில் பிறக்கவில்லை.

இன்று காலை சுமந்திரன் எம்.பியின் பேச்சைக் கேட்டேன். கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் அடையாளம் என்ற பெயரில் பல அட்டுழியங்கள் நடப்பதாகவும், அரசாங்கம் புனித சிலைகளை உடைப்பதாகவும் இனவாத ரீதியான கருத்துக்களை முன்வைத்தார்.

அதேபோன்று இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் 'நீ ஒரு இனவாதி, நீ ஒரு இனவாதி' என்று மாற்றுக் கருத்து மேலோங்கியதைப் பார்க்கின்றோம். பொத்துவில் முகுது மகா விகாரை, மண்மலை பிரச்சினைக்கு சுமுகமான உரையாடல்கள் மூலம் இணக்கமான தீர்வுகளை அடையலாம் என்ற முயற்சியில் நான் ஈடுபடுகின்றேன்.

நான் ஊடகப்பின்புலத்திலிருந்து வருபவன். எதைப் பேசினால் ஊடகங்களை கவரும் என்பதற்காக பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனரஞ்சக பேச்சுகளை பாராளுமன்றத்தில் பேசுகின்றனர். ஊடகங்களுக்காக பேச வேண்டும், மக்களுக்காக பேச வேண்டும், தனது பேச்சின் மூலம் ஒரு எழுச்சியை ஏற்படுத்த வேண்டும். அதன்மூலம் தமது வாக்கினை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கமே அல்லாமல், மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு நல்லதொரு நிலையை இந்த நாட்டில் உருவாக்க வேண்டும், தேசமாக நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் இல்லை. இங்கிருக்கும் சிரேஷ்ட அமைச்சர்களாக இருக்கலாம், எம்.பிக்களாக இருக்கலாம், கட்சியின் தலைவர்களாக இருக்கலாம் இவர்கள் பலரின பிரச்சினைகளைப் பார்க்கின்றபோது தேர்தல்மைய அரசியலுக்குரியவர்களாகவே அவர்கள் இருக்கின்றனர். அவர்கள் நாட்டை நேசிக்கின்றவர்களாக எனக்குத் தெரியவில்லை.

கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் இடங்களாக பல இடங்கள் அடையாளம் காணப்படுவது அது அபகரிக்கப்படுவது போன்ற சம்பவங்கள் நடந்தேறுவதை நாம் மறுப்பதற்கில்லை. பொத்துவில் பிரதேசத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினராக வந்தவன் நான். எமது பிரதேசத்தில் 100 வீதம் முஸ்லிம்கள் வாழ்கின்ற இடத்தில் தொல்லியல் அடையாளம் கண்டுபிடிக்கப்படுகின்றது. தொல்லியல் அடையாளம் காணப்பட்டபோதும் அதனை முதன்முதலில் பொலிஸ் நிலையம் சென்று முறையிட்டது முஸ்லிம்கள் தான்.

யுத்தத்திற்குப் பின்னர் வரலாறு மாறுகின்றது. புதியவர்கள் அங்கு வருகின்றார்கள். இது முழுக்க முழுக்க தங்களுக்குரிய இடம் என்று சொல்கின்றார்கள். முஸ்லிம்கள் பலாத்காரமாக இந்த இடத்தைப் பிடித்திருக்கின்றார்கள் என்று போலியான குற்றச்சாட்டைச் சொன்னார்கள். சுமார் 450 குடும்பங்களை வெளியேற்றுவதற்கான திட்டங்களை தீட்டி அதனை எல்லோரும் பேசுகின்ற நிலையை உருவாக்கினர். தேசத்தின் கவனத்தை ஈர்க்கின்ற இடமாக மண்மலை முகுது மகாவிகாரை மாற்றமடைகின்றது. சமூக வலைத்தளங்களில் பதிவிடுவோர் முதல் சில ஊடகவியலாளர்கள், பாடகர்கள் மிகப் பிழையான, தவறான போலியான கருத்துக்களை பெரும்பான்மை மக்கள் மத்தியில் பரப்பினர்.

இவ்வாறான நெருக்கடியான காலகட்டத்தில் களத்தில் இறங்கிப் போராடியவன் நான். எனக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி கிடைத்தபோது இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க வேண்டிய பொறுப்பு என்மேல் சுமத்தப்பட்டது.

மக்கள் வாழ்கின்ற வீடுகளைப் பாதுகாக்க வேண்டும், பௌத்த பிக்குகளுக்கும், மக்களுக்குமிடையில் கலந்துரையாடலை செய்ய வேண்டும். தொல்லியல் இடங்களைப் பாதுகாக்க வேண்டும், வர்த்தமானப் பத்திரிகையின் ஊடாக வெளிவந்ததை விடுவிப்பு செய்வதற்கான வழிவகைகளை அரசியல் பிரமுகராக செய்வதற்கான தீர்மானத்தை எடுத்தேன். அதற்காகவே அரசு சார்ந்து இயங்கும் நிலைப்பாட்டிற்கும் தள்ளப்பட்டேன்.

மக்களுக்காக, சமூகத்திற்காக நாம் செயற்பட முன்வந்தபோது எம்மை விமர்சித்தார்கள். 20 இற்கு வாக்களித்து விட்டார்கள், அதைப் பெற்றுவிட்டார்கள், இதைப் பெற்றுவிட்டார்கள் என போலியான கதைகளைப் பரப்பினார்கள். அத்தனை பழிச்சொற்களையும் தாங்கிக் கொண்டு பிரச்சினை முடிய வேண்டும் என்பதற்காக இருந்தோம்.

எனது அரசியல் என்பது, தீர்வுகளை நோக்கியதாக இருக்கிறது. அடுத்த தலைமுறைக்கான தீர்வுகள் நிறைந்த ஏதுக்களுக்காகவே நான் களமாடுகிறேன். இன்று மண்மலை முகுது மகாவிகாரை பிரச்சினை இன்று மிக சுமுகமாக தீர்க்கப்பட்டிருக்கின்றது. மிக விரைவில் அதற்கான வர்த்தமானப் பத்திரிகை வெளிவரவுள்ளது. முஸ்லிம் கட்சி ஒன்றின் தலைவர் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் என்னவெல்லாமோ பேசுகின்றார். இவர் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் அமைச்சராக இருந்து கொண்டு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அமைச்சரவையில் ஆதரித்த ஒருவர். வரலாறுகளை மறந்து கொக்கரிக்கின்றார்.

சட்டவாக்கங்கள் வரும் போது, அவற்றில் என்ன இருக்கிறது என்று கூட தெரியாமல் எதிர்க்கட்சி என்றால் எதிர்ப்பது, ஆளும் கட்சி என்றால் ஆதரிப்பது என்ற நிலைமை மாற வேண்டும். ஆய்ந்தறிந்து கருத்துகளையும், ஆதரவையும், எதிர்ப்பையும் பதிவுசெய்ய இங்குள்ளவர்கள் பழக வேண்டும்.

சமூக ஊடகங்களைக் கொண்டு, மக்களை திசைதிருப்புகிற வேலை செய்கின்ற போலி நிலைகளை இனங்கண்டு, உண்மை நிலைகளை மக்கள் அறிந்து கொள்ள அனைவரும் சிரத்தை எடுக்க வேண்டும்".

ஈழத்து இலக்கியத்தை உயிருக்குயிராய் நேசித்தவர் குப்பிழான் ஐ. சண்முகன்

அன்னாரின் மறைவு இலக்கிய உலகுக்கு பேரிழப்பு

ஐங்கரன் விக்கினேஸ்வரா...✍

சாந்தமும் அமைதியும் அகத்தின் உள்ளே குடியிருக்க, கூர்மையான விழிகளால் ஈழத்து இலக்கியத்தை யாசித்த மூத்த எழுத்தாளர் குப்பிழான் ஐ. சண்முகன் காலமானார் என்ற செய்தி துயரத்தைத் தருகிறது.

வடமராட்சியில் திருமணமணமாகி வாழ்ந்த போதும் தனது பிறந்த ஊர் குப்பிழான் எனும் அடையாளத்தைத் தனது பெயருடன் அடையாளமாக தொடர்ந்து இட்டவர் அவர்.

ஓகஸ்ட் முதலாம் நாள் 1946 இல் சுன்னாகத்தில் பிறந்த குப்பிழான் ஐ. சண்முகன் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலைப்பட்டம் பெற்ற ஓர் ஆசிரியர் ஆவார். சிறுகதை, கவிதை, திறனாய்வு, ஆன்மீகம் எனப் பல துறைகளில் எழுதிய குப்பிழான் ஐ. சண்முகன், அலையின் ஆரம்ப ஆசிரியர் குழுவில் இடம் பெற்றவர்.

குப்பிழான் ஐ. சண்முகன் முதலாவது சிறுகதை 'பசி' ராதா என்ற வார இதழில் வெளிவந்தது. தொடர்ந்து பல ஆக்கங்கள் பல்வேறு இதழ்களிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்தன. 1975 இல் வெளியான இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு 'கோடுகளும் கோலங்களும்' சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது.

இவரது நூல்களில் கோடுகளும் கோலங்களும் சிறுகதை தொகுதி 1975 இல் வெளியானது. அதன் பின்னர் 'சாதாரணங்களும் அசாதாரணங்களும்' எனும் சிறுகதைகளின் நூல் 1983 இல் வெளியானது. அத்துடன் அறிமுகங்கள் விமர்சனங்கள் குறிப்புக்களின் நூல் 2003 இலும், உதிரிகளும்... சிறுகதைத் தொகுப்பு 2006 இல் வெளியானது.

யாழ் இலக்கியக் கழகம் என்ற அமைப்பின் மூலமும், அதன் பின்னர் ஐ. சாந்தன், அ. யேசுராசா போன்றோரோடு சேர்ந்து 'கொழும்பு இலக்கியக் கழகம்' மூலமும் இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்ட குப்பிழான் ஐ. சண்முகத்தின் 'ஒரு பாதையின் கதை' சிறுகதைகள் நூல் 2012 இல் வெளியானது.

1976 இல் சாகித்திய மண்டலப் பரிசை 'கோடுகளும் கோலங்களும்' எனும் சிறுகதைத் தொகுப்புக்காக பெற்ற குப்பிழான் ஐ. சண்முகம், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் சங்கத்தின் 'சங்கச் சான்றோர் பட்டம்' விருதினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது 'பிரபஞ்ச சுருதி' எனும் கவிதைத் தொகுப்பு 2014இலும் 'ஒரு தோட்டத்தின் கதை' சிறுகதைகளின் தொகுப்பு 2018 இலும் வெளியாகின.

இவ்வாரம் 24 ஏப்ரல் 2023 இல் மறையும் வரை அவரது உயிர்ப்பான எழுத்துக்கள் ஈழத்து இலக்கியத்திற்கு உத்வேகத்தை தந்துள்ளன. குப்பிழான் மண்ணின் தனிப்பெரும் அடையாளமாகவும், சிறுகதை உள்ளிட்ட பல்துறை ஆளுமையாளராகவும், அனுபவப் பெட்டகமாகவும் திகழ்ந்த பிரபல எழுத்தாளர் குப்பிழான் ஐ.சண்முகன் மரணம் கடந்தும் அவர் பெயர் எல்லோர் நெஞ்சங்களிலும் நிலைக்கும் என்பது உறுதியாகும்.

ஈழத்தின் தலைசிறந்த மூத்த எழுத்தாளர் குப்பிழான் ஐ. சண்முகன் அவர்களுக்கு அஞ்சலிகளுடன், அவரது நூல்கள் எதிர்கால சந்ததியினரும் வாசித்து பயன்பெற இலத்திரனியல் மூலமாக ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்பதே பலரதும் அவாலாகும்.

சமாதான நீதவானாக றிசாத் ஏ. காதர்

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த ஊடகவியலாளர் றிசாத் ஏ. காதர் அகில இலங்கை சமாதான நீதவானாக அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதி எம்.எச். முகம்மட் ஹம்ஸா முன்னிலையில் 2023.04.26 ஆந் திகதி புதன்கிழமை(நேற்று) சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஊடகவியலாளர் றிசாத் ஏ காதர் நாம் ஊடகர் பேரவை, கிராம அபிவிருத்தி அமைப்பு மற்றும் மாற்றத்திற்கான முன்னணி ஆகியவற்றின் செயலாளராக பதவி வகிப்பதுடன், மார்க்ஸ்மேன் விளையாட்டுக் கழகத்தின் தலைவராகவும் செயற்படுகின்றார்.

அத்துடன் அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்க பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் செயற்படுவதுடன், அட்டாளைச்சேனை 08 ஆம் பிரிவின் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளராகவும் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

சிறுவயதில் இருந்தே சமூக, அரசியல் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் களப் பணியாற்றுவதுடன் தனக்குள்ள அரசியல் தொடர்புகளின் மூலமாக கடந்த காலங்களில் இப்பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஊடகவியலாளர் றிசாத் ஏ. காதர் மர்ஹூம்களான முகைதீன் பாவா அப்துல் காதர், அபூபக்கர் தாஜூன் நிசா ஆகியோரின் புதல்வராவார்.

உலக புத்தக நாள் கொண்டாட்ட நிகழ்ச்சியாக

தமிழி–இலக்கிய வெளியின் ஆறு நூல்கள் வெளியீடு

தமிழி – இலக்கிய வெளியின் உலக புத்தக நாள் கொண்டாட்ட நிகழ்ச்சியாக 6 நூல்கள் சென்னையில் வெளியிடப்பட்டன. நன்செய் பிரசுரத்தின் பதிப்பாளர் கவிஞர் தம்பி வரவேற்க, தமிழி இலக்கிய வெளி குறித்த நோக்கவுரையை ஆற்றினார் தடாகம் வெளியீட்டின் பதிப்பாளர் அமுதரசன்.

பேராசிரியர் வீ.அரசு பதிப்பித்த 'புதுமைப்பித்தன் சிறுகதைகள் – விரிவாக்கப்பட்ட பதிப்பு' எனும் நன்செய் பதிப்பக நூலை எழுத்தாளர் ச. தமிழ்ச்செல்வன் வெளியிட, எழுத்தாளர் புதுமைப்பித்தனின் மகள் தினகரி சொக்கலிங்கம் முதல் பிரதியையும், சிறப்புப் பிரதியை இலங்கையைச் சேர்ந்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமான எச். எச். விக்ரமசிங்கவும் பெற்றுக்கொண்டனர்.

அடுத்து லியோ டால்ஸ்டாய் எழுதிய 'கசாக்குகள்' (தமிழில் பேராசிரியர் நா. தர்மராஜன்) எனும் தமிழ் வெளி பதிப்பகத்தின் நூலை இயக்குனர் கரு.பழனியப்பன் வெளியிட்டார்.

'புத்தரும் அவர் தம்மமும்' என்ற டொக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் எழுதிய புத்தகத்தை தமிழுக்கு மொழி பெயர்த்துள்ளார் பேராசிரியர் வீ. சித்தார்த்தா பெரியார்தாசன். இந்நூலை எழுத்தாளர் அழகிய பெரியவன் வெளியிட புத்தகத்தின் பதிப்பாசிரியர் வளவன் பெரியார்தாசன் பெற்றுக் கொண்டார்.

தடாகம் வெளியிட்ட தொல்லியியல் ஆய்வாளர் முனைவர் கோ. சசிகலா எழுதிய 'அய்யன் சமூகம் – தோற்றமும் வளர்ச்சியும்' நூலை வீ.அரசு வெளியிட்டார்.

எழுத்தாளர் இவள் பாரதி எழுதிய 'சுதந்திரம்' எனும் நம் பதிப்பகத்தின் நூலினை கவிஞர், திரைப்படப் பாடலாசிரியர் விவேகா வெளியிட இயக்குனர் கரு.பழனியப்பன் பெற்றுக் கொண்டார்.

எழுத்தாளர் இவள் பாரதியின் 'குட்டிமோச்சும் உயிரினங்களும்' எனும் நம் கிட்ஸ் பதிப்பகத்தின் சிறார் நாவலை சாகித்திய அகாதமியின் சிறார் இலக்கிய விருதாளர் எழுத்தாளர் ஆயிஷா இரா. நடராஜன் வெளியிட எழுத்தாளர் ச. தமிழ்ச்செல்வன் மற்றும் இலங்கை எழுத்தாளர் விக்ரமசிங்க ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

நிகழ்வில் மேனாள் சென்னைப் பல்கலைக் கழக தமிழ் இலக்கியத் துறையின் பேராசிரியர் வீ.அரசு தலைமையேற்றார். எழுத்தாளர்கள் கோ. சசிகலா, வளவன் பெரியார் தாசன், இவள் பாரதி ஆகியோர் ஏற்புரை ஆற்றினர். தமிழ் வெளி பதிப்பகத்தின் கலாபன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

தடாகம், தமிழ் வெளி, நம் பதிப்பகம், நன்செய் பிரசுரம் ஆகிய நான்கு பதிப்பகங்களின் சார்பாக சிறப்பு அழைப்பாளர்களுக்கு எழுத்தாளர் புதுமைப்பித்தன் உருவச் சிலை நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது.

மாவோயிஸ்டுகள் தாக்குதல்; சத்தீஸ்கரில் 10 பொலிசார் பலி!

இந்தியாவின் சத்தீஸ்கரின் பஸ்தார் பகுதியில் மாவோயிஸ்டுகள் தாக்குதல் நடத்தியதில் 11 பொலிசார் உயிரிழந்தனர். பொலிசார் சென்ற வாகனம் மீதே மாவோயிஸ்டுகள் தாக்குதல் நடத்தி உள்ளனர்.

சத்தீஸ்கர் மாநிலம் பஸ்தார் பள்ளத்தாக்கு மாவோயிஸ்டுகளின் கோட்டையாகும். சத்தீஸ்கர், ஆந்திரா, ஒரிசா 3 மாநில எல்லைகளை இணைக்கக் கூடிய மலைத் தொடர்களில் மாவோயிஸ்டுகள் கை ஓங்கி இருக்கிறது.

ஒரிசா, சத்தீஸ்கர், ஆந்திரா ஆகியவற்றின் இந்த மலைப்பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்கள் சென்றடையாத வகையில் மாவோயிஸ்டுகள் தாக்குதல்களை நடத்தி வந்தனர். கடந்த சில ஆண்டுகளாக மாவோயிஸ்டுகளின் தாக்குதல் எண்ணிக்கை பெரும் அளவில் குறைந்திருந்தது.

சத்தீஸ்கர் மாநிலத்தில் ஆண்டுதோறும் 400 மாவோயிஸ்டுகள் சரணடைந்து மாநில அரசின் உதவி பெற்று வாழ்வதாக அம்மாநில பொலிசார் தெரிவித்தனர். பொலிசாரின் கருத்துக்குப் பதில் தரும் வகையில் மாவோயிஸ்டுகள் நேற்று சத்தீஸ்கரின் பஸ்தார் பகுதியில் பயங்கர தாக்குதல் நடத்தினர். ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் வாகனத்தை இலக்கு வைத்து மாவோயிஸ்டுகள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் 10 பொலிசார் உயிரிழந்தனர். பொலிஸ் வாகனத்தின் சாரதியும் உயிரிழந்துள்ளார். இத் தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இலங்கை இன்று மறுமலர்ச்சி...

உடன்படிக்கைகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாமையால் தோல்வியடைந்தன. அதற்கிணங்க சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை தவிர, வேறு மாற்றுவழி நாட்டில் காணப்படாத நிலையிலேயே தற்போதைய பலவீனங்களை ஒருபுறம் வைத்துவிட்டு புதிய நோக்குடன் 17 ஆவது தடவையாக இணைய நேர்ந்தது.

தேசிய கடனை மறுசீரமைப்பதில் ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. அத்துடன், தற்போது நாட்டில் நிதி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கும் குறைந்த வருமானம் பெறும் மக்களின் பாதுகாப்பிற்கான சமூக பாதுகாப்பு வலையமைப்பை முன்னெடுக்கவும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக, 2019ஆம் ஆண்டின் பிற்பகுதியில் எமது வரிகள் குறைக்கப்பட்டதன் மூலம் மொத்த தேசிய உற்பத்தியில் 4 வீதத்தை நாடு இழக்க நேரிட்டது. அதன் பின்னர் கொவிட் பெருந்தொற்று காரணமாக எமது பொருளாதாரம் மேலும் நெருக்கடிக்குள் விழ நேர்ந்தது. அத்தகைய நிலையிலேயே அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கையின் ரூபாவின் பெறுமதி 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் மூன்று மாதங்களில் 40 வீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதன் பின்னர் ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் வீழ்ச்சி கண்டது. 2022ஆம் ஆண்டை முழுமையாக நோக்கும் போது நாட்டின் பொருளாதார வளர்ச்சி 4.4 வீதத்தினால் குறைவடைந்துள்ளது. அத்தோடு, 2022ஆம் ஆண்டு செப்டம்பர் மாத்தில் பணவீக்கம் 70 வீதமாக அதிகரித்தது. உணவுக்கான பணவீக்கம் 95 வீதமாக அமைந்தது.

இவ்வாறான நிலையிலேயே ஜுலை மாதத்தில் நான் ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொண்டேன். மக்கள் பெரும் கஷ்டத்தில் வாழ்ந்த நம்பிக்கையற்ற நிலையில் இருந்த சந்தர்ப்பத்தில், நாட்டை மீண்டும் மீட்டெடுக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்ததால் நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களுக்கு மத்தியில் இந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். இல்லையெனில், நாடு முழுமையாக அழிவுப்பாதைக்குச் சென்றிருக்கும். எனது வீட்டு நூலகத்தில் இருந்த புத்தகங்களும் ஓவியங்களும் எரிக்கப்பட்டாலும், நான் இந்தப் பணியில் இருந்து பின்வாங்கவில்லை. நாடு அழிவுப் பாதைக்குச் செல்லாமல் தடுத்து நாட்டை மீட்டெடுக்கவே நாம் பணியாற்றினோம்.

அக்காலத்தில் இலங்கையின் முழுமையான கடன் 83.6 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. இதில் வெளிநாட்டுக் கடன் 43.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். தேசிய கடன் 42.பில்லியன் அமெரிக்க டொலர். மொத்தக் கடன் 83.6 பில்லியனாகும். இதுவரை செலுத்த வேண்டிய மொத்தக் கடன், மொத்த தேசிய உற்பத்தியில் 128 வீதமாக இருந்தது. இரு தரப்பு, தனிப்பட்ட கடனை மீளச் செலுத்தாததால் 2022ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரை மீளச் செலுத்தாத கடன் நிலுவையாக 2.7 பில்லியன் அமெரிக்க டொலர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

அந்நியச் செலாவணி கையிருப்பு நெருக்கடி ஏற்பட்டதால் 2022ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இலங்கைக்கு, வெளிநாடுகளில் இருந்து பொருட்களையும், சேவைகளையும் பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது. 2022 மே மாதத்தில் வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டியை கூட செலுத்த முடியாமல் போனது. இலங்கை வரலாற்றில் முதன்முறையாக இந்த நிலை எமக்கு ஏற்பட்டது. அரசாங்கத்தை அன்று பொறுப்பேற்ற பின்னர் ஐ.எம்.எப்., உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தேன்.

செப்டம்பர் மாதம் நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கான இணக்கப்பாட்டுக்கு சர்வதேச நாணய நிதியத்துடன் வர முடிந்தது. நீடிக்கப்பட்ட கடன் வழங்குவதற்கான இணக்கப்பாட்டில் ஆறு பிரதான மறுசீரமைப்பு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதற்கமையவே, வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களின் நிதி உறுதிப்பாட்டுக்கான சான்றிதழைப் பெற்றுக்கொண்டோம். இந்தப் பணிகளை செய்து முடித்ததால், எமக்கான நிதி காப்புறுதிக்கான சான்றிதழ் கிடைத்தது. இவற்றை வழங்கிய பரிஸ் கிளப் மற்றும் இந்தியா போன்ற நாடுகள் பொதுவாக பணியாற்றியிருந்தன. இந்தியா ஆரம்பத்தில் சாதகமான பதிலை வழங்கியது. அதற்காக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சீனாவுடன் தனியாக பணியாற்ற எதிர்பார்த்துள்ளோம். அதற்கமைய பரிஸ் கிளப் மற்றும் இந்தியாவுடன் ஒருபுறம் பேச்சுவார்த்தை நடத்துகிறோம். மறுபுறம் சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறோம். இதன் பின்னர் தனியாருடன் பேச்சுவார்த்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் இந்த இணக்கப்பாட்டினால் 03 பில்லியன் டொலர்கள் அடுத்த நான்கு வருடங்களில் எமக்கு கிடைக்கும். இதனைத் தவிர ஏனைய நிறுவனங்களை நோக்கும்போது அவற்றின் மூலம் 7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை நாட்டுக்கு பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த நிதி எமக்குத் தேவைப்படுகிறது. அதன் பிரதி பலன்களை தற்போது காண முடிகிறது. வெளிநாட்டு வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் நம்பிக்கையை நாம் வென்றுள்ளோம். தற்போது பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்பட்டு வருகிறது. சமூக பாதுகாப்பிற்கு அதிக நிதி ஒதுக்கப்படுகிறது. முதலீட்டாளர்கள் இலங்கை மீது அதிக கவனம் செலுத்துகின்றனர். எவற்றை நீக்க வேண்டும், எதனை வைத்திருக்க வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டும். பசுமைப் பொருளாதாரமும் எமக்கு அவசியமாகிறது. டிஜிட்டல் பொருளாதாரமும் எமக்கு அவசியமாகிறது. இவற்றை உருவாக்குவது தான் எமது நோக்கமாகும். அவற்றுக்கான பல முன்னெடுப்புகள் இருக்கின்றன. விவசாயத்தை நவீனமயப்படுத்த வேண்டும். புதிய கைத்தொழில்களை கொண்டுவர வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை தவிர எமக்கு வேறு எந்த மாற்றுவழியும் இல்லை. மாற்றுவழிகள் எதுவும் முன்மொழியப்படவும் இல்லை. வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் இதனை நாம் அங்கீகரிக்க வேண்டும். அனைவரும் ஒன்றிணைந்து இதனை அங்கீகரிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைக்கிறேன். ஜ.எம்.எப். 06 மாதத்திற்கு ஒரு தடவையே எமது நாட்டுக்கு வருகிறது. குறைபாடுகள் இருந்தால் பேச்சுவார்த்தை நடத்தி தீர்க்கலாம்.

தேசிய பேரவை போன்று பல குழுக்கள் உள்ளன. முழு பாராளுமன்றத்தையும் அரசாங்கமாக மாற்ற வேண்டும். அதற்காக நாம் உழைக்க வேண்டும். இது தொடர்பில் பல கருத்துகள் இருக்கலாம். எனினும், அதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும். பல்வேறு கருத்துக்கள் உள்ள போதும் அனைவரும் இந்த திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

2048ஆம் ஆண்டாகும் போது நாம் நாட்டை கட்டியெழுப்ப வேண்டும். இன்றேல் நாம் இளைஞர்களை காட்டிக் கொடுத்தவர்களாக ஆகியிருப்போம். அவர்களின் எதிர்காலத்தை நாசமாக்கியதாக ஆகிவிடும் இளைஞர்கள் குறித்து சிந்திக்க வேண்டும். அதிகார மையம் பற்றி மாத்திரம் சிந்திக்கக் கூடாது. இதனை நாம் முன்னெடுக்கத் தவறினால் ஓரிரு ஆண்டுகளில் எங்கள் எவருக்கும் வாழமுடியாத நிலை ஏற்படும். எனவே அனைவரும் இணைய வேண்டும். 2048 ஆம் ஆண்டு வரையான கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் அதில் முதல் 05 வருடங்களுக்கான திட்டத்தை செயற்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு படைகளின் பிரதம...

(03ஆம் பக்கத் தொடர்)

கண்ணோட்டம் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஊடகவியலாளர் சாமுதித சமரவிக்கிரம, விமல் வீரவன்ச எம்.பி தனது 'நவய: சங்கவுனு கதாவ' (ஒன்பது; மறைக்கப்பட்ட கதை) நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றுகையில்: 2022ஆம் ஆண்டு மே 09 திகதி நடைபெற்ற போராட்டத்தின் பின்னணியில் இருந்தவர்களின் முதல் திட்டம் அப்போதைய நிறைவேற்று ஜனாதிபதியையும் பாதுகாப்புத் தலைவர்களையும் ஜனாதிபதி மாளிகையில் வைத்து படுகொலை செய்வதே என்றும் ஜெனரல் சவேந்திர சில்வாவின் இந்திய விஜயம் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என குற்றம் சாட்டியிருந்தார். அந்த கருத்து அடிப்படையற்றது என பாதுகாப்பு அமைச்சு மேலும் வலியுறுத்தியதுடன், பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அப்போதைய இலங்கை ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்துடன் 2022 ஆம் ஆண்டு ஜுலை மாதம் கொழும்பு பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தார் என்பதை மேலும் வலியுறுத்துகிறது.

கொழும்பில் வாகன நெரிசலை

(03 ஆம் பக்கத் தொடர்)

பிரசன்ன ரணதுங்கவின் தலைமையில் (25) பொது மக்களிடம் கையளிக்கப்பட்டது. அக்சஸ் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் 1,400 மில்லியன் ரூபாய் செலவில் இந்த வாகனத் தரிப்பிடம் கட்டப்பட்டுள்ளது. 30 ஆண்டுகளுக்குப் பிறகு இதன் உரிமை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்படுகிறது. இந்த எட்டு மாடி வாகன நிறுத்துமிடம் சுமார் 300 வாகனங்களை நிறுத்தும் திறன் கொண்டது. வாகன தரிப்பிடத்தின் செயல்பாடு கணினிகள் மூலம் செய்யப்படுகிறது. இதில் நிறுத்தப்படும் அனைத்து வாகனங்களுக்கும் முழு பாதுகாப்பு அளிக்கப்படும். இதன்படி மாதாந்த வருமானத்தில் பெறப்படும் வருமானத்தில் 20% நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

தெற்குக்கு வழங்கப்படும்...

(03 ஆம் பக்கத் தொடர்)

மற்றும் வளங்கள் காணப்படுகின்றன. 14,000 ஏக்கர் காணிகளும் காணப்படுகின்றன. அதன் முழுமையான உரிமையை ரயில்வே திணைக்களத்துக்கு வைத்துக்கொண்டு பல்வேறு திட்டங்களுக்கும் அதனை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் கொழும்பு புறக்கோட்டை, மருதானை, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, ஹிக்கடுவை, எல்ல, கம்பளை கட்டுநாயக்க, கடுகண்ணாவ ஆகிய ரயில்வே பிரதேசங்களில் சிறந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு முதலீட்டாளர்களுக்கு வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

மரக்கறி உள்ளிட்ட பொருட்களை கொழும்புக்கு கொண்டு வருவதற்காக கடந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஜனாதிபதி 200 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்தார்.

அதன் முதலாவது வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன, என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

உலக நாடுகளின் ...

(03 ஆம் பக்கத் தொடர்)

தெரிவித்துள்ளது. அதேவேளை, உலக வங்கி தனது சமீபத்திய மதிப்பீட்டில் லெபனான் நாட்டிலேயே அதிக உணவு விலை பணவீக்கம் காணப்படுவதாக கூறியுள்ளது.

261 சதவீதத்துடன் லெபனான் தர வரிசையில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. மேலும், சிம்பாப்வே மற்றும் ஆர்ஜென்டினா முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்திலுள்ளன.

மாணவர்களுக்கான மதிய...

(03 ஆம் பக்கத் தொடர்)

வழங்கப்பட்டு வரும் உணவுகளின் தரத்தை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும், அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் தொடர்பில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

"நிதி நெருக்கடி காரணமாக பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் செயற்றிட்டம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், உணவு விநியோகஸ்தர்களுக்கு நிலுவை தொகை வழங்குவது தாமதமாகியுள்ளதால் ஒரு சில பகுதிகளில் மதிய உணவு வழங்கும் செயற்றிட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

பொருளாதார பாதிப்பு காரணமாக பாடசாலை மாணவர்களின் ஆரோக்கியத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பது சுட்டிக் காட்டப்பட்டதைத் தொடர்ந்து பின்தங்கிய பகுதி பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்க கொள்கை அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது.

2023ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அதற்காக 16,600 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

அதற்கிணங்க மாகாண அடிப்படையில் மேல் மாகாணத்துக்கு 2,142 மில்லியன் ரூபா, மத்திய மாகாணத்துக்கு 2,047 மில்லியன் ரூபா, தென் மாகாணத்துக்கு 2,289 மில்லியன் ரூபா, வட மாகாணத்துக்கு 1,389 மில்லியன் ரூபா, வடமேல் மாகாணத்துக்கு 1,959 மில்லியன் ரூபா, வட மத்திய மாகாணத்துக்கு 1,681 மில்லியன் ரூபா, ஊவா மாகாணத்துக்கு 1,680 மில்லியன் ரூபா, சப்ரகமுவ மாகாணத்துக்கு 1,451 மில்லியன் ரூபா, கிழக்கு மாகாணத்துக்கு 1,955 மில்லியன் ரூபா என நிதி ஒதுக்கப்பட்டுள்ளது" என்றும் தெரிவித்தார்.

இந்திய சுற்றுலா பயணிகள்...

(03 ஆம் பக்கத் தொடர்)

தற்போதைய நிலை மற்றும் முன்னோக்கி' என்ற தலைப்பில் உரையாற்றிய இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான எதிர்கால பொருளாதார ஒத்துழைப்பின் பகுதிகளை எடுத்துரைத்தார்.

தென்கொரியாவில் 8,000...

அதாவது தற்போது இணையத்தள பதிவின் மூலம் தயாரிப்புப் பிரிவில் தொழில்வாய்ப்பை எதிர்பார்த்துள்ள 600 பேரை, கப்பல் கட்டுமானத் தொழில் துறையில் ஈடுபடுத்துவதற்கு இதன்போது உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக, தயாரிப்புத் துறைகளில் தொழில் வாய்ப்பு எதிர்பார்ப்பில் இணையத்தளத்தில் பதிவை மேற்கொண்டுள்ளவர்கள் எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்கு முன்னதாக கப்பல் கட்டுமானத் தொழில் துறையில் தொழிலுக்காக மாற்றிக் கொள்ள முடியும். குறிப்பிட்ட இணையத்தள பதிவு டிசம்பர் மாதத்துடன் காலாவதியாகி விடும் என்பதால், இதற்கு முன்னதாக கப்பல் கட்டுமானத் தொழில் துறையில் வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்க வேண்டும்.

நிவாரணம் வழங்கும் திட்டத்தில்...

அரசியல்வாதிகள் ஈடுபட்டு வருவதாக சபையில் நேற்று எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல முன்வைத்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மற்றும் பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கவுள்ள நிவாரணம் தொடர்பில் முறையான தெரிவுகள் இன்னும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாவட்டச் செயலாளர்களின் கண்காணிப்பின் கீழ் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன், அரசாங்கமானது நாட்டில் பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அரிசி பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அது எந்த விதத்திலும் இரகசியமாக முன்னெடுக்கும் வேலைத்திட்டமல்ல. அதற்கான குடும்பங்களை தெரிவு செய்யும் நடவடிக்கைகளை மாவட்டச் செயலாளர்களும் பிரதேச செயலாளர்களுமே மேற்கொண்டுள்ளனர்.

அவ்வாறான குடும்பங்களுக்கு அரசாங்கம் ஏற்கனவே தீர்மானித்துள்ள வகையில் 10 கிலோ அரிசி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சூடானிலிருந்து 13 இலங்கையர்...

ஜெத்தாவில் வரவேற்கப்பட்டதாக, வெளிவிவகார அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது. இதேவேளை, மேலும் பன்னிரண்டு (12) இலங்கையர் சூடானின் துறைமுகத்தில் காத்திருப்பதாகவும், வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. சூடானில் சிக்கித் தவிக்கும் இலங்கையரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது இலங்கை அரசாங்கத்தின் முதன்மையான அக்கறையாகும். சூடானில் உருவாகி வரும் பாதுகாப்பு நிலைமையை இலங்கை தொடர்ந்து கண்காணித்து வருவதுடன், சிக்கித் தவிக்கும் இலங்கையரை வெளியேற்றுவதற்காக இந்திய அரசு மற்றும் சவூதி அரேபியா உட்பட அதன் சர்வதேச பங்காளிகளுடன் நெருக்கமாக இலங்கை அரசு பணியாற்றி வருகிறது. கெய்ரோவிலுள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் கார்ட்டூமிலுள்ள இலங்கையின் துணைத் தூதரகம், சூடான் அதிகாரிகள் மற்றும் கார்ட்டூமிலுள்ள இந்தியத் தூதரகம் உட்பட தொடர்புடைய தரப்பினருடன் பாதுகாப்பான வெளியேற்றத்தைப் பாதுகாப்பதற்காக தொடர்ந்தும் இலங்கைத் தூதரகம் தொடர்பில் உள்ளது. கெய்ரோவிலுள்ள இலங்கைத் தூதரகத்தை மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம்: slcaironsular@gmail.com அத்துடன் தொலைபேசி +201272813000. கார்ட்டூமில் உள்ள இலங்கையின் துணைத் தூதரகத்தின் செயலாளர் சயீத் அப்தெல் என்பவரை உடனடி உதவிக்கு +249912394035 என்ற தொலைபேசி மூலமும் தொடர்பு கொள்ளலாமென, வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

ஒரு கிலோ கஞ்சா கடத்தல்...

(03 ஆம் பக்கத் தொடர்)

2013ஆம் ஆண்டு மலேசியாவிலிருந்து சிங்கப்பூருக்கு சுமார் 01 கிலோ கஞ்சாவை கடத்திய குற்றச்சாட்டில் தங்கராஜு சுப்பையா கைதுசெய்யப்பட்டார். 1,017.9 கிராம் கஞ்சாவை அதாவது சிங்கப்பூரில் மரண தண்டனையளிக்க தேவையான குறைந்தபட்ச அளவை விட இரண்டு மடங்கு கஞ்சாவை, கடத்தியதாக தங்கராஜுக்கு 2017 இல் தண்டனை விதிக்கப்பட்டது. அதற்கு எதிரான மேன்முறையீடும் 2018ஆம் ஆண்டில் நிராகரிக்கப்பட்டு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தண்டனை உறுதிசெய்யப்பட்டது. தங்கராஜுவின் மரண தண்டனையை இரத்து செய்யக்கோரி சர்வதேசம் குரல் கொடுத்போதும், சிங்கப்பூர் உள்துறை அமைச்சு செவ்வாய்க்கிழமை தங்கராஜுவின் குற்றம் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக பதிலளித்தது. அவருக்கு சொந்தமானதென்று சட்டத்தரணிகள் கூறிய இரண்டு கைபேசி எண்கள், போதைப்பொருள் விநியோகத்தை ஒருங்கிணைக்க பயன்படுத்தப்பட்டதாக, அமைச்சு கூறியது. ஆசிய நிதி மையமான சிங்கப்பூர், உலகின் மிகக் கடுமையான போதைப்பொருள் எதிர்ப்புச் சட்டங்களைக் கொண்டுள்ளது மற்றும் மரண தண்டனை கடத்தலுக்கு எதிரான ஒரு சிறந்த தடுப்பாக இருக்குமென்று சர்வதேச மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்துகிறது. தங்கராஜுவின் குடும்பத்தினர் இறுதி நேர மேன்முறையீட்டு மனுவை முன்வைத்து மறுவிசாரணைக்கு அழுத்தம் கொடுத்தனர். எவ்வாறாயினும் நேற்று முன்தினம் சிங்கப்பூர் நீதிமன்றம், தங்கராஜு சுப்பையாவின் தண்டனைக்கு எதிராக அவரது குடும்பத்தினரின் கடைசி நிமிட மேன்முறையீட்டை நிராகரித்தது. சிங்கப்பூர் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலான இடைவெளிக்குப் பிறகு கடந்த 2022 மார்ச்சில் மரணதண்டனையை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

இரண்டு வயது குழந்தை...

பிரகாரம், வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து செல்லும் தாய்மார்களின் குழந்தைகளை பாதுகாப்பதற்காக கடந்த வருடம் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. அதனை மேலும் செயல்திறன் மிக்கதாக மாற்றும் வகையில், மார்ச் 31ஆம் திகதி புதிய சுற்றறிக்கையை வெளியிடுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்தது. அதற்கமைய, 45 வயதை பூர்த்தி செய்யாத வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்லும் அனைத்துப் பெண்களும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்வது தொடர்பான அறிக்கையை பூர்த்தி செய்ய வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

EPF, ETF என்பவற்றுக்கு...

(03 ஆம் பக்கத் தொடர்)

உள்ளடங்கும் தகவல்களை பாராளுமன்றத்தில் முன்வைக்குமாறு கோரிக்கைகளை முன்வைத்த போதும், சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழு இறுதி அனுமதி வழங்கும் வரை அது தொடர்பான தகவல்கள் சபையில் முன்வைக்கப்படவில்லை.

தற்போதைய ஜனாதிபதி எதிர்க்கட்சியிலிருக்கும் போது, அதனை சபையில் முன்வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். எனினும், இப்போது ஜனாதிபதியாகிய பின்னர், அவர் அந்த நிலைப்பாட்டை மாற்றி அது தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தாது இரகசியமாக வைத்துள்ளார். அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கவை" என்றார். இலங்கையில் கடன் மறுசீரமைப்பின் போது, உள்நாட்டு கடன் உள்ளடங்காதென நிதி இராஜாங்க அமைச்சர் மற்றும் மத்திய வங்கி ஆளுநர் ஆகியோர் அடிக்கடி தெரிவித்து வந்த போதும், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பரந்துபட்ட வேலைத்திட்டத்தை தயாரிக்க வேண்டுமென்று மத்திய வங்கி ஆளுநர் இப்போது தெரிவித்துள்ளார். இவ்வாறு பரஸ்பர வேறுபாடான கருத்துகள் மூலம் மக்களை ஏமாற்றி மக்களின் நம்பிக்கையை இல்லாது செய்ய அரசாங்கம் முயற்சிக்கின்றதா? அவ்வாறானால் ஏன் மக்களையும் பாராளுமன்றத்தையும் நாட்டையும் திசை திருப்ப வேண்டும் என்றும், அவர் கேள்வி எழுப்பினார்.

புத்தகப்பை, காலணி...

இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். நாட்டில் இறக்குமதிக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டதையடுத்து, புத்தகப் பைகள் மற்றும் காலணிகளின் விலைகளும் வெகுவாக அதிகரித்தன.

பக்தர்கள் சென்ற...

(03 ஆம் பக்கத் தொடர்)

ஒருவருக்கு சிறு காயம் ஏற்பட்டுள்ளதாக, சித்துல்பவ்வ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சித்துல்பவ்வ ரஜமஹா விஹாரையின் நிர்வாகத்தினர் தெரிவிக்கையில், இந்தச் சம்பவம் உண்மை எனவும் கபில என்ற யானை கடந்த மூன்று வருடங்களில் 500க்கும் மேற்பட்ட வாகனங்களை தாக்கி பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன், இந்த யானையை இந்தப் பிரதேசத்திலிருந்து கொண்டு செல்லுமாறு பல வருடங்களாக எழுத்து மூலம் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு கோரிக்கை விடுத்தும், இதுவரை எவ்வித பயனுமில்லையென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொவிட் தொற்றாளர்...

இவர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், அத்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

2019 இன் பிற்பகுதியில் தொற்றுநோய் பரவ ஆரம்பித்ததிலிருந்து, நாட்டில் கண்டறியப்பட்ட மொத்த கொவிட் 19 தொற்றாளர்களின் எண்ணிக்கை 6,72,143 ஆகுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 6,55,000 க்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர்.

அதேவேளை, 16,800 க்கும் மேற்பட்டோர் வைரஸ் தொற்றால் மரணத்தை தழுவினர் என்பது குறிப்பிடத்தக்கது.

தங்கத்தின் விலையில்

காணப்பட்டது. நேற்றைய தங்கத்தின் விற்பனை நிலவரப்படி, ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 6,44,166 ரூபாவாக காணப்படுகின்றது.நேற்றைய தங்கத்தின் விலை விபரத்தின் படி, 24 கரட் 01 கிராம் – ரூ.22,730.00, 24 கரட் 08 கிராம் (01 பவுண்) – ரூ.181,800.00

22 கரட் 01 கிராம் – ரூ. 20,840.00, 22 கரட் 08 கிராம் (01 பவுண்) – ரூ.1,66,700.00

21 கரட் 01 கிராம் – தங்கத்தின் விலையில் நேற்று முன்தினத்தை விட நேற்று (26) சிறிதளவு அதிகரிப்பு காணப்பட்டது.

ராஜித உட்பட மூவருக்கு...

மீன்பிடி துறைமுகத்தை தனியார் நிறுவனத்துக்கு குறைந்த விலையில் குத்தகைக்கு வழங்கியதன் மூலம் அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படுத்தியதாக முன்னாள் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட மூவருக்கு எதிராகவே மேற்படி திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகை நேற்று (26) கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அங்கு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு திறந்த நீதிமன்றத்தில் பிரதிவாதிகளுக்கு திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகையை சமர்ப்பித்தது.

ஊடகவியலாளர் ரூபனின்...

நேற்றுமுன்தினம் (25) நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது. அமரர் ரூபனின் உருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர். ஊடகவியலாளர் ரூபன் யுத்த காலத்தில் களத்தில் நின்று சிறந்த ஊடகப்பணி ஆற்றியிருந்மை குறிப்பிடத்தக்கது.

யாழில் கோர விபத்து;...

இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் மோட்டார் சைக்கிளொன்றில் பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் நோக்கிப் பயணித்துள்ளனர். இதன்போது, இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாக, பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இதில் படுகாயமடைந்த இருவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதன் பின்னர், சாவகச்சேரி, சங்கத்தானை பிரதே

'ஜனாதிபதி சுற்றாடல் விருது 2021-2022'

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்படுள்ள 'ஜனாதிபதி சுற்றாடல் விருது 2021 – 2022' நாளை முற்பகல் 9.00க்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சுற்றாடல் அமைச்சர் பொறியியலாளர் நசீர் அஹமட், சுற்றாடல் அமைச்சின் செயலாளர் விசேட மருத்துவர் அனில் ஜயசிங்க, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் சுபுன் எஸ். பத்திரகே, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பீ.பி. ஹேமன்த ஜயசிங்க உட்பட அதிகாரிகள் மற்றும் விருது பெறுவோரின் பங்கேற்புடனும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டப வளவின் லோடஸ் மண்டபத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுற்றாடல் பாதுகாப்புக்கு சிறப்பான பங்காற்றிய தொழில்துறை, வர்த்தக நிறுவனங்கள் மற்றும் நபர்களை பாராட்டி அரச கௌரவத்தை வழங்கல், சுற்றாடல் சார்புடைய தொழில்துறைகள், வர்த்தகங்கள் மற்றும் சேவை மரபு ஒன்றை கட்டியெழுப்பல், சுற்றாடல் சார்புடைய செயற்பாடுகளுக்காக சமூகத்தை ஊக்குவித்தல் மற்றும் பேண்தகு அபிவிருத்திக்கு மக்கள் பங்கேற்பை ஏற்படுத்தல் என்ற இலக்கை முன்னிறுத்தி சுற்றாடல் அமைச்சின் ஆலோசனையின் கீழ் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வருடாந்தம் இவ்வாறான விருது விழா ஏற்பாடு செய்யப்படுகிறது.

கடந்த ஆண்டுகளில் இடம்பெற்ற சமகால சூழலை கருத்தில் கொண்டு 2021 மற்றும் 2022 ஆகிய இரு ஆண்டுகளுக்கு தொடர்புபட்டதாக விருதுகளை இம்முறை விழாவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொழில்துறை, வர்த்தகம் மற்றும் திட்டப் பிரிவு மற்றும் நிறுவனங்கள், ஊடக மற்றும் சமூகப் பிரிவு ஆகிய இரு பிரதான பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குறித்த நபர்களுக்கு இந்த விருது விழாவுக்காக விண்ணப்பிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டு அவ்வாறு விண்ணப்பித்த போட்டியாளர்கள் சிரேஷ்ட நிபுணர் குழு ஒன்றின் மூலம் முறையான மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு 'ஜனாதிபதி சுற்றாடல் விருது 2021– 2022' இற்காக விருது வெல்வோர் தேர்வு செய்யப்பட்டனர்.

ஊடகப் பிரிவில் ஆய்வுரீதியான சுற்றாடல் செய்தி சேகரிப்பு – அச்சு ஊடகம் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்), ஆய்வு ரீதியான சுற்றாடல் நிகழ்ச்சித் தயாரிப்பு – வானொலி ஊடகம் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்), மற்றும் ஆய்வுரீதியான சுற்றாடல் நிகழ்ச்சித் தயாரிப்பு – தொலைக்காட்சி ஊடகம் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) என்ற பிரிவுகளில் அவதானம் செலுத்தப்பட்டு பாராட்டுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி, 'ஜனாதிபதி சுற்றாடல் விருது 2021–2022' இன் கீழ் தங்கம், வெள்ளி, வெண்கலம் என்று தொண்ணூறு (90) பேர் திறமைக்கான விருதுகளை பெறவுள்ளனர்.

அருணாசல பிரதேசத்துடன் பிரான்ஸ் இணைந்து செயல்படும்

பிரெஞ்சு துணைத்தூதுவர் தெரிவிப்பு

அருணாசல பிரதேசமும் பிரான்சும் இணைந்து செயல்பட முடியும் என்றும் அதற்கான முயற்சிகளில் ஈடுபடப் போவதாகவும் அருணாசல பிரதேசத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்தியாவுக்கான பிரெஞ்சு துணைத் தூதுவர் புடியர் ஹென்றி தல்பெய்ன் தெரிவித்துள்ளார்.

அருணாசல பிரதேசம் வித்தியாசமான, இயற்கை எழில் மிகுந்த இடமாகக் காட்சியளிப்பதாகவும் பிரான்ஸ் நாட்டுடன் கூட்டிணைவதன் மூலம் விளையாட்டு, நீடித்த சுற்றுலா, உயர் கல்வி என்பனவற்றில் அபிவிருத்தி காண முடியும் என நம்பிக்கை வெளியிட்டுள்ள அவர், இவை இரு நாடுகளுக்கு இடையிலான கலாசார பரிமாற்றமாக அமையும் எனவும் கூறியுள்ளார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட அருணாசல பிரதேச ஆளுநர் கே.டி.பர்னாயிக், சூழல் சுற்றுலா, மதச் சுற்றுலா, திகில் சுற்றுலா, கலாசார சுற்றுலா என இங்கே சுற்றுலா பல்வகைப்படும் என்பதை சுட்டிக் காட்டினார்.

ஸீரோ பள்ளத்தாக்கு தன்னை மிகவும் கவர்ந்ததாக பின்னர் தெரிவித்த பிரெஞ்சு துணைத்தூதுவர் புடியர், இங்கே பல இடங்களை சுற்றிப் பார்த்ததோடு பத்து தினங்களுக்கு நடைபெறும் மயோக்கா திருவிழாவிலும் கலந்து கொண்டார்.

சூடானிலிருந்து சவூதி வருபவர்கள் தத்தம் நாடுகளுக்கு செல்ல அனைத்து அடிப்படை தேவைகளும் வழங்கப்பட்டுள்ளன

இலங்கைக்கான சவூதி தூதுவர்

சூடானில் இடம்பெற்றுவரும் மோதலில் சிக்குண்டுள்ள வெளிநாட்டு பிரஜைகளை பாதுகாப்பாக வெளியேற்றி ஜித்தாவுக்கு அழைத்துவரும் மனிதாபிமானப் பணிகளை சவூதி அரேபியா முன்னெடுத்துள்ளது.

இவ்வாறு அழைத்து வரப்படுபவர்கள் தத்தம் நாடுகளுக்கு புறப்படுவதற்கு தயாராகும் வகையில் அவர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படைத் தேவைகளையும் வழங்க சவூதி அரேபியா நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது என்று இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, சவூதி அரேபிய தலைமைத் துவத்தின் வழிகாட்டுதலின் கீழ், சூடானில் சிக்கித் தவிக்கும் பல்வேறு நாட்டினரையும் வெளியேற்றும் முயற்சிகளின் தொடர்ச்சியாக சவூதி அரேபியப் பிரஜைகள் உட்பட சகோதர மற்றும் நட்பு நாடுகளைச் சேர்ந்த பலரும் சவூதி அரேபியாவின் ஜித்தா நகரை வந்தடைந்துள்ளனர். அவர்களில் சவூதி அரேபியா, இலங்கை, இந்தியா, ஓமான், சிரியா, லிபியா, அல்ஜீரியா, மொரோக்கோ, டியூனிசியா, லெபனான், எகிப்து, ஈராக், ஜோர்தான், பாலஸ்தீன், மொரிட்டானியா, எமன், அமெரிக்கா, கனடா, ஜெர்மனி ஐக்கிய இராச்சியம், சுவிட்சர்லாந்து, அயர்லாந்து, பிரான்ஸ், நெதர்லாந்து, ஆர்மீனியா, ஹங்கேரி, ஸ்வீடன், துருக்கி, எத்தியோப்பியா, சியாரலியோன், நைஜீரியா, செனகல், தான்சானியா, ஜிபூட்டி, கேப் வெர்டே, கொங்கோ, மடகாஸ்கர், ஐவரி கோஸ்ட், சோமாலியா, தென்னாப்பிரிக்கா, பொட்ஸ்வானா, மலாவி, குரோஷியா, நிகரகுவா, லைபீரியா, தெற்கு சூடான், கென்யா, உகாண்டா, பிலிப்பைன்ஸ், ஆப்கானிஸ்தான், இந்தோனேசியா, ஸிம்பாப்வே, பாகிஸ்தான், சாட், பங்களாதேசம், நைஜர் மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் அடங்கியுள்ளனர். இக்கப்பலில் 1674 பேர் வந்து சேர்ந்துள்ளனர்.

இதேவேளை சூடானில் இருந்து இற்றை வரையும் 62 நாடுகளைச் சேர்ந்த 2148 பேர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர். அவர்களில் 114 சவூதி பிரஜைகளும் 2034 ஏனைய நாடுகளைச் சேர்ந்தவர்களும் அடங்கியுள்ளனர்.

இவர்கள் தத்தமது நாடுகளுக்குப் புறப்படுவதற்குத் தயாராகும் வகையில் அவர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படைத் தேவைகளையும் வழங்க சவூதி அரேபியா அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

காஷ்மீரின் முதலாவது பெண் ஐ.ஏ.எஸ் அதிகாரி மகளிர் நிர்வாகத்துறைக்கு வரவேண்டும் என அழைப்பு

ஜம்மு – காஷ்மீரின் முதலாவது பெண் ஐ.ஏ.எஸ் (இந்திய நிர்வாக சேவை) அதிகாரியான செயித் செஹ்ரிஷ் அஸ்கர், கடந்த ஆண்டில் சிறந்த சிவில் சேவைக்கான பிரதம விருது பெற்றவர்.

ஜம்மு காஷ்மீரின் இளைய தலைமுறை அரசு உயர் பதவிகளை வகிக்க வேண்டுமெனவும் அதன் மூலம் பல்வேறு துறைகளில் வளர்ச்சியை ஏற்படுத்தலாம் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ள செயித் செஹ்ரிஷ், ஆரம்பத்தில் மருத்துவம் பயின்று மருத்துவப் பட்டம் பெற்றார். பின்னர் இந்திய பொதுத்துறை சேவையில் தேர்ச்சி பெற்ற அவர் இந்திய நிர்வாக சேவை தேர்வு எழுதி ஐ.ஏ.ஏஸ். அதிகாரியானார்.

தான் கல்வி கற்றபோது தனக்கு முன் மாதிரியாக எந்த காஷ்மீர் பெண்ணும் இருக்கவில்லை என்று கூறும் இவர், மருத்துவராகுவதன் மூலம் நோயாளர்களுக்கு மட்டுமே மருத்துவம் பார்க்க முடியும் என்பதால் ஐ.ஏ.எஸ் அதிகாரியானதாகவும் இதன் மூலம் நிர்வாகத்துறையின் உயர்மட்ட கொள்கை வகுப்பில் பங்களிப்பு செய்ய முடிகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் ஆஸாத் காஷ்மீரி பிரதமர் பதவி நீக்கம் நீதிமன்றம் உத்தரவு இம்ரானுக்கு பின்னடைவு

பாகிஸ்தானால் கைப்பற்றப்பட்ட ஆஸாத் காஷ்மீர் மாநிலத்தில் பிரதமராக விளங்கிய சர்தார் தன்வீர் இல்யாஸ், மாநில உயர்நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவர் அடுத்த இரண்டு வருடங்களுக்கு எந்தவொரு பொதுத்துறைப் பதவியையும் வகிக்க நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

தற்போது பாக். எதிர்க்கட்சியாக விளங்கும் இம்ரானின் தெஹ்ரீக்கை இன்சாப் கட்சியே ஆஸாத் காஷ்மீரில் அரசு அமைத்திருந்தது. முதல்வராக பதவி வகித்த இல்யாஸ், நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் பேசியிருந்த குற்றச்சாட்டின் பேரிலேயே நீதிமன்றம் இத்தீர்ப்பை வழங்கியிருக்கிறது. இதையடுத்து சௌத்ரி அன்வருள் ஹக் புதிய பிரதமராக பதவிப் பிரமாணம் செய்துள்ளதாக ஏசியன் லைட் இன்டர்நெஷனல் தகவல் தெரிவித்துள்ளது.

பதவி நீக்கம் செய்யப்பட்ட இல்யாஸ் 'வாயாடி' எனப் பெயர் எடுத்திருப்பவராக வர்ணிக்கப்படுபவர். கடந்த வருடம் மங்ளா நீர் மின்சாரத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக ஆஸாத்துக்கு வருகை தந்திருந்த பாக். பிரதமர் ஷெபாஸ் ஷரீபுடன் அவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டது பாக். ஊடகங்களில் பரபரப்புச் செய்தியாக வெளியானது. பாகிஸ்தானின் வளர்ச்சிக்காக காஷ்மீர் மக்கள் ஆற்றிய தியாகங்களை ஷெரீப் புறக்கணித்து வந்திருப்பதாக இல்யாஸ் குற்றஞ்சாட்டியிருந்தார். இதற்கு பழிதீர்க்கும் முகமாக இஸ்லாமாபாத்தில் இயங்கிவரும் இல்யாஸ் குடும்பத்துக்கு சொந்தமான சுப்பர் மார்க்கட் பாக். பிரதமரின் உத்தரவில் உடனடியாக மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அழகுபடுத்தப்பட்ட அக்கரைப்பற்று பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் முன்றலில் அமைக்கப்பட்ட அழகிய நினைவுத்தூபியொன்று கடந்த வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் முன்னிலையில் அதன் தலைவர் எஸ்.எம். சபீஸ் நினைவுத்தூபியை திறந்துவைப்பதையும், அழகுபடுத்தப்பட்ட அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசலின் முகப்பு தோற்றத்தையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

ஜாதிக லொதரயி மண்டலய
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.04.25
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5097
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,940,606.00
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 4 5 4 6 3 8

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1445
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 317,039,094.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து U சுப்பர் இலக்கம் 11 வெற்றி இலக்கங்கள் 17 44 54 77

ராசி சம மலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 406
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,888,450.20
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 04 11 13 48
விசேட இலக்கினம் மேஷம்

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1127
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 87,385,309.20
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 16 21 23 46

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3339
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 98,557,959.84
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 31 43 50 73

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1552
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,129,892.40
வெற்றி இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 2 0 7 8 4 5

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ

மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் அல்லது அதற்கு முன்பு குறிப்பிடப்பட்டுள்ள கிளையில் அடகு வைக்கப்பட்டு, குறிப்பிட்ட ஒவ்வொரு கிளைக்கும் எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்பாக மீட்கப்படாத நகைகள் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் முற்பகல் 10.00 மணிக்கு அல்லது அதன் பின்னர் அடைப்புக் குறியினுள் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

ஏலத்தலம், கல்கிசை கிளை, இல. 605, காலி வீதி, கல்கிசை.

31. 03 . 2022 க்கு முன் அடகுவைத்த நகைகள்	ஏலவிற்பனைத் திகதி
நுரைச்சோலை, தங்கொடுவ, ஹெந்தல்ல, ஜ-எல, கட்டுநாயக்க, நீர்கொழும்பு, உடப்பு, கம்பஹா, சீதுவை, கந்தானை, மினுவங்கொட, சிலாபம், வத்தளை, மாதம்பை, மரந்தகஹாமுல்ல, பமுனுகம, திவுலப்பிடிய, மாரவில, கொச்சிகடை, வெயங்கொட, ஏகல, புத்தளம், மீரிகம, ஆனமடு, ராகமை, பேலியகொட, கனேமுல்ல	15.05.2023
கிரேன்ட்பாஸ், ஜம்பெட்டா வீதி, கொட்டாஞ்சேனை, முகத்துவாரம், செட்டியார் வீதி, பம்பலப்பிடிய, பாமன்கடை, அளுத்கடை, ஹல்வ்ஸ்டோப், மருதானை, புறகோட்டை, வெள்ளவத்தை	16.05.2023
தெல்கொட, வெலிவேரிய, பூகொடை, களனி, ஹங்வெல்ல, பத்தரமுல்ல, கொலன்னாவை, மாலபே, நாவல, கடுவெல, நிட்டம்புவ, கிரிபத்கொட, பியகம, கிரிந்திவெல, விஜேராம, தலவத்துகொட, யக்கலை,	17.05.2023
நாரன்பிடிய, கடவத்தை, பொரளை, பஞ்சிகாவத்தை, தெமட்டகொடை, மாளிகாவத்தை, தலவாக்கலை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, கெலிஓய, அக்குரனை, பொகவந்தலாவை, புஸ்ஸலாவை, கலஹா, கடுகஸ்தொட, நாவலப்பிடிய, குண்டசாலை, மாவனெல்ல, கம்பளை, கினிகத்தேனை, ரிகிலகஸ்கடை, குருந்துவத்தை, மஹியங்கனை, ராகலை, பிலிமதலாவை, திகன, பேராதெனிய, மஸ்கெலியா	18.05.2023
குருணாகலை, கெகிராவை, குளியாப்பிடிய, றம்புக்கனை, கலேவெல, அரலகங்வில, கேகாலை, தம்புளை, நிக்கவரெடிய, கந்தளை, கல்கமுவ, தெஹிஹத்தகண்டிய, அலவ்வ, பதவி பரகரமபுர, பொலன்னறுவை, அநுராதபுரம், வாரியபொல, குருணாகலை மெட்ரோ, வரக்காபொல, மெதிரிகிரிய, மதவச்சி, தம்புத்தேகம, அநுராதபுரம் மெட்ரோ, நொச்சியாகமை, ஹெட்டிபொல	19.05.2023
மிரிஹான, கொட்டாவை, பொரலஸ்கமுவ, மஹரகம, அத்துருகிரிய, கல்கிஸ்ஸை, மொரட்டுவை, களுத்தரை, பாதுக்கை, ரத்மலானை, பாணந்துரை, பேருவல, மதுகம, பண்டாரகமை, வாதுவை, அளுத்கம, தெஹிவளை, பிலியந்தலை, ஹோமாகமை	22.05.2023
அம்பலந்தொட, வலஸ்முல்ல, அக்குரஸ்ஸ, கராபிடிய, திக்வெல்ல, யக்கலமுல்ல, எல்பிடிய, ஹக்மன, அம்பலன்கொட, படபொல, பிடிகல, அங்குனுகொலபெலஸ்ஸ, திஸ்ஸமஹராமை, ஊருபொக்க, தங்காலை, தெனியாய, தெவிநுவர, கதிர்காமம், ஹபராதுவ, மித்தெனிய, மாத்தறை, காலி, அம்பந்தோட்டை, வெலிகம	23.05.2023
பண்டாரவளை, அப்புத்தளை, எம்பிலிபிடிய, இங்கிரிய, வெலிமடை, கொடகவெல, பசறை, பிபிலை, கலவான, சூரியவெவ, புத்தளை, பெல்மடுல்ல, ஹொரணை, இரத்தினபுரி, பலங்கொட, வெல்லவாய, மொனராகலை, பதுளை, அவிசாவளை, கஹவத்தை, சியம்பலாண்டுவ	24.05.2023
திருகோணமலை, தாண்டவன்வெளி, உஹன, பொத்துவில், உப்புவெளி, சம்மாந்துறை, மட்டக்களப்பு, முத்தூர், கின்னியா, வாழைச்சேனை, மருதமுனை, அம்பாறை, சேருநுவர, நிந்தாவூர், கல்முனை, கலவாஞ்சிகுடி, அக்கறைபத்து, முல்லிபதானை	25.05.2023
திருகோணமலை மெட்ரோ, காரைதீவு	26.05.2023

ஏலத்தலம், யாழ்ப்பாணம் மெற்றோக்கிளை, இல. 177, 179, பொண்ணம்பலம் வீதி, யாழ்ப்பாணம்.

31. 03 . 2022 க்கு முன் அடகுவைத்த நகைகள்	ஏலவிற்பனைத் திகதி
கிளிநொச்சி வடக்கு, பருத்தித்துறை, சுன்னாகம், குருமன்காடு, கைத்தடி, திருநெல்வேலி, கொடிகாமம், மானிப்பாய், கிளிநொச்சி தெற்கு, சாவகச்சேரி, மன்னார், அச்சுவேலி, நெல்லியடி, மல்லாவி, முள்ளியவளை,	30.05.2023
நானாட்டான், வவுனியா, யாழ்ப்பாணம், சங்கானை, யாழ்ப்பாணம் மெட்ரோ	31.05.2023

மேலதிக அறிவித்தல் எதுவும் இன்றி மேலே குறிப்பிடப்பட்ட ஏல விற்பனைகளை ரத்துச் செய்யவோ பின்போடவோ, ஒன்றிணைத்து நடாத்தவோ அல்லது குறிப்பிட்ட ஏல விற்பனை ஸ்தானங்களை மாற்றவோ வங்கிக்கு உரிமையுண்டு என இத்தால் அறியத்தரப்படுகிறது.

HNB

தலைமை முகாமையாளர் (அடகுச் சேவை)
ஹற்றன் நஷனல் வங்கி பி.எல்.சி.
அடகுச் சேவை பிரிவு - 3 கட்டம்
479, டீ.பீ. ஜயா மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. : 011-2660371/2660377

பிச் ரேட்டிங் A (ka) ஹற்றன் நஷனல் வங்கி இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கியாகும். Hatton National Bank PLC - PQ 82

ஹர்த்தாலானது இயல்பு வாழ்வை பாதித்ததே தவிர, அரசாங்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தவில்லை

சாவகச்சேரி விசேட நிருபர்

இந்த ஹர்த்தாலானது மக்களுடைய இயல்பு வாழ்வை பாதித்துள்ளதே தவிர, அரசாங்கத்தையோ அல்லது அதனுடைய இயக்கத்திலோ எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்பதை கவனிக்க வேண்டும். பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களை மேலும் பாதிக்கச் செய்யும் ஓர் போராட்ட வடிவம் எமக்கு எந்த வகையிலும் கைகொடுக்காது.

மக்களின் வருமானம் பாதிக்கப்படலாம் ஆனால் தமது வருமானம் பாதிக்கப்படக்கூடாது என்ற எண்ணத்தோடு செயற்படுவோரை இந்த ஹர்த்தால் மக்களுக்கு இனங்காட்டியிருப்பதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய கட்சிகளின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்ட ஹர்த்தால் தொடர்பாக வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் தனது ஊடக அறிக்கையில்;

வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் 7 கட்சிகள் ஒன்றாக அழைப்பு விடுத்த ஹர்த்தால் போராட்டமானது இக்காலத்துக்கு உகந்ததா என்பதை குறித்த மக்கள் பிரதிநிதிகள் சிந்திக்க வேண்டும்.

அன்றாட வருமானத்தை பெறுவோர், சிறு வணிகர்கள், தனியார் பஸ் ஓட்டுநர்கள், கடற்றொழிலாளர்கள், சந்தை வியாபாரிகள், விவசாயிகள் என வருமான மட்டத்தில் குறைந்த நிலையில் இருப்போரை வஞ்சித்துள்ள இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்தவர்களும், ஆதரவு கொடுத்தவர்களும் பாராளுமன்றத்தை பகிஷ்கரிக்கவில்லை.

அங்கே அன்றாட வருமானம் பெறுபவனை நிர்க்கதியாக்கி விட்டு, இங்கே பாராளுமன்ற கூட்டத்துக்கான வருமானத்தை பெறுவதற்காக தம்மை மக்கள் பிரதிநிதிகள் என கூறிக்கொண்டு இங்கே வந்திருக்கிறார்கள்.

மக்கள் மட்டும் தமது அன்றாட பணிகளை பகிஷ்கரிக்க வேண்டும் என எதிர்பார்க்கும் இத்தகைய அரசியல் தலைவர்கள் ஒருபோதும் தாம் தமது வருமானத்தை பெறும் பணிகளை பகிஷ்கரிக்க மாட்டார்கள் என்பது இன்று மீண்டும் நிரூபணமாகியுள்ளது.

தமது நலனுக்காக மக்களை பகடைக்காய்களாக்கும் கபடதாரிகளாக இவர்கள் இருக்கிறார்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மன்னார் முசலி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களுக்கு மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் முசலி செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 26 வறிய குடும்பங்களுக்கு சுமார் 4000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்த போது...
படம்: தலைமன்னார் விஷேட நிருபர்

காடழிப்பை வெளிப்படுத்திய ஆசிரியருக்கு மிரட்டல்

பொலிஸில் முறைப்பாடு

வவுனியா விசேட நிருபர்

காடழிப்பை வெளிப்படுத்திய ஆசியருக்கு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதுடன், சமூக வலைத்தளங்களிலும் அவதூறு ஏற்படுத்தப்படுவதாக பாதிக்கப்பட்ட ஆசிரியர் நேற்று முன்தினம் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா, கட்டையர்குளம் பகுதியில் கடந்த சில நாட்களாக காடழிப்பு இடம்பெற்று வந்த நிலையில் சம்பவ இடத்திற்கு சென்ற அக்கிராம மக்களும், கிராம அபிவிருத்தி சங்கத்தினரும் அதனை தடுத்து நிறுத்தியதுடன், இது தொடர்பில் அரச அதிபரிடமும் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து, குறித்த கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினரும், குறித்த பிரச்சினையை வெளிக் கொண்டு வந்தவருமான ஆசிரியருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய கிராம அலுவலர் ஒருவர் ஆசிரியருக்கு தொலைபேசியில் மிரட்டியுள்ளார்.

போலி முகநூலின் ஊடாக குறித்த ஆசிரியரின் புகைப்படத்தை பதிவிட்டு அவதூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட ஆசிரியர் சம்பவம் தொடர்பில் வவுனியா பிரதேச செயலாளர் நா. கமலதாசனிடம் முறையிட்டுள்ளதுடன், வவுனியா பொலிஸிலும் கிராம அலுவலருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பில் வவுனியா பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

யாழில் போதை மாத்திரைகளுடன் இளைஞன் கைது

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் 58 போதை மாத்திரைகளுடன் 21 வயது இளைஞன் பொலிஸாரினால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் , ஆவரங்கால் மேற்கு பகுதியில் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞனின் உடைமையில் இருந்து 58 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்ட நிலையில் இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

முள்ளியவளையில் விவசாய கிணற்றிற்குள் வீழ்ந்த யானை, யானை குட்டிகள்

புதுக்குடியிருப்பு விசேட நிருபர்

முல்லைத்தீவு முள்ளியவளையில் விவசாய கிணற்றிற்குள் வீழ்ந்த யானைகளை பாதுகாப்பாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மீட்டுள்ளார்கள்.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு முள்ளியவளை தெற்கு கிராம அலுவலகர் பிரிவில் உள்ள களிக்காடு விவசாய கிராமத்தில் உள்ள விவசாய கிணற்றில் தாய் யானை ஒன்றும் இரண்டு குட்டிகளும் வீழ்ந்துள்ளன.

இந்த யானைகள் (24) இரவு வீழ்ந்திருக்கலாம் என விவசாயிகள் தெரிவித்துள்ளார்கள். அத்தோடு அருகிலுள்ள வயல் நிலங்களை யானைக்கூட்டம் நாசம் செய்துள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளார்கள்.

கூட்டமாக வந்த காட்டு யானைகள் விவசாய கிணற்றில் வீழ்ந்திருக்கலாம் என்றும் யானையினால் நாள்தோறும் அழிவினை சந்தித்து வருவதாகவும் களிக்காட்டு விவசாயிகள் தெரிவித்துள்ளார்கள்.

யானைகள் கிணற்றில் வீழ்ந்த சம்பவம் தொடர்பில் விவசாயிகள் கிராம அலுவலகருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல் வழங்கப்பட்டு சம்பவ இடத்திற்கு வந்த வனஜீவராசிகள் திணைக்களத்தினர் யானைகளை மீட்டு காட்டில் விட்டுள்ளார்கள்.

தந்தை செல்வாவின் 46ஆவது நினைவு நாள்

தந்தை செல்வாவின் 46ஆவது நினைவு நாளும் நினைவுப் பேருரையும் நேற்றைய தினம் புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. தந்தை செல்வா அறங்காவலர் சபையின் ஏற்பாட்டில் யாழிலுள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில் இந் நிகழ்வு நடைபெற்றது. இதன் போது தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா தந்தை செல்வாவின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து சமாதியில் மலரஞ்சலியும் செலுத்தினார். இதனைத் தொடர்ந்து ஏனையவர்களும் மலர் மாலை அணிவித்து மலரஞ்சலியும் செலுத்தினர். தொடர்ந்து, கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.நவரட்ணம் நினைவுப் பேருரையாற்றினார்.

சைவப்புலவர், இளஞ் சைவப்புலவர் தேர்வு;

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் தொடர்பு கொள்ளவும்

சாவகச்சேரி விசேட நிருபர்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் சைவப்புலவர் மற்றும் இளஞ் சைவப்புலவர் தேர்வுகளுக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகளை தொடர்பு கொண்டு மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

இம்மாதம் 28, 29, 30 மற்றும் மே 01ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலை மற்றும் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆகிய பரீட்சை நிலையங்களில் சைவப்புலவர் மற்றும் இளஞ் சைவப்புலவர் தேர்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிலையில் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் சைவப்புலவர் சங்கத் தலைவர் சி.கா.கமலநாதன் (0777197067),

மற்றும் சைவப்புலவர் சங்கத்தின் தேர்வுச் செயலாளர் சைவப்புலவர் லீலாவதி (0762876981) ஆகியோரை தொடர்பு கொண்டு மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என சங்கத்தினர் தெரியப்படுத்தியுள்ளனர்.

காலாவதி திகதி அழித்து மாற்றப்பட்ட மென்பான போத்தல்கள் யாழில் மீட்பு

காலாவதி திகதியை மாற்றம் செய்தமை மற்றும் காலாவதி திகதியை அழித்த நிலையில் ஆயிரத்து 710 சோடா போத்தல்கள் யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் புதன்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திற்கான சோடா விநியோகஸ்தர், காலாவதியான சோடாக்களின் திகதிகளை மாற்றம் செய்தும், காலாவதி திகதியை அழித்தும் கடைகளுக்கு சோடாக்களை விநியோகம் செய்து வருவதாகவும் யாழ்ப்பாண மாநகர பொது சுகாதார பரிசோதகருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலை அடுத்து, யாழ். நகர் பகுதியில் உள்ள குறித்த சோடா களஞ்சியசாலைக்கு சென்று சோதனைகளை மேற்கொண்டார்.

அதன் போது, களஞ்சியசாலையில் இருந்து காலாவதி திகதி மாற்றப்பட்ட ஆயிரத்து 110 சோடாக்களும், காலாவதி திகதி அழிக்கப்பட்ட 600 சோடாக்களும் மீட்கப்பட்டன.

அதனை அடுத்து சோடா போத்தல்களை சான்று பொருட்களாக கைப்பற்றிய பொது சுகாதார பரிசோதகர், விநியோகஸ்தருக்கு எதிராக யாழ். மேலதிக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார்.

புத்தூரில் மருத்துவருக்கு அச்சுறுத்தல்; பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றச்சாட்டு

யாழ்.விசேட நிருபர்

வைத்தியருக்கு அச்சுறுத்தல் விடுத்து, அவரது கடமைக்கு இடையூறு விளைவித்தவர்களை பொலிஸார் கைது செய்ய தவறியமையை கண்டித்து, புத்தூர் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவினர் தமது மருத்துவ சேவைகளை இடைநிறுத்த தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த 10ஆம் திகதி புத்தூர் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்திற்கு அருகில் நடாத்தப்பட்ட தாகசாந்தி நிலையத்தில் சத்தமாக பாடல்கள் ஒலிக்க விடப்பட்டன.

அதனால் தனது கடமைக்கு இடையூறு ஏற்படுவதாகவும், பாடலின் சத்தத்தை குறைக்குமாறும் தாக சாந்தி நிலையத்தில் நின்றவர்களிடம் மருத்துவர் தெரிவித்துள்ளார். அதனை அவர்கள் பொருட்படுத்தாது இருந்துள்ளனர். அதன் பின் குழு ஒன்று மருத்துவருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளது.

அதனை அடுத்து மருத்துவர், தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை மற்றும் கடமைக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாடு செய்யப்பட்டு இரண்டு கிழமைகள் கடந்த நிலையிலும் இதுவரை பொலிஸார் நடவடிக்கை எதுவும் எடுக்காதமையை கண்டித்தும், மருத்துவருக்கு அச்சுறுத்தல் விடுத்தவர்களை கைது செய்யுமாறும், சுகாதார பராமரிப்பு நிலையத்தில் பணியாற்றும் ஏனைய உத்தியோகஸ்தர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறும் கோரி தமது மருத்துவ சேவைகளை புறக்கணிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

யாழ்.தந்தை செல்வா சதுக்கத்தில் பொருத்தப்பட்டிருந்த இடி தாங்கி திருட்டு

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு முன்றலில் உள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் பொருத்தப்பட்டிருந்த இடி தாங்கி மற்றும் 80 அடி நீளமான இடி தாங்கிக்குரிய செப்பிலான இணைப்பு கம்பி என்பன திருடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தந்தை செல்வா சதுக்கத்தில் சில வருடங்களுக்குள் வெவ்வேறு கால பகுதியில் மூன்று மோட்டார்கள் திருடப்பட்டுள்ளன.

அவை ஒவ்வொன்றின் பெறுமதியும் சுமார் 75 ஆயிரம் ரூபா என தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் திருட்டு தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், தற்போது இடிதாங்கி மற்றும் அதனுடன் இணைந்த செப்பு கம்பி என்பன திருடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மன்னார் மாவட்ட இளைஞர், யுவதிகளின் எதிர்காலத்தை மேம்படுத்தும் நோக்குடன் மன்னார் மாவட்ட செயலக ஏற்பாட்டில் மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வு நடைபெற்றது.
நேற்று (26) மன்னார் மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெற்ற இத்தொழிற் சந்தையை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் காலை ஆரம்பித்து வைத்தார்.
படங்கள்: தலைமன்னார் விசேட நிருபர்

கிழக்கின் குரல்

தந்தை செல்வாவின் 76ஆவது சிரார்த்த தினம் மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு

தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பங்கேற்பு

(மட்டக்களப்பு விசேட நிருபர்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் தந்தை செல்வாவின் 76 ஆவது சிரார்த்த தினம் புதன்கிழமை (26) மட்டக்களப்பு நகரில் அனுஷ்டிக்கப்பட்டது.

இ.போ.ச. மட்டக்களப்பு சாலையின் எதிரில் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் சிலை அமைக்கப்பட்டுள்ள வளாகத்தில் சிலைக்கு மலர் மாலை அணிவித்து, நினைவுச் சுடர் ஏற்றி மற்றும் மலரஞ்சலி என்பன செலுத்தப்பட்டன.

அகிம்சை வழியில் தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளைப் பெறும் நோக்கில் பயணித்த தந்தை செல்வாவின் சிரார்த்த தின நிகழ்வுகள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மண்முனை வடக்கு பிரதேச கிளையின் தலைவர் சிவம் பாக்கியநாதன் தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் முதல்வர் தி.சரவணபவன் உள்ளிட்ட கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டு மாலையணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.

தந்தை செல்வாவின் நினைவுப் பகிர்வை இயேசு சபைத் துறவி அருட்தந்தை ஜோசப் மேரி நிகழ்த்தியதோடு, மண்முனை வடக்கு பிரதேசக் கிளையின் செயலாளர் ஏ.சுகுமார் நன்றியுரையாற்றினார்.

அட்டாளைச்சேனை சம்புநகர் அல்மினா வித்தியாலயத்தில் முதலாம் தர மாணவர்களை வரவேற்கும் "வித்தியாரம்ப விழா" செவ்வாய்க்கிழமை (25) பாடசாலை வளாகத்தில் சிறப்பாக இடம் பெற்ற போது. (படம்:ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று ஸாஹிரா வித்தியாலயத்தில் இடம்பெற்ற வித்தியாரம்ப நிகழ்வின் போது. (படம்:அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

பாலமுனை அல் ஹிதாயா மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற வித்தியாரம்ப நிகழ்வின் போது. (படம்:பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

புதிய எல்லை நிர்ணயத்தால் கிராமங்களின் தனித்துவம் சிதையாது பாதுகாக்க வேண்டும்

கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் உதுமாலெவ்வை கோரிக்கை

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய எல்லை நிர்ணயம் அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, தீக்கவாபி கிராமங்களின் தனித்துவத்தையும், ஒற்றுமையையும் சிதைக்காத வகையில் அமைய வேண்டும் என கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ். உதுமாலெவ்வை கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிய எல்லை நிர்ணயம் தொடர்பாக தேசிய எல்லை நிர்ணயகுழு வெளியிட்ட நகலின் அட்டாளைச்சேனை கோணாவத்தை கிராமத்தினையும், ஒலுவில் கிராமத்தின் ஒரு பகுதியினையும் பாலமுனை கிராமத்துடன் இணைத்து புதிய நகலை வெளியிட்டதால் ஒற்றுமையாக வாழ்ந்த அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை மக்கள் மத்தியில் வீண் சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக புதிய எல்லை நிர்ணய குழு, அம்பாறை மாவட்ட அரச அதிபர், அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் உள்ளிட்டவர்களிடம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், தீக்கவாபி கிராமங்களின் தனித்துவத்தையும், ஒற்றுமையையும் சீர்குலைக்காத வகையில் புதிய வட்டாரங்களை உருவாக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாலமுனை 2ம் பிரிவு கிராம சேவகர் பிரிவை பாலமுனை கிராமத்துடன் இணைப்பதுடன் அட்டாளைச்சேனை அறபா வட்டாரத்துடன் அட்டாளைச்சேனை 1ம் பிரிவினையும் இணைத்து அட்டாளைச்சேனை பிரதேச கிராமங்களின் ஒற்றுமையையும், தனித்துவத்தையும் பாதுகாக்குமாறு கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் செவ்வாய்க்கிழமை (25) அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.டபிள்யூ.டக்ளஸ், மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கஸுன் ஆகியோரை சந்தித்து, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் புதிய எல்லை நிர்ணயம் தொடர்பாக விளக்கி அதனை மீண்டும் திருத்தி சரியான நகலை வெளியிடுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

புகையிரதத்தில் மோதுண்டு ஒருவர் உயிரிழப்பு

(கந்தளாய் தினகரன் நிருபர்)

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பராக்கிரம மாவத்தை பகுதியில் ஆசிரியர் ஒருவர் புகையிரத கடவையை கடக்கும் போது எதிரே வந்த புகையிரதத்தில் மோதி உயிரிழந்துள்ளார் .

இவ் விபத்துச் சம்பவம் செவ்வாய்க்கிழமை (25) இடம்பெற்றுள்ளது. அமில பிரசாத் கருணாரத்ன 34 வயதுடைய ஒருவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வீதியை கடக்க முற்பட்ட போதே புகையிரதத்தில் மோதுண்டு பலத்த காயங்களுடன் கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக கந்தளாய் வைத்தியசாலை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து திருகோணமலைக்குச் சென்ற புகையிரதத்தில் மோதுண்டே உயிரிழந்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி தாறுஸ்ஸலாம் பாடசாலையில் இடம்பெற்ற வித்தியாரம்ப நிகழ்வின் போது. (படம்:புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

முன்னாள் மாநகர சபை உறுப்பினரின் வீடு இனந்தெரியாதோரால் தாக்குதல்

(காரைதீவு குறூப் நிருபர்)

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சந்திரசேகரம் ராஜனின் வீடு திங்கட்கிழமை (24) நள்ளிரவு தாக்குதலுக்கு உள்ளானது .

கல்முனை பெரிய நீலாவணைப் பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டிற்கு ஒரு மணி அளவில் வந்த இனந்தெரியாத கோஷ்டியினர் பிரதான வாயிலை உடைத்து உள்நுழைந்ததாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்படுகிறது. பெரியநீலாவணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முன்னாள் உறுப்பினர் சந்திரசேகரன் ராஜனிடம் இதுபற்றி கேட்ட பொழுது.

நானும் மனைவியும் எனது மகனும் ஆழ்ந்த நித்திரையில் இருந்த பொழுது திடீரென்று சத்தம் கேட்டது, நேரத்தை பார்த்தேன் ஒரு மணி ஐந்து நிமிடமாக இருந்தது. மெதுவாக எழுந்து மின்விசிறியை நிறுத்திவிட்டு வாயில் யன்னல் வழியாக பார்த்தேன்.

வழமையாக எமது பிரதான வாயிலில் மின் குமிழ் எரிந்து கொண்டிருக்கும். ஆனால் அத்தருணம் அது எரியவில்லை.

ஆகவே விளங்கி விட்டது எமது வீடுதான் தாக்குதலுக்கு இலக்காகின்றது என்று. அதனால் அச்சத்துடன் மகனின் வாயை பொத்திக்கொண்டு வீட்டுக்குள்ளே இருந்தேன். சுமார் பத்து நிமிடங்கள் எமது வீட்டுக்கு வெளியிலும் சிங்களத்தில் சிலர் கதைத்துக் கொண்டிருந்ததை ஓரளவுக்கு கேட்கக் கூடியதாக இருந்தது.

பத்து நிமிடத்திற்கு பிற்பாடு சத்தம் குறைந்ததும் நான் அருகிலுள்ள மாடிவீட்டுத் தொகுதியில் வாழும் எனது நண்பர்களிடம் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டதும் அவர்கள் எனது வீட்டிற்கு வந்தார்கள். அதன் பிறகு நானும் வெளியில் வந்தேன்.

மூதூர் – ஹிதாயாவுக்கு நூல்கள் அன்பளிப்பு

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் அல்ஹிதாயா மகா வித்தியாலயத்தின் நூலகத்திற்கு எட்டு இலட்சம் ரூபா பெறுமதியான புதிய தளபாடங்கள் மற்றும் நூல்கள் என்பன 'இஸ்லாமிக் ரிலீப்' நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் எம்.எஸ்.ஹில்மி செவ்வாய்க்கிழமை (25) தெரிவித்தார்.

மேலும் மூன்று வருட கால அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் இதற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளதுடன்,

இவ்வருடம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் நலன்கருதி மாணவர்களுக்கான மேலதிக வகுப்புக்கள் மற்றும் மாதிரி வழிகாட்டல் பரீட்சைகளை நடாத்தவும் நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

சம்மாந்துறை தாறுல் உலூம் வித்தியாலயத்தில் இடம்பெற்ற வித்தியாரம்ப விழாவின் போது. (படம்:கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் இடம்பெற்ற வித்தியாரம்ப நிகழ்வின் போது. (படம்:சாய்ந்தமருது விசேட நிருபர்)

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் உள்ள முஸ்லிம் பாடசாலைகளில் தரம் ஒன்று மாணவர்களை இணைத்துக் கொள்ளும் வித்தியாரம்ப நிகழ்வு செவ்வாய்க்கிழமை (25) வலயக்கல்வி அலுவலகத்தின் கீழ் உள்ள 60 பாடசாலைகளில் நடைபெற்றன. பிரதான நிகழ்வு மருதமுனை அல் ஹிக்மா ஜுனியர் பாடசாலையில் அதிபர் எம்.எல்.ஏ.மஹ்றூப் தலைமையில் இடம்பெற்ற போது. (படம்;பெரியநீலாவணை விசேட நிருபர்)

மலைச்சாரலி

பலாங்கொடை

துரக்கந்த மக்களின் நீண்டகால போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை நகரிலிருந்து துரகந்த பகுதிக்கு புதிய பஸ் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அகில எல்லாவளவின் ஏற்பாட்டில் பலாங்கொடை இலங்கை போக்குவரத்து சபையினால் பஸ் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஏற்கனவே பலாங்கொடையிலிருந்து இராசகல, ஊவெல்ல வரையில் போக்குவரத்து சேவை நடைபெற்று வந்த போதிலும் அவ்விடத்திலிருந்து துரக்கந்த வரையான வீதி பழுதடைந்த நிலையில் காணப்பட்டமையால் உரிய போக்குவரத்து வசதிகளின்றி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தனர். இதனையடுத்து இவ்வீதியை காபட் செய்து அபிவிருத்தி செய்ய பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவள நடவடிக்கை எடுத்திருந்தார். அவ்விடத்திலிருந்து சுமார் 5 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள துரகந்த பகுதிக்கான புதிய பஸ் சேவையும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதனால் நீண்டகாலமாக மாணவர்கள், பொதுமக்கள் உரிய போக்குவரத்து வசதிகள் இன்மையால் அனுபவித்து வந்த கஷ்டங்கள் நீங்கியுள்ளதாகவும் பிரதேச மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

பொகவந்தலாவையில் இலவச மருத்துவ முகாம்

அம்பகமுவ பிரதேச செயலகத்துக்குட்பட்ட பொகவந்தலாவ கொட்டியாகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் சிறுவர்களுக்கான இலவச மருத்துவ முகாமொன்று பொகவந்தலாவ பிளான்டேசன் கிளப்பில் முன்னெடுக்கப்பட்டது.

கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழு மற்றும் வேல்ட் விசன் அனுசரணையில் நடாத்தப்பட்ட இலவச மருத்துவ முகாமில் 300 ற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பங்குபற்றினர்.

சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர், நன்நடத்தை சிறுவர் சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுவும் இணைந்து இவ்வேலைத்திட்டத்தை முன்னெடுத்தனர். மருத்துவம், சுகாதாரம், போசாக்கு என்பவற்றின் ஊடாக சிறுவர்களை பாதுகாக்கும் நோக்குடன் மருத்துவ முகாம் இடம்பெற்றது.

தற்காலத்தில் பொருளாதார நெருக்கடியால் சிறுவர்களுக்கு முறையான மருத்துவ வசதி கிடைக்கபெறுவதில்லை.இதனால் அவர்கள் பல்வேறு நோய்களினால் பாதிக்கப்படுகின்றனர். எனவே இலவச மருத்துவ முகாம் பரிசோதனையில் இனங்காணப்பட்ட சிறுவர் நோயாளர்களுக்கு முறையான மருத்துவத்தை வழங்கிண கோரி பெற்றோர்களுக்கு வைத்தியர்கள் இதன்போது அறிவுரை வழங்கினர். இந்நிகழ்வில் மற்றும் பொகவந்தலாவ கொட்டியாகல குடும்ப நல உத்தியோகத்தர்,பொகவந்தலாவ சுகாதார பரிசோதகர்,கொட்டியாகல தோட்ட நிர்வாகத்தினர் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

'இந்து மத ஈமக்கிரியைகள் நடைமுறையும் மாற்றங்களும்' நூல் வெளியீட்டு விழா கண்டி மாநகர சபை சிறுவர் வாசிகசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. முன்னாள் கண்டி மாநகர சபை உறுப்பினர் எம்.பி.விக்னேஷ்வரன் எழுதிய இந்த நூலை கௌரவ அதிதியாக கலந்து கொண்ட கண்டி கலை, கலாசார அபிவிருத்தி பேரவையின் பொருளாளரும், வர்த்தகருமான எம்.சுந்தரமூர்த்தியிடம் எழுத்தாளரும் அவரது மனைவியும் நூலை கையளிப்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்; நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

மகியாவ ஸ்ரீமுத்துமாரியம்மன் சித்ரா பௌர்ணமி தேர்த்திருவிழா

(நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

கண்டி மகியாவ கிராமத்தில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் சித்ரா பௌர்ணமி தேர்த்திருவிழா எதிர்வரும் 02.05.2023 காலை 9.35 மணிக்கு (துவாஜரோகணம்) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் மாலை 5.00 மணி முதல் ரக்ஷாபந்தனம் (காப்பு கட்டுதல்) பின் கரகம் பாலித்தல் 03.05.2023 மாலை 5.00 மணிக்கு ஸ்ரீவிநாயகப் பெருமானுக்கு ஸ்நபன அபிஷேகம் நடைப்பெற்று விசேட வசந்தமண்டப பூஜையோடு ஸ்ரீ விநாயகர் பெருமான் உள்வீதி வலம் வருவார்.

04.05.2023. மாலை 5.00 மணிக்கு ஸ்ரீ முருகப்பெருமானுக்கு ஸ்நபன அபிஷேகம் நடைபெற்று விசேட வசந்தமண்டப பூஜையோடு ஸ்ரீ முருகப் பெருமான் உள்வீதி வலம் வருவார். 05.05.2023 காலை 6.31 மணி மணிக்கு சங்காபிஷேக கிரியை ஆரம்பம், காலை 9.31 மணிக்கு பாற்குட பவனி, மாலை 6.31 மணிக்கு விசேட வசந்த மண்டப பூஜையுடன் வெளி வீதி உலா நடைபெறும்.

வலம்புரி சங்குடன் ஒருவர் கைது

கெப்பட்டிபொல பொலிஸ்பிரிவுக்குட்பட்ட கொறக்காப்பத்தன பகுதியில் வைத்து நேற்று புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் வலம்புரி சங்குடன் ஒருவர் நுவரெலியா விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சில்மியாபுர பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரும் கைப்பற்றப்பட்ட வலம்புரி சங்கும் கெப்பட்டிபொல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொறக்காப்பத்தன பகுதியில் நுவரெலியா விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே சந்தேகநபரிடமிருந்து 11.6 அங்குல நீளமும் 14 அங்குல சுற்றளவும் 500 கிராம் எடையும் கொண்ட வெள்ளை,மஞ்சள் மற்றும் பழுப்பு நிறத்தில் டைட்டானியம் வகையைச் சேர்ந்த வலம்புரி சங்கு கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக கெப்பட்டிபொல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்ற களஞ்சியசாலையிலிருந்த ஐந்து கஜ முத்துக்கள் திருட்டு

உக்குவளை நிருபர்

மாத்தளை மாவட்ட நீதிமன்ற களஞ்சியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த வழக்கு பொருளான ஐந்து யானைத்தந்த முத்துக்களை திருடி சீன வர்த்தகர் ஒருவருக்கு விற்பனை செய்ய முயற்சித்த சந்தேகநபர்களை எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. களஞ்சியசாலை பொறுப்பதிகாரி சமீர பதுசங்க பண்டார, நீதிமன்றத்தின் காரியாலய உதவியாளர் அசங்க புஷ்ப குமார மாத்தளை கய்காவலையைச் சேர்ந்த திஸ்ஸ ஜயரத் பண்டார, பி.எம்.நலீன் ரத்நாயக்க மற்றும் சந்தன புஷ்ப குமார ஆகிய சந்தேகநபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களை எதிர்வரும் மே மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மாத்தளை மாவட்ட களஞ்சியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த யானை முத்துக்களை திருடி சீன வர்த்தகரொருவருக்கு இரகசியமாக விற்பனை செய்ய முயற்சித்துள்ளனர். ஐவரையும் எதிர்வரும் மே மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஊவா மாகாணத்தில் பட்டதாரிகள் 21 பேருக்கு ஆசிரியர் நியமனம்

ஊவா மாகாண சபை கல்வி அமைச்சுக்கு புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட கல்வித்துறை பட்டதாரிகள் 21 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (25) ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் ஊவா மாகாண பிரதான செயலாளர் காரியாலயத்தில் நடைபெற்றது. இதன்போது கொழும்பு, பேராதெனிய, கிழக்கு மற்றும் திறந்த பல்கலைக்கழகங்களின் கல்வித்துறை பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.இவ்வாறு இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் பதுளை, பண்டாரவளை, வெலிமடை, பஸ்ஸர, வியலுவ, மஹியங்கனை, பிபிலை, மொனராகலை, வெல்லவாய மற்றும் தனமல்வில ஆகிய கல்வி வலயங்களில் காணப்படும் வசதி குறைந்த பாடசாலைகளுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார். இந்நிகழ்வில் ஊவா மாகாண பிரதம செயலாளர் பி.பி. விஜேரத்ன, ஆளுநரின் செயலாளர் ஆர்.எச்.சீ. பிரியந்தி, ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.எம். நந்தசேன, மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் எச்.எம்.ஜீவந்த ஹேரத் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

எக்பர்த் தமிழ் மகா வித்தியாலயத்தின் அமுத விழா

காவத்தை தினகரன் விசேட நிருபர்

எம்பிலிபிட்டி கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் சூரியகந்தை எக்பர்த் தமிழ் மகா வித்தியாலயத்தின் அமுத விழா நேற்றுமுன்தினம் (25) சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் பாடசாலை கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது. இதன்போது பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்காக உழைத்த முன்னாள் அதிபர்கள் மற்றும் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கால்பந்தாட்ட விளையாட்டு போட்டி

கம்பளை நிருபர்

நோன்பு பெருநாளை முன்னிட்டு கால்பந்தாட்ட விளையாட்டு போட்டியொன்று கண்டி கெலிஓயா கல்கமுவ மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைப்பெற்றது.

விளையாட்டு போட்டியில் 14 குழுக்கள் பங்குபற்றினர். அபராதே கலகம் மற்றும் எஸ்டன் வில்லா கலகம் என்பன இறுதி சுற்றுப்போட்டியில் விளையாடினர்.

இதில் முதலிடத்தை அபராதே கலகம் பெற்றுக் கொண்டது. இரண்டாமிடத்தை எஸ்டன் வில்லா கலகம் பெற்றுக்கொண்டது, வெற்றி பெற்ற அணியினருக்கு வெற்றிக் கோப்பைகள் மற்றும் பதக்கங்கள் அணிவித்து பரிசில்களும் வழங்கி வைத்தனர். மேலும் சிறந்த வீரர் இல்லாம் என்பவருக்கு பதக்கம் வழங்கியதோடு சிறந்த கோல்ட் காப்பாளர் அல்த்தாப் என்பவருக்கு பதக்கம் வழங்கப்பட்டது. கண்டி பகுதியைச் சேர்ந்த தனியார் நிறுவனம் முகாமையாளர் முஜிபுர் ரஹுமான் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பரிசில்கள் வழங்கி வைத்தனர்.

சுற்றுலா பயணி திடீர் மரணம்

நுவரெலியாவுக்கு வந்திருந்த இந்திய சுற்றுலா பயணியொருவர் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார். இலங்கைக்கு சுற்றுலா வந்திருந்த அவர் நுவரெலியாவிலுள்ள இடங்களை பார்வையிட வந்த போதே மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார். 68 வயதுடைய இந்திய பிரஜையொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சுற்றுலாப் பயணி தனது மனைவியுடன் கடந்த 23 ஆம் திகதி இலங்கைக்கு வந்து கடந்த 25 திகதி நுவரெலியாவுக்கு வந்துள்ளார். அன்றையதினம் மாலை 6:30 மணியளவில் தங்கியிருந்த ஹோட்டல் விடுதியிலிருந்து பிரதான அறைக்கு இரவு உணவு உண்பதற்காக சென்று கொண்டிருந்த போது, திடீரென மாரடைப்பு ஏற்பட்டுள்ளது.

சீத்தாஎலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலயம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுப்பாலமாக விளங்குகின்றது

நுவரெலியா தினகரன் நிருபர்

நுவரெலியா சீத்தாஎலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலயம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான மிகவும் நெருக்கமான உறவுப் பாலமாக விளங்குவதாக ஆலய நிர்வாக சபை தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அதற்கமைய நுவரெலியா சீத்தாஎலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலயத்துக்கு அருகில் தியான மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டுவிழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது ஆலயத்தின் ஞாபகார்த்த முத்திரையொன்றும் வெளியிடப்பட்டதுடன் புனித நீர் தடாகமொன்றும் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வின் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஆலயத்தை எனது நிர்வாக சபையினர் பொறுப்பேற்று அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் சீத்தாஎலிய பிரதேசத்திலுள்ள இனவாதிகள் சிலர் கறுப்பு கொடிகளை கட்டி எதிர்ப்பு தெரிவித்தனர்.

அந்த நேரத்தில் அமைச்சராகவிருந்த மறைந்த சௌமியமூர்த்தி தொண்டமான், அன்று நுவரெலியா அரசாங்க அதிபராக இருந்த டட்லி திஸாநாயக்க, சீத்தாஎலிய பௌத்த ஆலயத்தில் மத குருவாகவிருந்த தம்மானந்த தேரர் உட்பட பலர் இந்த ஆலயத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஊக்கமளித்தனர். அதனாலேயே இன்றும் ஆலயத்தை அபிவிருத்தி செய்யமுடிந்துள்ளது. இந்தியாவிலிருந்து மொராயல் பாபு என்பவர் 500 பேருடன் இந்த ஆலயத்துக்கு வருகை தந்து இராமர் கதையை பிரபல்யம் செய்தார்.

இராதாகிருஷ்ணன் எம்.பி

அதன்பின்னர் இந்தியாவிலிருந்து அதிகமான சுற்றுலா பயணிகளும் இராமர் பக்தர்களும் வரத் தொடங்கினர்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உறவுப் பாலமாக இந்த ஆலயம் விளங்குகின்றது. ஆலயத்தில் மேலும் அபிவிருத்தி பணிகளை செய்வதற்கு இந்தியாவிலுள்ள இராமர் பக்தர்கள் முன்வந்துள்ளனர். அதற்கு இந்திய உயர்ஸ்தானிகர்கள் உதவி செய்ய வேண்டும்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போதும் இந்திய அரசாங்கமே முதலில் முன்வந்து உதவி செய்தது. இதனை மறக்க முடியாது. அத்தோடு இந்து சமயத்துக்கும் பௌத்த சமயத்துக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றன.

முதலில் பௌத்த சமயம் இந்தியாவில் தான் உருவாகியது. இராமாயணம் என்பது ஒரு காவியம். அந்த காவியம் இலங்கையில் வாழும் சிங்கள மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது என அவர் தெரிவித்தார்.

இலங்கை வங்கி

ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

கடன் தொடர்பு இலக்கம்: 84526731

∴பேட்டிலைசர் ஸ்ரோர்ஸ் கொம்பிளெக்ஸ், கண்டி வீதி, கல்வடுவாகம, கல்குளம என்ற முகவரியிலுள்ள வரையறுக்கப்பட்ட ஹேடே அக்றோ பிஸ்னஸ் (தனியார்) (PV 73550) நிறுவனத்தின் கடன் பொறுப்புகளுக்காக இல. 27/C, சமுக கொவிபொல, புபுதுபுர, அனுராதபுரம் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ரத்நாயக்க முதியன்சேலாகே பிரசாத் சமன்லால் ரத்நாயக்க என்பவரின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.02.10ஆம் திகதி வெள்ளிக்கிழமை 2319ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.02.06ஆம் திகதி திங்கட்கிழமை தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய முதல் நிலுவையையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களையும் நிலமனைகளையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த M/ST&H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் உரிமம் பெற்ற ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. கருணாரத்ன அவர்கள் 2023.05.25ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு அனுராதபுரம் புது நகரக் கிளை வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை

1. "ஞானிக்குளம மூக்கலான" எனப்படும் காணியின் ஒரு பாகமானது வடமத்திய மாகாணம், அனுராதபுர மாவட்டம், திரப்பனே பிரதேச சபை மற்றும் பிரதேச செயலக எல்லைகளுக்குட்பட்ட உலகல்ல கோரளையிலுள்ள 'இல. 528 ஞானிக்குளம' கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 'ஞானிக்குளம' கிராமத்தில் அமைந்துள்ளதோடு வடக்கில் செனவிரத்ன கீரலாகே உபாலியின் காணியையும் கிழக்கில் இருவர மகதுவகே சுமதிபாலவின் காணியையும் தெற்கில் அரச காட்டையும் மேற்கில் வத்சலா சுவர்ணபாலியின் காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இரண்டு ரூட்கள் (ஏ0.ரூ.02.பே.0) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மண், மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி அனுராதபுர மாவட்டக் காணிப் பதிவகத்தில் பக்கம் L.D.O.Z 08/48 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குறித்த காணியானது உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ.எம்.பி. ரத்னசிறி அண்மையில் தயாரித்த 2016.03.26ஆம் திகதிய 7562 ஆம் இலக்க வரைபடத்தில் பின்வருமாறு விபரிக்கப்படுகிறது.

"ஞானிக்குளம மூக்கலான" எனப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ.எம்.பி. ரத்னசிறி அண்மையில் தயாரித்த 2016.03.26ஆம் திகதிய 7562ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இல. 1 என அடையாளப்படுத்தப்பட்ட காணி மேற்குறித்தவாறு 'ஞானிக்குளம' கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் அரச காணியையும் (பாறை) கிழக்கில் அரச காணியையும் தெற்கில் பாதையையும் (6 மீற்றர் அகலம்) மேற்கில் ஈ.எம். வத்சலா சுவர்ணபாலியின் காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. குறித்த காணித்துண்டு இரண்டு ரூட்கள் (ஏ0.ரூ.02.பே.0) அல்லது பூச்சியம் தசம் இரண்டு பூச்சியம் இரண்டு நான்கு ஹெக்ரயர் (0.2024 ஹெக்) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மண், மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ளது.

2. "ரஜயே இடம" எனப்படும் காணியின் பாகமானது வடமத்திய மாகாணம், அனுராதபுர மாவட்டம், திரப்பனே பிரதேச சபை மற்றும் பிரதேச செயலக எல்லைகளுக்குட்பட்ட உலகல்ல கோரளையிலுள்ள 'இல. 528 ஞானிக்குளம' கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 'ஞானிக்குளம' கிராமத்தில் அமைந்துள்ளதோடு வடக்கில் அரச காணிகளையும் கிழக்கில் எஸ்.கே. பிரேமாவதியின் காணியையும் தெற்கில் அரச காணிகளையும் மேற்கில் இரிவர மகதுவகே தெவ்மினி நிலாந்தியின் காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. ஒரு ஏக்கர் (ஏ1.ரூ.0.பே.0) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மண், மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி அனுராதபுர மாவட்டக் காணிப் பதிவகத்தில் பக்கம் L.D.O.Z 08/45 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குறித்த காணியானது உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ.எம்.பி. ரத்னசிறி அண்மையில் தயாரித்த 2016.03.26ஆம் திகதிய 7561ஆம் இலக்க வரைபடத்தில் பின்வருமாறு விபரிக்கப்படுகிறது.

"ஞானிக்குளம மூக்கலான" எனப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ.எம்.பி. ரத்னசிறி அண்மையில் தயாரித்த 2016.03.26ஆம் திகதிய 7561ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இல. 1 என அடையாளப்படுத்தப்பட்ட காணி மேற்குறித்தவாறு 'ஞானிக்குளம' கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் அரச காணியையும் (பாறை) கிழக்கில் எஸ்.கே. பிரேமாவதியின் காணியையும் தெற்கில் பாதையையும் (6 மீற்றர் அகலம்) மேற்கில் ஈ.எம். தெவ்மினி நிலாந்தியின் காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது குறித்த காணித்துண்டு ஒரு ஏக்கர் (ஏ1.ரூ.0.பே.0) அல்லது பூச்சியம் தசம் நான்கு பூச்சியம் நான்கு ஏழு ஹெக்ரயர் (0.4047 ஹெக்) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மண், மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ளது.

3. "ரஜயே இடம" எனப்படும் காணியின் பாகமானது வடமத்திய மாகாணம், அனுராதபுர மாவட்டம், திரப்பனே பிரதேச சபை மற்றும் பிரதேச செயலக எல்லைகளுக்குட்பட்ட உலகல்ல கோரளையிலுள்ள 'இல. 528 ஞானிக்குளம' கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 'ஞானிக்குளம' கிராமத்தில் அமைந்துள்ளதோடு வடக்கில் அரச காணியையும் கிழக்கில் ஈ.எம். வத்சலா சுவர்ணபாலியின் காணியையும் தெற்கில் அரச காணியையும் (பாதை) மேற்கில் ஈ.எம். சுமதிபாலவின் காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. ஒரு ஏக்கர் (ஏ1.ரூ.0.பே.0) அல்லது பூச்சியம் தசம் நான்கு பூச்சியம் நான்கு ஏழு ஹெக்ரயர் (0.4047 ஹெக்) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மண், மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி அனுராதபுர மாவட்டக் காணிப் பதிவகத்தில் பக்கம் L.D.O.Z 08/46 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குறித்த காணியானது உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ.எம்.பி. ரத்னசிறி அண்மையில் தயாரித்த 2016.03.26 ஆம் திகதிய 7560ஆம் இலக்க வரைபடத்தில் பின்வருமாறு விபரிக்கப்படுகிறது.

"ஞானிக்குளம மூக்கலான" எனப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ.எம்.பி. ரத்னசிறி அண்மையில் தயாரித்த 2016.03.26ஆம் திகதிய 7560ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இல. 1 என அடையாளப்படுத்தப்பட்ட காணி மேற்குறித்தவாறு 'ஞானிக்குளம' கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் அரச காணியையும் (பாறை) கிழக்கில் ஈ.எம். வத்சலா சுவர்ணபாலியின் காணியையும் தெற்கில் பாதையையும் (6 மீற்றர் அகலம்) மேற்கில் உயர் மின்னழுத்த வடம் ஊடுசெல்லும் காணி ஒதுக்கத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ள குறித்த காணி ஒரு ஏக்கர் (ஏ1.ரூ.0.பே.0) அல்லது பூச்சியம் தசம் நான்கு பூச்சியம் நான்கு ஏழு ஹெக்ரயர் (0.4047 ஹெக்) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மண், மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ளது.

4. "ஞானிக்குளம மூக்கலான" எனப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ.எம்.பி. ரத்னசிறி அண்மையில் தயாரித்த 2016.03.26ஆம் திகதிய 7559ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இல. 1 என அடையாளப்படுத்தப்பட்ட காணியின் ஒரு பாகமானது வடமத்திய மாகாணம், அனுராதபுர மாவட்டம், திரப்பனே பிரதேச சபை மற்றும் பிரதேச செயலக எல்லைகளுக்குட்பட்ட உலகல்ல கோரளையிலுள்ள 'இல. 528 ஞானிக்குளம' கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 'ஞானிக்குளம' கிராமத்தில் அமைந்துள்ளதோடு வடக்கில் F.V.P.16 என்ற வரைபடத்திலுள்ள 66 மற்றும் 26 என்ற இலக்கங்களைக் கொண்ட காணித்துண்டுகளையும் கிழக்கில் F.V.P 16 என்ற வரைபடத்திலுள்ள 27ஆம் இலக்கக் காணித்துண்டையும் தெற்கில் இவ்வரைபடத்திலுள்ள 2ஆம் இலக்கக் காணித்துண்டையும் மேற்கில் F.V.P 16 என்ற வரைபடத்திலுள்ள 33ஆம் இலக்கக் காணித்துண்டையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இரண்டு ரூட்கள் முப்பத்தாறு தசம் ஒன்பது பேர்ச்சுகள் (ஏ.0 ரூ.02. பே.36.9) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மண், மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி அனுராதபுர மாவட்டக் காணிப் பதிவகத்தில் பக்கம் L.D.O.Z 08/47இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குறித்த காணியானது உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ.எம்.பி. ரத்னசிறி அண்மையில் தயாரித்த 2016.07.20ஆம் திகதிய 7559/Aஆம் இலக்க வரைபடத்தில் பின்வருமாறு விபரிக்கப்படுகிறது.

"ஞானிக்குளம மூக்கலான" எனப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ.எம்.பி. ரத்னசிறி அண்மையில் தயாரித்த 2016.07.20ஆம் திகதிய 7559/Aஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இல. 1 என அடையாளப்படுத்தப்பட்ட காணி மேற்குறித்தவாறு 'ஞானிக்குளம' கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் F.V.P16 என்ற வரைபடத்திலுள்ள 66 மற்றும் 26 என்ற இலக்கங்களைக் கொண்ட காணித்துண்டுகளையும் கிழக்கில் F.V.P16 என்ற வரைபடத்திலுள்ள 27ஆம் இலக்கக் காணித்துண்டையும் தெற்கில் இவ்வரைபடத்திலுள்ள 2ஆம் இலக்கக் காணித்துண்டையும் மேற்கில் F.V.P16 என்ற வரைபடத்திலுள்ள 33ஆம் இலக்கக் காணித்துண்டையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இரண்டு ரூட்கள் முப்பத்தாறு தசம் ஒன்பது பேர்ச்சுகள் (ஏ0.ரூ.02.பே.36.9) அல்லது பூச்சியம் தசம் இரண்டு ஒன்பது ஐந்து ஆறு ஹெக்ரயர் (0.2956 ஹெக்)பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மண், மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை

01. பிரசித்த நொத்தரிசு ஐ.எம்.எஸ்.எம். சிறிசேன அத்தாட்சிப்படுத்திய 2016.08.05ஆம் திகதிய 36ஆம் இலக்க உறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒதுக்கங்களும் நிபந்தனைகளும்.

ஒதுக்கங்கள்

1. இக்காணியில் அல்லது காணியின்மேல் காணப்படும் அனைத்துக் கனிமங்களுக்குமான (இவ்வுறுதியில் பெறுமதிமிக்க கல் எனக் குறிப்பிடப்படும்) உரிமையும் அத்தகைய கனிமங்களை அகழ்வதற்கான, தேடுவதற்கான, அங்கு வேலை செய்வதற்கான, எடுத்துச் செல்வதற்கான உரிமையும் அரசுக்கே உரியது.
2. காணி உரிமையாளருக்குக் காணிமீதுள்ள உரித்தானது இவ்வுறுதியின் திகதியில் இக்காணி மீது தற்போது காணப்படும் எந்தவொரு வழி வாய்க்கால் உரிமைக்கும் உட்பட்டதாகும்.

நிபந்தனைகள்

1. உரிமையாளர், 1 1/2 ஹெக்ரயர்/ஏக்கர்கள் மேட்டுநிலம் ..... ஹெக்ரயர்/ஏக்கர்கள் நீர்ப்பாசனக் காணி என இங்கு குறிப்பிடப்பட்டுள்ள காணியின் உப பிரிவின் அலகைவிடக் குறைவான பரப்பளவுடைய பிரிக்கப்பட்டவொரு பாகத்தை கையுதிர்த்தலாகாது.
2. உரிமையாளர், இங்கு 1/2 ஹெக்ரயர்/ஏக்கர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் ஆகக் குறைந்த அலகிலும் குறைவான பிரிக்கப்படாதவொரு பாகத்தை கையுதிர்த்தலாகாது.
3. நிபந்தனை 01இல் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் உப பிரிவைவிடக் குறைவான பரப்பளவுடைய் பிரிக்கப்பட்டவொரு பாகத்திற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக இருத்தலாகாது
4. நிபந்தனை 02இல் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் ஆகக் குறைந்த அலகிலும் குறைவான பிரிக்கப்படாதவொரு பாகத்திற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக இருத்தலாகாது
5. இக்காணியோ அதன் எந்தவொரு பகுதியோ கட்டுமானக் காலத்தில் ஏற்கனவே கட்டப்பட்ட அல்லது இதன்பிறகு கட்டப்படவுள்ள நீர்ப்பாசன வசதியின் மூலம் நீர்ப்பாசனம் செய்யப்படக்கூடியதாக இருந்தால் அல்லது இதன்பிறகு நீர்ப்பாசனம் செய்யப்படக்கூடியதாக மாறினால் நீர்ப்பாசனம் செய்யப்படக்கூடிய பகுதி தொடர்பில் நீர்ப்பாசனக் கட்டளைச்சட்டத்தில் (அத்தியாயம் 453) கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் வரும் எந்தவொரு விதிக்கும் உரிமையாளர் இணங்க வேண்டும்.
6. உரிமையாளர், அரசாங்க அதிபரிடமிருந்து எழுத்துமூல அனுமதியையும் உரிய அதிகாரசபையிடமிருந்து உரிமம் ஒன்றையும் பெற்றுக்கொள்ளாது காணியில் அல்லது காணியின்மேல் காணப்படும் கனிமங்களை அகழவோ தேடவோ எடுக்கவோ உரிமைகொண்டாடவோ விற்கவோ வேறு விதத்தில் கையுதிர்க்கவோ கூடாது.
7. பிரதேச செயலாளரின் எழுத்துமூல முன்னனுமதி இன்றி காணியோ அதன் ஏதேனும் பாகமோ கையுதிர்க்கப்படலாகாது.

விலைகூறுவோர் மேற்குறித்த ஆதனத்துடன் தொடர்புபட்ட உரித்துறுதிகளையும் பிற தொடர்புபட்ட ஆவணங்களையும் 2023.05.15ஆம் திகதியில் இருந்து பார்வையிட முடியும். தொலைபேசி - 0252223685

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,
திரு. எச்.பி.ஏ.எஸ்.பி. ஹேரத்
முகாமையாளர்
இலங்கை வங்கி
புது நகரக் கிளை, அனுராதபுரம்
திகதி: 2023.02.23

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (Ika) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

விலைமனுக்கோரல் (IFB)

இல.	ஒப்பந்த பெயர்
01	அம்பாறை - உஹன - மஹாஓயா வீதியில் 1/1 இலக்க மதகு மற்றும் வடிகால் கட்டுமானம்
02	காரைதீவு - அம்பாறை வீதியில் 23/1 இலக்க கால்வாய் மற்றும் வடிகால் மீள் கட்டுமானம்

மேற்கூறிய பணிகளுக்காக தேசிய போட்டி ஏல நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2023.04.27 ஆம் திகதி முதல் 2023.05.17 ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையத்தளத்தை www.rda.gov.lk பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கணக்குகளை மீட்டு முடித்தல் தொடர்பான அறிவித்தல் கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றத்தில்

2007இன் 07ஆம் இலக்கம் கொண்ட கம்பனிச் சட்டத்தின் XII பிரிவுக்கு அமைய மேற்கொள்ளப்படும் கோரிக்கை.
எச்.டபிள்யு. பிரேமரத்ன,
889 2/3, மருதானை வீதி, புஞ்சி பொரளை,கொழும்பு 10.

மனுதாரர்
எதிராக,
எல்.பி. பைனான்ஸ் லிமிடெட்,
275/75, ஸ்டேன்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.
பிரதிவாதி

சிவில் நீதிமன்ற அதிகாரத்தை செயற்படுத்துவது தொடர்பில் கொழும்பில் நடத்தப்படுகின்ற மேல் மாகாண உயர் நீதிமன்றத்தினால் மேல் குறிப்பிடப்பட்ட நிறுவனத்தின் கணக்கை மீட்டு முடித்தலுக்காக, 889 2/3, மருதானை வீதி, புஞ்சி பொரளை, கொழும்பு 10 இல் வசிக்கும் எச்.டபிள்யு.பிரேமரத்ன 2019.12.03ஆம் திகதி நீதிமன்றத்தில் மனுவொன்றை சமர்ப்பித்ததாகவும் அந்த மனு 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி நீதிமன்றத்தின் முன் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டதாகவும் அந்த மனு தொடர்பில் உத்தரவு ஒன்றை பிறப்பிப்பதற்காக ஆதரவு வழங்க அல்லது அதற்கு எதிராக செயற்படுவதற்கு விருப்பத்தை வெளிப்படுத்துகின்ற அந்த நிறுவனத்தின் எந்தவொரு கடனாளிக்கு அல்லது பங்களிப்பவருக்கு அந்த நோக்கத்திற்காக குறித்த விசாரணையை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட முறையில் அல்லது தமது சட்டத்தரணி ஊடாக முன் தோன்ற முடியும் எனவும் மனுவின் பிரதி ஒன்றை தேவையான நிறுவனத்தின் எந்த ஒரு கடனாளிக்கும் அல்லது பங்களிப்பவருக்கும் குறித்த கட்டணத்தை செலுத்துவதன் அடிப்படையில் கீழ் கையொப்பம் இடுகின்ற நபரினால் அதனை வழக்கப்படும் என்பதையும் இத்தால் அறியத்தரப்படுகிறது.

.....

கையொப்பம் இட்டது - சட்டத்தரணி டி.மொஹான் வல்பிட்ட,
இலக்கம் 186, ஹல்ப்ட்ரோப் வீதி, கொழும்பு 12.

குறிப்பு -
குறித்த மனு தொடர்பில் விசாரணையின்போது முன் தோன்றுவதற்கு எதிர்பார்க்கின்ற எந்த ஒரு நபரும் அவ்வாறு செய்வதற்கு உள்ள தமது எதிர்பார்ப்பை மேலுள்ள பெயர் குறிப்பிடப்பட்ட (சட்டத்தரணி டி.மொஹான் வல்பிட்ட, இலக்கம் 186, ஹல்ப்ட்ரோப் வீதி, கொழும்பு 12) சட்டத்தரணி அவர்களுக்கு எழுத்துமூலம் அறிவித்து ஒப்படைத்தல் வேண்டும். இல்லையேல் தபாலில் அனுப்ப வேண்டும். அறிவித்தலை மேற்கொள்ளும் நபரின் பெயர் மற்றும் முகவரியையும் நிறுவனம் ஒன்றாயின் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரியையும் அறிவித்தலில் குறிப்பிடுதல் வேண்டும் என்பதோடு நபர் அல்லது நிறுவனத்தினால் அல்லது அவர்/அவர்களின் சட்டத்தரணி ஒருவர் இருப்பதாயின் சட்டத்தரணி மூலம் கையொப்பம் இடுதல் வேண்டும் என்பதோடு 2023 ஆம் வருடம் மே மாதத்தின் 24 ஆம் திகதி மு.ப 9.00க்கு முன்னர் ஒப்படைத்தல் வேண்டும். இல்லையேல் தபால் மூலம் அனுப்புவதாயின் போதுமான காலத்தில் (மேலுள்ள பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தரணிக்கு கிடைக்குமாறு) அனுப்ப வேண்டும்.

காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 33 ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

குறிப்பு இல.: RDA/LARD/2008/ORU-AMB/9353/179
RDA/LARD/2008/ORU-AMB/9369/91

பதில் பணிப்பாளர் (காணி), வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய நான், கொலன்னாவ பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள காணிகளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்காக காணி சுவீகரித்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33 ஆம் பிரிவின் கீழ் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளுக்குரிய நஷ்டஈட்டு பணத்தை இக்காணியின் உரிமை கோருபவர்கள் நிரூபித்துப் பெற்றுக்கொள்வதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் கீழ் வழக்கு இலக்கங்களின் கீழ் பற்று வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து இலங்கை ஜனநாயக குடியரசின் 14 டிசெம்பர் 2022 ஆம் திகதிய 2310/23 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி 111 ஐப் பார்க்கவும்.

அட்டவணை

மாகாணம் - மேல்
மாவட்டம் - கொழும்பு
பிரதேச செயலாளர் பிரிவு - கொலன்னாவ
வங்கியில் வைப்பிலிடப்பட்ட கணக்கின் பெயர் - தேசிய சேமிப்பு வங்கி, கொழும்பு

ஆ.வ.	துண்டு இல.	காணியின் பெயர்	விஸ்தீரணம் (ஹெக்)	தொகை (ரூ.)	வழக்கு இல.
கொ.9369	91	வரி மதிப்பீட்டு இல.811, அவிசாவளை வீதி, (பகுதி)	0.0036	1000/=	DLA/103/17
கொ.9353	179	--	0.0086	3,448,500/=	DLA/00008/17

பதில் பணிப்பாளர்
(காணி) மற்றும் காணி சுவீகரித்தல் அதிகாரி,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

காணிப் பிரிவு,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
04வது மாடி, "மகநெகும மஹாமெதுர",
டெல்சில் கொப்பேகடுவ மாவத்தை,
கொஸ்வத்தை, பத்தரமுல்லை.
24 ஏப்ரல் 2023.

காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 33 ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

குறிப்பு இல. வ/18/71/2005

கம்பஹா மாவட்டத்தில், வத்தளை பிரதேச செயலாளர் பீ.டி.ரீ.சி. ராஜிகா ஆகிய நான் காணி சுவீகரித்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33 ஆம் பிரிவின் கீழ்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்குரிய நஷ்டஈட்டு பணத்தை இக்காணியின் உரிமை கோருபவர்கள் பெற்றுக் கொள்வதற்கு நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கங்களின் கீழ் பற்று வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து இலங்கை ஜனநாயக குடியரசின் 16 டிசம்பர் 2022 ஆம் திகதிய 2310/42 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

பீ.டி.ரீ.சி. ராஜிகா,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி சுவீகரித்தல் அதிகாரி,
வத்தளை.

07.03.2023.

அட்டவணை

மாகாணம் - மேல்
மாவட்டம் - கம்பஹா
பிரதேச செயலாளர் பிரிவு - வத்தளை
வைப்பு செய்யப்பட்ட வங்கியின் பெயர் - தேசிய சேமிப்பு வங்கி, நீர்கொழும்பு.

ஆ.வ. இல	துண்டு இல.	கிராமம்	காணியின் பெயர்	விஸ்தீரணம் (ஹெக்)	கணக்கு இல	தொகை (ரூ.)	வழக்கு இல.
கம். 3926	54	மத்தகொட	வரி மதிப்பீட்டு இல.214, கனல் வீதி	0.0034	10009-07-33806	1000/=	3874/SPL
	65		வரி மதிப்பீட்டு இலக்கம் கண்டு பிடிக்க முடியவில்லை, கனல் வீதி.	0.0044	10009-07-33814	1000/=	3875/SPL
	90		வரி மதிப்பீட்டு இல.140, கனல் வீதி	0.0011	10009-07-33822	1000/=	3876/SPL
கம். 3715	12	குருகுலாவ வடக்கு	சிங்துகேகும்புர	0.3495	10009-07-33768	690,000/=	3878/SPL
கம். 3112	36	பத்தியவல பலகல்ல, வெலிசறை	முத்துராஜவெல	0.2011	10009-07-33792	1000/=	3877/SPL

இலங்கை வங்கி

நைவல நகரத்தில்
எமது இலங்கை வங்கிக் கிளையை
மீளமைப்பதற்குப் பொருத்தமான கட்டடம் தேவைப்படுகின்றது

உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- கட்டடம் சட்டபூர்வமாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, 10 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்ததாக இருத்தலாகாது.
- குறைந்தது 3850 அடிகள் தரைப் பரப்பைக் கொண்டிருக்க வேண்டும்.
- தரைக்கு (2'x2' அளவில் அல்லது அதற்குச் சமமான அளவில்) வெளிர் நிறத் தரையோடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டடங்கள் நகர எல்லைக்குள் அமைந்திருத்தல் வேண்டும் என்பதோடு பிரதான வீதியிலிருந்து குறைந்தபட்சம் 30 அடி அகல முகப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு 100 சதுர அடி அளவிலான அறை கட்டடத்துக்கு பின்புறம் இருத்தல் வேண்டும்.
- குறைந்தது 8 வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குப் போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- வெளிர்நிற (வெள்ளை விரும்பத்தகுந்தது) சீலிங் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். (அகற்றத்தக்கது)
- ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்பு, 60 அம்பியர் மூன்று கட்ட மின்சாரம் என்பன வங்கிக்கு பொருத்தமான விதத்தில் ஒழுங்கமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.
- நீரைச் சேமித்து வைக்க 1000 லீட்டர் கொள்ளளவைக் கொண்ட நீர்த்தாங்கி ஒன்றை உயர்வான இடத்தில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.
- குறைந்தது 03 கழிப்பறைகள் இருக்க வேண்டும். அவை ஆண், பெண் என்ற வகையில் வெவ்வேறாக பயன்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும். அதில் ஒன்று கட்டடத்தின் பின்புறம் அமைந்திருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் தளத்துக்கு தரையோடு பதித்து உட்கூரைக்கு சீலிங் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் பின்புறக் கதவு மற்றும் யன்னல்களுக்கு கனரக இரும்பு கிறில் இடப்பட்டு பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறில்லை எனின் அமைத்துத் தர வேண்டும்.
- கட்டடத்துக்கு தீக்காப்புறுதி இருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர்கள் அங்கீகாரம் பெற்ற கட்டடத்தின் வரைபடம், நில அளவை வரைபடம், உரிமைத்துவ உறுதி, இணக்கச் சான்றிதழ் போன்ற ஆவணங்களின் பிரதிகளோடு எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையையும் குறிப்பிட்டு அனைத்து விபரங்களையும் 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர்
(மேல் மாகாணம் - வடக்கு),
இலங்கை வங்கி,
2 ஆம் மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்
கொள்ளுபிட்டிய.
தொலைபேசி : 0112 381 366 / 0113 497 110
தொலைநகல் : 0112 326 830
மின்னஞ்சல் : bocwpn@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

பாகிஸ்தானின் ஆஸாத் காஷ்மீரி பிரதமர் பதவி நீக்கம் நீதிமன்றம் உத்தரவு

இம்ரானுக்கு பின்னடைவு

பாகிஸ்தானால் கைப்பற்றப்பட்ட ஆஸாத் காஷ்மீர் மாநிலத்தில் பிரதமராக விளங்கிய சர்தார் தன்வீர் இல்யாஸ், மாநில உயர்நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவர் அடுத்த இரண்டு வருடங்களுக்கு எந்தவொரு பொதுத்துறைப் பதவியையும் வகிக்க நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

தற்போது பாக். எதிர்க்கட்சியாக விளங்கும் இம்ரானின் தெஹ்ரீக்கை இன்சாப் கட்சியே ஆஸாத் காஷ்மீரில் அரசு அமைத்திருந்தது. முதல்வராக பதவி வகித்த இல்யாஸ், நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் பேசியிருந்த குற்றச்சாட்டின் பேரிலேயே நீதிமன்றம் இத்தீர்ப்பை வழங்கியிருக்கிறது. இதையடுத்து சௌத்ரி அன்வருள் ஹக் புதிய பிரதமராக பதவிப் பிரமாணம் செய்துள்ளதாக ஏசியன் லைட் இன்டர்நெஷனல் தகவல் தெரிவித்துள்ளது.

பதவி நீக்கம் செய்யப்பட்ட இல்யாஸ் 'வாயாடி' எனப் பெயர் எடுத்திருப்பவராக வர்ணிக்கப்படுபவர். கடந்த வருடம் மங்ளா நீர் மின்சாரத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக ஆஸாத்துக்கு வருகை தந்திருந்த பாக். பிரதமர் ஷெபாஸ் ஷரீபுடன் அவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டது பாக். ஊடகங்களில் பரபரப்புச் செய்தியாக வெளியானது. பாகிஸ்தானின் வளர்ச்சிக்காக காஷ்மீர் மக்கள் ஆற்றிய தியாகங்களை ஷெரீப் புறக்கணித்து வந்திருப்பதாக இல்யாஸ் குற்றஞ்சாட்டியிருந்தார். இதற்கு பழிதீர்க்கும் முகமாக இஸ்லாமாபாத்தில் இயங்கிவரும் இல்யாஸ் குடும்பத்துக்கு சொந்தமான சுப்பர் மார்க்கட் பாக். பிரதமரின் உத்தரவில் உடனடியாக மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நாத்தாண்டிய கோட்டக் கல்விப் பிரிவிலுள்ள கொட்டராமுல்ல அல் ஹிரா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 1 வகுப்புக்கான மாணவர்களை சேர்க்கும் வைபவம் வித்தியாலய அதிபர் சப்ராஸ் மொஹமட் தலைமையில் (25) வித்தியாலய வளாகத்தில் நடைபெற்றது. இதன் போது மாணவர்கள் வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம்.
(படம் ; நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

அநுராதபுரம் ஸாஹிராவில் கால்கோள் விழா

திறப்பனை தினகரன்,
அ.புரம் மேற்கு தினகரன் நிருபர்கள்

இவ்வருட தரம் 01 க்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் கால் கோள் விழா 2023 அநுராதபுரம் சாஹிரா தேசிய பாடசாலையில் (25) கல்லூரி அதிபர் எம்.கே.எம்.ஜாபர் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வுக்கு வருகை தந்த அநுராதபுரம் வலய கல்வித் திணைக்கள மேலதிக கல்விப் பணிப்பாளர் (தமிழ் மொழி மூல) மீரா குகநாதன் அதிதியாக கலந்து கொண்டார். புதிய மாணவர்கள் தரம் 02 மாணவர்களால் வரவேற்கப்பட்டனர். இதன் போது சுட்டித் தனங்கள் மிக்க உங்களை எண்ணங்களும் எதிர் பார்ப்புக்களும் தொடரும் வகையில் உயரிய வழிகாட்டல்கள் வழங்கி சிந்தனை செம்மல்களாக மாற்றி சரித்திர நாயகர்களாக பிரகாசித்திட இறைவன் அருள் புரிய வாழ்த்தி வரவேற்கிறோம் என அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து புதிய மாணவ செல்வங்களை வாழ்த்தி வரவேற்ற நிகழ்வு சிறப்பாக பாடசாலை வளாகத்தில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கைவிடப்பட்ட காணிகளில் தேயிலைச் செய்கை

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பசளை விலைகள் பல மடங்குகளால் அதிகரிக்கப்பட்டமையால் கணிசமான சிறு தேயிலைத் தோட்ட உற்பத்தியாளர்களால் கைவிடப்பட்டிருந்த தேயிலை செய்கை இரத்தினபுரி மாவட்டத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருட காலமாக தேயிலை செய்கைக்கு பயன்படுத்தப்படும் யூரியா மற்றும் இரசாயனக் கலவைப் பசளைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டமையால் இம்மாவட்டத்தின் கணிசமான தேயிலை காணி உற்ப த்தியாளர்கள் தமது உற்பத்திகளை இடைநிறுத்தினர். இதனால் தேயிலைக் கொழுந்தின் விலைகள் அதிகரித்து தேயிலைத் தூளின் விலைகளும் கணிசமாக அதிகரித்தன. இந்நிலையால் தேயிலை செய்கையை கைவிட நேர்ந்ததாக சிறு தேயிலை தோட்ட சொந்தக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது யூரியா மற்றும் ஏனைய இரசாயனக் கலவை பசளைகளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றை இலகுவாகப் பெற்றுக் கொள்ளவும் முடியுமாக இருப்பதால் தாம் உற்சாகமாக தேயிலை உற்பத்திகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

விலைமனுக்களுக்கான அழைப்பு

கைத்தொழில் அமைச்சு

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்

புல்மோட்டையில் இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் (LMSL) இற்கு இரண்டு ஆண்டுகள் உதிரிப்பாகங்களுடன் Zircon Wet Powdering ஆலையின் வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல்

விலைமனு இல.: LMSL/SUP/DPC/04/2023

01. புல்மோட்டையில் இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் (LMSL) இற்கு இரண்டு ஆண்டுகள் உதிரிப்பாகங்களுடன் Zircon Wet Powdering ஆலையின் வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து ராஜகிரிய, சரண மாவத்தை, 341/13 இல் உள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு (DPC) தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

உருப்படி இல.	பொருட்களின் விபரம்	தேவையான விலைமனு பிணை (ரூபா)
01	புல்மோட்டையில் இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் (LMSL) இற்கு இரண்டு ஆண்டுகள் உதிரிப்பாகங்களுடன் Zircon Wet Powdering ஆலையின் வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல்	2,000,000.00

02. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

03. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் ராஜகிரிய, சரண மாவத்தை, 341/13, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், வழங்கல்கள் முகாமையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2023.04.27 ஆம் திகதி தொடக்கம் 2023.05.22 ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை அதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

தொடர்பு இலக்கங்கள்: 011-2882025/ 2883951/ 2883952

04. இருபது ஆயிரம் ரூபாவை (ரூபா 20,000/-) மீளளிக்கப்படாத கட்டணமாக ரொக்கப் பணத்தில் செலுத்தி 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை 2023.04.27 ஆம் திகதி தொடக்கம் 2023.05.22 ஆம் திகதி வரையில் வழங்கல்கள் முகாமையாளர் அலுவலகம், இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், 341/13, சரண மாவத்தை, ராஜகிரிய என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை பெற முடியும்.

05. இரு பிரதிகளைக் கொண்ட முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023.05.23 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்னர் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (DPC), C/o இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், 341/13, சரண மாவத்தை, ராஜகிரிய என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு அனுப்ப வேண்டும் அல்லது இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட வேண்டும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் முன் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.

06. விலைமனுக்கள் 2023.05.23 ஆம் திகதி தொடக்கம் 2023.08.21 ஆம் திகதி அல்லது நீடிக்கப்படும் எந்த ஒரு காலத்திற்கும் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

07. அனைத்து விலைமனுக்களும் மேல் குறிப்பிட்டவாறு இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் பெயருக்கு 2023.04.23 ஆம் திகதி தொடக்கம் 2023.09.04 ஆம் திகதி அல்லது நீடிக்கப்படும் எந்த ஒரு காலத்திற்கும் செல்லுபடியான விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

08. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2023.05.06 ஆம் திகதி LMSL ஆலையில் (புல்மோட்டை) இடம்பெறும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு

மக்கள் வங்கி

மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்டுள்ள நகைகளின் பொது ஏல விற்பனை

மக்கள் வங்கி இரத்தினபுரி பிராந்தியத்திற்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/சேவை மையங்களில் 31.12.2021 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் 26.05.2023 திகதி வரை மீட்டெடுக்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாததுமான நகைககள் கீழ் காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

ஏல விற்பனை நிகழும் திகதி	27.05.2023 மற்றும் 28.05.2023
ஏல விற்பனை நிகழும் இடம்	மக்கள் வங்கி - இரத்தினபுரி நகரக் கிளை முதலாம் மாடி (குடுகல்வத்தை)
அடகு வைக்கப்பட்ட கிளைகள்	எம்பிலிபிட்டிய, பெல்மடுல்ல, உடவளவ, கொடஹவெள, ரக்வான, கஹவத்த, பலாங்கொட எஹலியகொட, இரத்தினபுரி, இரத்தினபுரி நகரம், கல்தொட்ட, குருவிட்ட, கிரிஎல்ல, நிவித்திகல, கலவான, பல்லேபெத்த
அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள்	படலங்கல, கொலொன்ன, செவனகல, ஓபநாயக்க, பம்பஹினை, வெலிகெபொல, எஹலியகொட, இரத்தினபுரி புதிய நகரம், வேவெல்லவத்த, வெலிஓப, அயகம, கரவிட்ட

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைந்துச் செயற்பட அல்லது இச் செயற்பாட்டை ஒத்திகைக்க வங்கிக்க உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர்,
பிராந்திய தலைமைக் காரியாலயம்,
புதிய நகரம், இரத்தினபுரி.
தொலைபேசி இல. 045-2223084, 045-2230818

மக்கள் வங்கி PEOPLE'S BANK www.peoplesbank.lk

Replies to Classifieds & Casual Advertisements published C/o the **Daily News** should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

ஒன்றிணைப்பு பற்றிய அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

லீனா மெனுபெக்ச்சரிங் (பீவீடீ) எல்டீடி மற்றும் அக்பார் பார்மசியூட்டிக்கல்ஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட் ஆகிய நிறுவனங்களை ஒன்றிணைத்தல்

லீனா மெனுபெக்ச்சரிங் (பீவீடீ) எல்டீடி (கம்பனிப் பதிவிலக்கம் பீவீ76003) மற்றும் அக்பார் பார்மசியூட்டிக்கல்ஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட் (கம்பனிப் பதிவிலக்கம் பீவீ 130704) நிறுவனத்துடன் ஒன்றிணைப்பு விடயம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதோடு 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1)(அ) பிரிவின் நியதிகளின் கீழ் கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதியினால் ஒன்றிணைப்புச் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது என 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(2) ஆம் பிரிவுக்கு ஏற்ப, 2022 டிசம்பர் 30 ஆம் திகதி சொல்லப்பட்ட ஒன்றிணைப்பு அமுலுக்கு வருகின்றது மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஒன்றினையும் கம்பனிகள், 2022 டிசம்பர் 30 ஆம் திகதியில் இருந்து லீனா மெனுபெக்ச்சரிங் (பீவீடீ) எல்டீடி என தொடரும்.

பணிப்பாளர்
லீனா மெனுபெக்ச்சரிங் (பீவீடீ) எல்டீடி

பெறுகை அறிவித்தல்

இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு - 10

Rack - Mount Server துணை உறுப்பு ஒன்று மற்றும் Rack - Mount Online UPS (3KVA) துணை உறுப்பொன்றைக் கொள்வனவு செய்தல்

இலங்கை தேசிய வைத்தியசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் HHIMS செயற்றிட்டத்திற்குத் தேவையான Rack - Mount Server துணை உறுப்பொன்று மற்றும் Rack - Mount Online UPS (3KVA) துணை உறுப்பொன்றைக் கொள்வனவு செய்வதற்காக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

குறியீட்டு இலக்கம் :- SH/03/Server HHIMS/2023

02. இக்கருமத்தை மேற்கொள்வதற்காகத் தகைமையுள்ள நிறுவனங்கள் மற்றும் நபர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம். என்பதுடன், மீளளிக்கப்படாத ரூபா 2,000.00 இற்கான வைப்பொன்றை இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவில் செலுத்தி, 2023.04.26 முதல் 2023.05.16 வரை வார வேலை நாட்களில் மு.ப.09.00 முதல் பி.ப.02.00 வரை இவ் வைத்தியசாலையின் வழங்கல் பிரிவில் இதற்கான விலைமனு ஆவணங்களுடன் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. 2023.05.17 அன்று மு.ப.10.00 இற்கு இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

வி.வைத்தியர் டப்ளியூ.கே.விக்ரமசிங்ஹ
பிரதிப்பணிப்பாளர் நாயகம்,
தலைவர், பிராந்தியப் பெறுகைக்குழு,
இலங்கை - தேசிய வைத்தியசாலை

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

விலைமனுக்கோரல் (IFB)

இல.	ஒப்பந்த பெயர்
01	வீதி அபிவிருத்தி சபையின் ஊழியர்களுக்காக பாதுக்க, அவிசாவளை, அகலவத்தை, கிரிந்திவெல, களுத்துறை, புளத்சிங்கள, கொச்சிக்கடை, ஹொரண, அளுத்கம மற்றும் பண்டாரகம ஆகிய இடங்களிலிருந்து பத்தரமுல்லைக்கு பேருந்து போக்குவரத்து சேவை

மேற்கூறிய பணிகளுக்காக தேசிய போட்டி ஏல நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2023.04.28** ஆம் திகதி முதல் **2023.05.19** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையத்தளத்தை **www.rda.gov.lk** பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தலைவர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழு,
வீதி அபிவிருத்தி அதிகார சபை.

ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

வேலை வாய்ப்புக்கள்

ஜனதா தோட்ட அபிவிருத்தி சபையில் கீழ்க்காணும் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பிற்கு தகைமையும் தகுதியுமுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

பதிவு - பொது முகாமையாளர் (HM 2-1) நிரந்தரம்

(நாடளாவிய சேவையின் விண்ணப்பதாரிகள் இரண்டாம் நிலை விதிகளில் தரம் 1 அலுவலர்களும் கவனத்தில் கொள்ளப்படுவர்)

சேவை வகுதி : **சிரேஷ்ட முகாமையாளர்**

சம்பளம் அளவு : HM 2-1 (ரூ. 91,645/-, 12 x 2,700/- - ரூ. 124,045/- வாழ்க்கைச் செலவுப்படி (COLA) உடன்

வயது : 35 வயதிற்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பொது:-

கல்வி, தொழில்சார் தகைமைகள், அனுபவம் என்பவற்றின் சம்பந்தப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடனான விண்ணப்பங்களை 2023 மே 10ம் திகதி அல்லது அதற்கு முன் JEBD இன் தலைவரை அடையுமாறு பதிவுத் தபாலில் சமர்ப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை பெரிய எழுத்துக்களில் குறிப்பிடுதல் வேண்டும். பூர்த்தியற்ற மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். எந்த வகையிலாவது செல்வாக்கு செலுத்துதல் தகைமையற்றதாக கொள்ளப்படும். தகைமையான விண்ணப்பங்களின் சேர்ந்தெடுக்கப்படும் பட்டியலில் இருந்து மாத்திரம் ஓர் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படுவர். மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து JEDB இன் இணையதளம் : (www.jedb.lk) இணைப் பார்வையிடவும்.

தலைவர்,
ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை,
இல. 55/75, வொக்ஷோல் லேன்,
கொழும்பு-02.
மின்னஞ்சல் : chjedb@gmail.com
2023 ஏப்ரல் 26

விலைமனுக்களுக்கான அழைப்பு

கைத்தொழில் அமைச்சு

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்

செறிவூட்டப்பட்ட மணல் உற்பத்திக்காக அனைத்து துணைப்பொருட்களுடன் முழுமையான தொழில்துறை நீரகற்று பொறிமுறையின் வழங்கல், விநியோகம், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல்

01. கீழ் விபரிக்கப்பட்டுள்ளவாறு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு (DPC) தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

02. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

இல	விலைமனு இல.	பொருட்களின் விபரம்	ஆவணக் கட்டணம் (மீளளிக்க படாதது)	விலை மனு பிணை (ரூபா)	விலைமனு பிணை செல்லுபடிக் காலம்	விலைமனு செல்லுபடி நாட்கள்	விலைமனு திறக்கப்படும் திகதி மற்றும் நேரம்
01	LMSL/ SUP/DPC /03/2023	செறிவூட்டப்பட்ட மணல் உற்பத்திக்காக அனைத்து துணைப்பொருட்களுடன் முழுமையான தொழில்துறை நீரகற்று பொறிமுறையின் வழங்கல், விநியோகம், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல்	6,000/-	200,000/-	2023.08.31	91	2023.05.18 14.30 மணி

03. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் ராஜகிரிய, சரண மாவத்தை, 341/13, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், வழங்கல்கள் முகாமையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2023.04.27 ஆம் திகதி தொடக்கம் 2023.05.17 ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை அதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

தொடர்பு இலக்கங்கள்: 011-2882025/ 2883951/ 2883952

04. மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2023.04.27 ஆம் திகதி தொடக்கம் 2023.05.17 ஆம் திகதி வரை 9.00 மணி தொடக்கம் 14.00 மணி வரை வழங்கல்கள் முகாமையாளரின் அலுவலகத்திற்கு எழுத்து மூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் நிதிப் பிரிவு, காசாளர் கருமபீடத்தில் ரொக்கப்பணமாக செலுத்தப்பட வேண்டும்.

05. முறையான விலைமனுக்கள் "அசல்" மற்றும் "நகல்" என இரு பிரதிகளில் வெவ்வேறு கடித உறைகளில் மூடப்பட்டு இரு கடித உறைகளையும் ஒற்றை கடித உறையில் இட்டு மேல் குறிப்பிடப்பட்ட திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், 341/13, சரண மாவத்தை, ராஜகிரிய என்ற முகவரி இடப்பட்டு பதிவுத் தபாலில் அல்லது இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் வழங்கல்கள் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பொட்டியில் இட வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

06. பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் பிரதிநிதிகள் முன்னிலையில் மேல் விபரிக்கப்பட்டவாறு விலைமனுக்கள் திறக்கப்படும்.

07. அனைத்து விலைமனுக்களும்,

- விலைமனு ஆவணத்தின் 3ஆவது பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள வடிவத்தில்
- இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், தலைவரின் பெயருக்கு

விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

தலைவர்
திணைக்கள பெறுகைக் குழு

பெறுகை அறிவித்தல்

நாவலப்பிட்டி நகர சபை

நாவலப்பிட்டி நகர சபைக்கு உரித்தான ஜயதிலக விளையாட்டரங்கில் அமைந்துள்ள உடல் வலுவூட்டல் மத்திய நிலையம் அல்லது சிறுவர் பூங்கா 2023.06.01 முதல் 2026.05.31 வரையான 03 வருட காலத்திற்குக் குத்தகைக்கு வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

தொடர் இலக்கம்	ஆதனத்தின் தன்மை	ஆகக் குறைந்த கேள்வி	மீளளிக்கப் படாத விலைமனுப் படிவக் கட்டணம்	மீளளிக்கப் படும் கேள்விப் பிணைத் தொகை
01	உடல் வலுவூட்டல் மத்திய நிலையம்	9,500.00	2,500.00	5,000.00
02	சிறுவர் பூங்கா	10,500.00	2,500.00	5,000.00

01. 2023.04.27 முதல் 2023.05.14 அன்று பி.ப.3.00 வரை அலுவலக நேரங்களில் மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத்தொகையை செலுத்தி இதற்கான அறிவுறுத்தல்களுடன் கூடிய கேள்விப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

02. பூரணப்படுத்தி முத்திரையிடப்பட்ட கேள்விகள் இரண்டு பிரதிகளாக மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு தனித்தனி உறைகளில் சேர்த்து அவ்விரு உறைகளையும் ஒருறையில் உள்ளிட்டு 2023.05.15 அன்று மு.ப.09.30 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு செயலாளர், நகரசபை, நாவலப்பிட்டி" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது அன்றைய தினம் அதே நேரத்திற்கு முன்னர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் முடியும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஜயதிலக விளையாட்டரங்கில் அமைந்துள்ள உடல் வலுவூட்டல் மத்திய நிலையம் மற்றும் சிறுவர் பூங்காவைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகோரல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். அன்றைய தினம் மு.ப.10.00 இற்கு கேள்விகள் திறக்கப்படும்.

03. விளையாட்டரங்கின் நடவடிக்கைகள் மற்றும் நல்லொழுக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, நாவலப்பிட்டி நகர சபையினால் விதிக்கப்படும் நிபந்தனைகளைப் பின்பற்றுவதற்கு கேள்விதாரர்கள் கடப்பாடுடையவராவர்.

04. சித்திகரமான கேள்விதாரர், கேள்வி நிபந்தனைகளை நிராகரிப்பாரானால், அவரின் வைப்புத் தொகையானது, சபைக்கு உரித்தாக்கப்படுவதுடன், அவரின் பெயர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படும்.

05. கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில், கேள்விதாரர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

டீ.எம்.டீ.பீ.பீ.திசாநாயக்க
செயலாளர்
நாவலப்பிட்டி நகரசபை

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer ADZ Classified
Tuition Vehicle Employment Photo Classifieds Miscellaneous House/ Land Rent or Lease Wanted
For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
Gayani - 077 7 278 948 / 011 2 429 342/ 343 / Piyumi - 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

கேள்வி இலக்கம்	கேள்வியின் பெயர்	விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்)	பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம்	மூடும் திகதி மற்றும் நேரம்
CES/FP/06/PT/6458(MP)	42 Nos. Trolley Rails for Mitsui STS Cranes at JCT	126,000.00	3,500.00	2023.05.25 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு
CES/FP/04/PT/6456(MAR)	Spares for Major Overhaul of US 3001 Aquamaster Units of M/T Nandimithra	1,800,000.00	20,000.00	2023.05.25 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு
CES/FP/02/PT/6444/(MAR)	Spares for Propeller Shaft arrangements of the Pilot Launches Pilot 17 & 18	28,000.00	1,000.00	2023.05.25 ஆ ம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு
CES/FP/06/PT/6413(EL)	Local Display Units for Wartsila W 26 series Engines	160,000.00	3,500.00	2023.05.30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு
CES/LP/23/PT/13/04	01 No. DC Welding Generator	100,000.00	3,500.00	2023.05.18 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு
CES/LP/23/PT/04/055	Tube Tyre 1400 X 20 – 04 Nos.	25,000.00	1,000.00	2023.05.18 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு
CES/LP/23/PT/14/054	06 Nos. Cutlass bearings for the Propeller Shafts of the Mooring Launches and Pilot 10	22,500.00	1,000.00	2023.05.18 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

5. 2023 ஏப்ரல் 28 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள்),
வழங்கல்கள் பிரிவு,
இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,
இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.

தொலைபேசி இலக்கங்கள்: 011-2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638
தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443

Repeat Your Ad For Better Offers

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களம்

2023ஆம் ஆண்டில் சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கு கணனிகள் மற்றும் UPSI வழங்கல் விநியோகித்தல் மற்றும் பராமரித்தல்

1. 2023ஆம் ஆண்டில் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு கணனிகள் மற்றும் UPSI வழங்கல் விநியோகித்தல் மற்றும் பராமரித்தல்களிற்காக சிறைச்சாலைகள் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் 2023.05.18 அன்று மு.ப. 10.30 மணி வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

LOT	விபரம்	எண்ணிக்கை
A	கணனிகள் மற்றும் UPS	66 தொகுதிகள் (Sets)
B	கணனிகள் மற்றும் UPS	30 தொகுதிகள் (Sets)

2. 2023.05.17 அன்று 15.00 மணி வரை கொழும்பு 09 பேஸ்லைன் வீதி, 150, சிறைச்சாலைகள் தலைமையகம் வழங்கல் மற்றும் சேவைப்பிரிவில் சிறைச்சாலைகள் ஆணையாளரிடம் (வழங்கல்) விபரப் படிவங்களுடன் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம் மீளளிக்கப்படாத கட்டணமான ரூபா 12,500.00ஐ செலுத்தி ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைமனுப் படிவத் தொகுதியை விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்து கொள்ளலாம். இப் பெறுகையானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் முறை மூலம் மேற்கொள்ளப்படும்.

03. விலைமனுதாரர்கள் தம் நிறுவனத்தின் தலைப்புக் கடிதத்தில் எழுத்துருவில் விண்ணப்பித்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

04. விலைமனுதாரர்கள் 1987ம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

05. சிறைச்சாலைகள் தலைமையகத்தின் வழங்கல் மற்றும் சேவைகள் பிரிவில் விலைமனுக்களுக்கான மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாமென்பதுடன் இலவசமாக அவற்றைப் பரிசீலனையும் செய்து கொள்ளலாம்.

06. 2023.05.18 அன்று 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கொழும்பு 09 பேஸ்லைன் வீதி, இல. 150, சிறைச்சாலைகள் தலைமையகம், திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவருக்குக் கிடைக்கக் கூடியவாறு விலைமனு ஆவணத் தொகுதியானது பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம் அல்லது வழங்கல் மற்றும் சேவைப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்க்கப்படலாம். கேள்விகள் அடக்கப்படும் தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் '2023ஆம் ஆண்டில் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு கணனிகள் மற்றும் UPSI வழங்கல் விநியோகித்தல் மற்றும் பராமரித்தல்' எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

07. சிறைச்சாலைகள் தலைமையகத்தின் கேட்போர் கூடத்தில் 2023.05.18 அன்று மு.ப. 10.30 மணிக்கு கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகவே அவைகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர்கள் அல்லது சட்ட பூர்வமாக அதிகாரமளிக்கப் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளித்திருக்க அனுமதிக்கப்படுவர். (அவர்கள் செல்லுபடியாகும் கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்) தாதமாகும் முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத மற்றும் தெளிவற்ற கேள்விகள் நிராகரிக்கப்படும்.

08. மேலதிக தகவல்களிற்காக சிறைச்சாலைகள் தலைமையக தொலைபேசியூடாக வழங்கல் பிரிவை அழைக்கவும்.

தொ. பே. 011 4677148, 011-4677178, 011 4677516.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்,
தலைவர்,
சிறைச்சாலைத் திணைக்களப் பெறுகைக்குழு,
சிறைச்சாலைகள் தலைமையகம்,
இல. 150, பேஸ்லைன் வீதி,
கொழும்பு -09.

2023.04.27

கேள்வி மனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

1	2	3	4	5	6
பிரிவு மற்றும் கிளை	கேள்வி மனு இலக்கம் மற்றும் பொருள் விளக்கம்	கேள்வி மனுமுடிவுத் திகதி மற்றும் நேரம்	கேள்வி மனு ஆவணம் வாங்கும் இடம் மற்றும் தொடர்பு இலக்கம்	கேள்வி மனு ஆவணத்தின் விலை	கேள்வி மனு வகை ச.போ.கே. (ICB)/ தே.போ.கே. (NCB)
சேவைகள்					
பிறப்பாக்கல் (தம்பபவனீ காற்றாலை மின்னுற்பத்தி நிலையம், மன்னார்)	DGM/MC/TWPS/PROC/2023/14 தம்பபவனீ காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்திற்கான சாரதி மற்றும் எரிபொருளுடனான பயணிகள் வேன்(Van) ஒன்றினை வாடகைக்கு எடுப்பதற்கான கேள்வி மனு கோரல்	18/05/2023 14:00 மணிக்கு	தலைமை பொறியியலாளர் அலுவலகம், தம்பபவனீ காற்றாலை மின்னுற்பத்தி நிலையம்,இலங்கை மின்சார சபை, நடுக்குடா, மன்னார், 41000. தொ. இல.: 023 2031021	ரூ. 1,000/= அனைத்து கட்டணங்களையும் மக்கள் வங்கியின் (தலைமையகக் கிளை) மகாவலி வளாக 204-2002-30085-134 என்ற சேமிப்பு கணக்கிற்கு மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் பணம் செலுத்தப்பட்டு வங்கிச் சீட்டை சமர்ப்பிக்க வேண்டும்	தேசிய போட்டி கேள்வி மனு (NCB)

மேற்படி கொள்முதல் குழுவின் தலைவர், இலங்கை மின்சார சபையின் சார்பாக, சர்வதேச/தேசிய போட்டி கேள்வி மனுவின் அடிப்படையில் மேற்கூறப்பட்டுள்ள பொருட்கள்,கட்டுமானங்கள் மற்றும் சேவைகளுக்கு சாத்தியமான வழங்குநர்களிடமிருந்து மூடப்பட்ட கேள்வி மனுக்களை இப்போது அழைக்கிறார். மின்சார சபையிடமிருந்து வாங்கப்பட்ட கேள்வி மனு ஆவணங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கடைசி வரிசையில் வழங்கப்பட்ட இணைப்பிலிருந்து "தகவல் நகல்" (ஏலத்திற்கு அல்ல)("Information copy"not for bidding)இனை பதிவிறக்கம் செய்யலாம்.

கேள்வி மனு ஆவணங்கள் வருங்கால மனுதாரர் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். தேவையான சந்தர்ப்பங்களில் அவர்கள் 1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தச் சட்டம் எண் 3 இன் அடிப்படையில்பதிவு செய்யப்பட வேண்டும்.

கேள்வி மனு ஆவணங்களின் ஒவ்வொரு தொகுப்பிற்கும் மேலே உள்ள அட்டவணையின் 6 ஆம் வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை செலுத்தி,கேள்வி மனு முடிவடையும் திகதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு வரை எந்த வேலை நாட்களிலும் 0900 மணிமுதல் 1500 மணி வரை இ.மி.ச. யின் பிரதிப் பொது முகாமையாளர்/ தலைமைப் பொறியியலாளரிடம் எழுத்துப்பூர்வ கோரிக்கையைச் சமர்ப்பிப்பதன் மூலம், கேள்வி மனு ஆவணங்களை எந்தவொரு வருங்கால மனுதாரரோ அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற முகவரோ பெற்றுக்கொள்ளலாம். பொது முகாமையாளர், இ.மி.ச. யின் பெயரில் பணம் அல்லது வங்கி வரை வோலையாக (Bank Draft) பணம் செலுத்தப்பட வேண்டும்.

வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் எழுத்துப்பூர்வ கோரிக்கையை சமர்ப்பித்தால் கேள்வி மனு ஆவணங்களின் தகவல் நகல்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி மனு ஆவணங்களை வருங்கால மனுதாரர் அல்லது அவர்களின் முகவர்கள் சம்பந்தப்பட்ட பி.பொ.மு/த.பொ.(DGM/CE) அலுவலகத்தில் இலவசமாக ஆய்வு செய்யலாம்.

கேள்வி மனு கோரல் முடிவடைந்த பின்னர் ஏலதாரர்கள் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில், வரிசை 9 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் ஏலம் திறக்கப்படும். தாமதமான கேள்வி மனுக்கள் நிராகரிக்கப்படும். ஏல ஆவணங்களை வழங்கிய இ.மி.ச. யின் அந்தந்த பி.பொ.மு/த.பொ. இடமிருந்து, ஏல இறுதித் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அனைத்து விளக்கங்களும் கோரப்படலாம்.

* **ICB – International Competitive Bidding (சர்வதேச போட்டி கேள்வி மனுக்கோரல்)**
* **NCB – National Competitive Bidding (தேசிய போட்டி கேள்வி மனுக்கோரல்)**

பொது முகாமையாளர்

வளமான வாழ்விற்கு மின்சாரம்

விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.

SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service
The easiest & convenient way to send your Marriage Proposal Ads, classified@lakehouse.lk
for 15 Words - Rs. 1,000/- For each additional word Rs. 25/-
Easy way to make your payment :- BOC - Acc.No. 000000377 LAKE HOUSE BRANCH Green Light for Online Transfer
For Inquiries - Piyumi - 011 2 429 383 | 011 2 429 347 | Gayani - 011 2 429 342 / 343

ஒடிஸ்ஸெ கெபிடல் பாட்னர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்

பகிரங்க அறிவித்தல் - (PV 117434)

2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 244ம் பிரிவின் (3) உப பிரிவின் நியதியின் கீழ் அஸ்கொல்ட் (பிரைவேட்) லிமிடெட் (கம்பனி பதிவிலக்கம்: PV 68017) ஆகிய கம்பனிகளை குறித்த சட்டத்தின் 242(1)ம் பிரிவின் நியதிகளின் கீழ் ஓடிஸ்ஸெ கெபிடல் பாட்னர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (கம்பனி பதிவிலக்கம்: PV 117434) உடன் உத்தேச ஒருங்கிணைப்பிற்கான பகிரங்க அறிவித்தல்

2022ம் ஆண்டு ஜுன் மாதம் 22ந் திகதியன்று கொழும்பில் வெளியாகிய (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) தினசரிப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அஸ்கொல்ட் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் ஒடிஸ்ஸெ கெபிடல் பாட்னர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் முன்மொழியப் பட்ட இணைப்பு பற்றிய முன்னறிவிப்பு மற்றும் மேற்குறிப்பிடப்பட்டவை தொடர்பான அரசாங்க வர்த்தமானியில் அறியத்தரு கிறோம். ஒருங்கிணைப்பு தற்பொழுது நிறைவடைந்துள்ள தோடு மற்றும் 2023ம் ஆண்டு மார்ச் மாதம் 14ந் திகதி இணைக்கப்பட்ட ஒருங்கிணைப்பு சான்றிதழில் காட்டப்பட்டுள்ளது.

சபையின் கட்டளைப்படி,
ஒடிஸ்ஸெ கெபிடல் பாட்னர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,
செயலாளர்.
2023ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ந் திகதி

1964 இலக்கம் 28ஐக் கொண்ட காணி கையகப்படுத்தற் சட்டத்தின் (திருத்தப்பட்ட) கட்டளைச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறு காணி கையகப்படுத்தற் சட்டம் (460ஆம் அத்தியாயம்) 7(1)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பிலக்கம் :- KDS/PHT/4/6/1/12

காணி அமைச்சின் குறிப்பிலக்கம்: 4-3/18/2023/WS/95

இங்கு கீழ் குறிப்பிடப்பட்ட உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை அரசாங்கத்திற்கு கையகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2023/03/21 ஆம் திகதி இலக்கம் 2324/18ஐக் கொண்ட ஸ்ரீ லங்கா ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் (III)ஆம் பகுதியைப் பார்க்கவும்.

உப அட்டவணை

மாவட்டம் : கண்டி
பிரதேச செயலாளர் பிரிவு : பாத்தஹேவாஹெட்ட

கிராம உத்தியோகத்தர் பிரிவு : பூட்டாவத்த வடக்கு
கிராமத்தின் பெயர் : கந்தாகுலை
காணிகளின் பெயர் : நாரங்கடுவ வத்த அல்லது காலியபெருமால் வத்த
ஆரம்ப வரைபட இலக்கம் : C.M. 321171
காணித்துண்டிலக்கம் : 1

எச்.கே. சாகரிகா தில்ஹானி
பிரதேச செயலாளர்
காணி கையகப்படுத்தும் உத்தியோகத்தர்,
பாத்தஹேவாஹெட்ட

2023 ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி
பிரதேசச் செயலகம்
பாத்தஹேவாஹெட்ட

பெறுகை அறிவித்தல்

தென் மாகாண சபை

தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

(ஆரம்ப சுகாதார சேவை முறையை வலுப்படுத்தும் செயற்றிட்டம் - (PSSP)

தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் வேலைகளுக்காக 2023-04-27ஆம் திகதி முதல் 2023-05-12ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். 2023-05-12ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு தென் மாகாண சுகாதார சேவை திணைக்களத்தில் விலைமனுதாரர்கள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

தொ. இல.	விபரங்கள்	தேவையான பதிவு	மீளளிக்கப் படும் விலைக் கோரல் பிணை ரூபா	மீளளிக்கப் படாத விலைக் கோரல் வைப்பு ரூபா	கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய அலுவலகம்
01.	Repairing of Paient Toilet System, Beams, Windows Replacement of Gutters of Children ward at BH Balapitiya	C 8, C7, C6	58,000.00	2500.00	தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்
02.	Construction of Two waiting area for OPD,& NCD clinic at DH Deiyandara	C 8, C7, C6	70,000.00	3000.00	தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

02. விலைமனுக்களை 2023-04-27ஆம் திகதி முதல் 2023-05-11ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இல.15A, கீழ் டிக்சன் வீதி, காலி எனும் முகவரியில் அமைந்துள்ள தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

03. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் அடிப்படையில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஒப்பந்தத்தை வழங்கப்பெறும் தகைமை வாய்ந்த வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை நிர்மாண பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தின் (CIDA) கட்டிட நிர்மாணத் துறையில் மேற்கூறப்பட்ட வகுதிகளின் கீழ் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். நிதி அமைச்சின் 04/2016(IV) மற்றும் 2023.02.09ஆம் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம் இந்தப் பெறுகையின் மொத்த மதிப்பீட்டுச் செலவு 50 மில்லியன் ரூபாவிற்குக் குறைவாக இருப்பதால் ஒப்பந்தக்காரர்களுக்கான மாகாண முன்னுரிமை மற்றும் விலைக்கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பாக விலைமனுக்களை மதிப்பீடு செய்கையில் கவனத்திற் கொள்ளப்படும். மேலும் அரச சுற்றுநிருப இலக்கம் 03/2020 மற்றும் 2020-10-09 மற்றும் 03/2020(i) மற்றும் 2021-01-11ஆம் திகதிய சுற்று நிருபங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

04. விலைமனுக்கள் தொடர்பான மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் பொதுவான அலுவலக நேரத்தினுல் தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் பின்வருமாறாகும். 091-2231620/091-2224609/091-2223839

05. சமர்ப்பிக்கும் விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு நகல்களில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுக்களைச் சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். முழுமையற்ற விலைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்களைப் பெற்றுக்கொண்டு விலைக்கோரல்களைச் சமர்ப்பிக்காத விலைமனுதாரர்களின் விலைக்கோரல் பிணைத் தொகை அரசுரிமையாக்கப்படும்.

06. மேற்கூறப்பட்ட வேலைகளுக்கு இயைபான விலைக்கோரல் பிணை முறிக் கட்டணத்தை தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு ரொக்கப் பணமாகச் செலுத்தலாம் அல்லது அரச பெறுகை கோவையின் 5:3:13 மாதிரியின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட குறித்த பெறுமதியுடனான பிணை முறியொன்றை தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும். ரொக்கப் பணமாகச் சமர்ப்பிப்பதானால் பற்றுச்சீட்டின் பிரதியொன்றை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் 2023-05-12ஆம் திகதி முதல் 2023-08-25ஆம் திகதி வரையிலானதாகவிருத்தல் வேண்டும்.

07. விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் 77 நாட்களாகும்.

08. சகல விலைகளையும் உள்ளடக்கிய விலைக்கோரல் படிவத்தில் அலகொன்றில் விலை மற்றும் மொத்த விலையைக் காட்டும் நிரல் மற்றும் சுருக்கத்தை (கழிவைக் காட்டும் நிரல் உட்பட) மூடும் வகையில் செலோடேப் (transparent) இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

09. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

தலைவர்,
பெறுகைக் குழு,
தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,
இல. 15A, கீழ் டிக்சன் வீதி,
காலி
2023-04-27

மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

மக்கள் வங்கி - மாத்தறை பிராந்திய தலைமைக் காரியாலயம்

மக்கள் வங்கி மாத்தறை பிராந்திய தலைமைக் காரியாலயத்தின் பின்வரும் கிளைகள்/சேவை மையங்களில் 31.12.2021 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் 26.05.2023 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் இடத்தில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

ஏல விற்பனை செய்யப்படும் திகதி	27.05.2023
ஏல விற்பனை செய்யப்படும் இடம்	மாத்தறை தர்மபால மாவத்தை கிளை
அடகு வைக்கப்பட்ட கிளைகள்	மாத்தறை தர்மபால மாவத்தை, மாத்தறை உயன்வத்தை, கம்புருபிட்டிய, கந்தர, ஹக்மன, டிக்வெல்ல, மொறவக்க, தெனியாய, ஊருபொக்க
அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள்	கொட்டுவேகொட, ககனதுர, கோட்டெகொட, தெய்யந்தர, மிரிஸ்ஸ, ஓபாத, பிடகத்தர, பல்லேகம.

இந்த ஏல விற்பனையை மறு அறிவிப்பு இன்றி இரத்து செய்ய ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற ஒன்றிணைத்து செயற்பட அல்லது இச் செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர்,
பிராந்திய தலைமைக் காரியாலயம்,
இல. 123, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை.
தொலைபேசி இல. 041-2222822, 041-2222781, 041-2226481

மக்கள் வங்கி PEOPLE'S BANK www.peoplesbank.lk

இலங்கை துறைமுக அதிகாரசபை

பதவி வெற்றிடங்கள்

கீழே குறிப்பிடப்படும் பதவிகளுக்கு வேண்டப்படும் தகைமைகளையுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பதவி : கப்பல் மாலுமி (சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம் 3)

(அ) தகுதித்திறன்

கப்பலொன்றின் கல அதிபராக (மட்டுப்படுத்தப்படாத) சேவையில் ஈடுபடுவதற்கு இலங்கை வர்த்தக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசினால் வழங்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதலொன்று பெற்றிருத்தல்.

அத்துடன்

அனுபவம்

வெளிநாட்டு வணிக கப்பலொன்றில் கல அதிபரொருவராக குறைந்தது ஒரு(01) வருட கடற் பயண அனுபவம் பெற்றிருத்தல்.

(ஆ) சம்பளம்

சம்பள வகையீடு : 3:3 (SLM3)
ஆரம்ப சம்பளம் : ரூபா 76,875/-
வருடாந்த சம்பள ஏற்றம் : ரூபா 1,555

கொடுப்பனவுகள் அடங்கலாக மாதாந்த மொத்த சம்பளம் சுமார் ரூபா. 150,000/= ஆகும்.

02. பதவி : பிரதான கடற் கல இணைப்பு அலுவலர் (மத்திய முகாமைத்துவ மட்டம் 2)

(அ) தகுதித்திறன்

மொத்த நிறை 500 தொன்னுக்குக் குறையாத கரையோர கடற் பயணங்களில் ஈடுபடும் கப்பல்களில் கப்பல் ரோந்து அதிகாரியாக சேவையிலீடுபடுவதற்காக இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட அதற்கு சமனான சான்றிதலொன்று

அத்துடன்

பணிப்பாளர் (வணிகக் கப்பல்) மூலம் வழங்கப்பட்ட ரேடார் அவதானிப்பு சான்றிதழுடன் (Radar Observers Certificate) உயர் அலை வரிசை (VHF) மற்றும் வானொலி தொடர்பாடல் (RT) தொடர்பான விரிவான அறிவு மற்றும் சரளமாக ஆங்கில மொழியில் உரையாடும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.

அனுபவம்

உரிய துறையின் பதவியொன்றில் ஐந்து(05) வருட அனுபவம் பெற்றிருத்தல்.

(ஆ) சம்பளம்

சம்பள வகையீடு : 4:2 (MLM2)
ஆரம்ப சம்பளம் : ரூபா 63,125/-
வருடாந்த சம்பள ஏற்றம் : ரூபா 1,265/-

கொடுப்பனவுகள் அடங்கலாக மாதாந்த மொத்த சம்பளம் சுமார் ரூபா. 136,000/= ஆகும்.

குறிப்பு

சிறந்த உள, உடல் தகுதித்திறனுடன் மற்றும் சிறந்த செவிப்புலன் மற்றும் கட்புலனையுடைய நபரொருவராக இருத்தல் வேண்டும்.(மருத்துவ பரிசோதனையொன்றிற்கு உட்படுதல் வேண்டும்.)

03. பதவி : மேலதிக பிரதான கடற் கல இணைப்பு அலுவலர் (கனிஷ்ட முகாமைத்துவ மட்டம்)

(அ) தகுதித்திறன்

மொத்த நிறை 500 தொன்னுக்குக் குறையாத கரையோர கடற் பயணங்களில் ஈடுபடும் கப்பல் ரோந்து அதிகாரியாக சேவையிலீடுபடுவதற்கு இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட அதற்கு சமனான சான்றிதலொன்று

அத்துடன்

பணிப்பாளர் (வணிகக் கப்பல்) மூலம் வழங்கப்பட்ட ரேடார் அவதானிப்பு சான்றிதழுடன் (Radar Observers Certificate) உயர் அலை வரிசை (VHF) மற்றும் வானொலி தொடர்பாடல் (RT) தொடர்பான விரிவான அறிவு மற்றும் சரளமாக ஆங்கில் மொழியில் உரையாடும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.

அனுபவம்

உரிய துறையின் பதவியொன்றில் ஐந்து(05) வருட அனுபவம் பெற்றிருத்தல்.

(ஆ) சம்பளம்

சம்பள வகையீடு : 5 (JLM)
ஆரம்ப சம்பளம் : ரூபா 60,000/-
வருடாந்த சம்பள ஏற்றம் : ரூபா 1,150/-

கொடுப்பனவுகள் அடங்கலாக மாதாந்த மொத்த சம்பளம் சுமார் ரூபா. 133,000/= ஆகும்.

கவனிக்க

மேலே பதவிகள் தொடர்பில் விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரிகளும் 45 வயதை விட குறைந்தவராக இருத்தல் வேண்டும். (இவ்வயதெல்லை அரச துறை அல்லது அரச கூட்டுத் தாபனங்களிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதல்ல.)

இலங்கைத் துறைமுக அதிகாரசபையில் ஏற்கனவே விதிக்கப்பட்ட அல்லது எதிர் காலத்தில் விதிக்கப்படக் கூடிய சகல சட்ட திட்டங்களுக்குமிணங்க நியமனம் பெறுபவர் செயற்படுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்ப இலங்கை துறைமுக அதிகாரசபையின் எந்தவொரு பகுதியிலும் / பிரிவிலும் அல்லது நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிய கடமைப்பட்டுள்ளார்.

விண்ணப்பங்கள் வயது, கல்வி, தொழில் தகைமைகள், அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன பிரதான மனிதவள முகாமையாளர், இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு -13 என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக 2023.05.15ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சல் மூலம் **(slpahrex@slpa.lk)** அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும்.

குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் இணைத்து அனுபப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இவ்வறிவித்தல் **www.slpa.lk** எனும் வலைத்தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவையில் அல்லது அரசாங்க கூட்டுதாபன சேவையில் இருப்பவர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் திணைக்கள/கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக சமர்பிக்கப்பட வேண்டியதுடன், மேற்குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவுசெய்யப்பட்டால் குறித்த திணைக்களத்தின்/ கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிப்பதற்கு உடன்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

தலைவர்.

பெறுகை அறிவித்தல்

சுகாதாரம், சுதேச வைத்தியம், நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, மகளிர் விவகாரம் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு

ஊவா மாகாண சபை - பதுளை

ஊவா மாகாண சபையின் சுகாதாரம் சுதேச வைத்தியம், நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, மகளிர் விவகாரம் மற்றும் சமூக நலன்புரி அமைச்சின் பெறுகைக்குழுத் தலைவரினால் 2023 மே மாதம் 22 வரை ஊவா மாகாண வைத்தியசாலைகளிற்குத் தேவையான பின்வரும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்காக அதிகாரம் பெற்ற நிறுவனங்கள் அல்லது அவர்களின் முகவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

02. இதற்காக ஆர்வங்காட்டும் தகவுத் திறன்களைக் கொண்ட நிறுவனங்கள் கேள்விதாரர்கள், முகவர்கள்

(அ) பதுளை, ஆர்.எச். குணவர்தன மாவத்தையிலுள்ள சுகாதார அமைச்சின் செயலாளருக்கு எழுத்துருவ விண்ணப்பமொன்றை (உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன்) வியாபாரப் பதிவுச் சான்றிதழுடன் சமர்ப்பித்து மற்றும்

(ஆ) பதுளை, ஆர்.எச். குணவர்தன மாவத்தை, சுகாதார அமைச்சின் கணக்காளரிடம் பின்வரும் மீளளிக்கப்படாத படிவக் கட்டணத்தைச் செலுத்தி விலைமனுக்களுக்கான ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர் இலக்கம்	உபகரணங்கள்	எண்ணிக்கை	மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூபா	மீளளிக்கப்படும் கேள்விப் பிணையம்	
				காசாக	வங்கி வரைவு ஒன்ரெனின்
01	High Pressure Sterilizer 250L	4	3000.00	1%	2%
02	Patient Monitors (Basic)	30			
03	Diathermy Machines	5			
04	PUVA Therapy Unit (Photo Therapy Dermatology)	3			
05	ECT Machine	2			
06	Ultra Sound Scan	2			
07	USS Portable	1			
08	Postmortem Set	3			

03. 2023.04.27 முதல் 2023.05.22 வரை வார வேலை நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப. 3.00 வரை, பதுளை ஆர்.எச். குணவர்தன மாவத்தை, சுகாதார அமைச்சு அலுவலகக் கணக்குப் பிரிவில் இதற்கான கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. 2023 மே மாதம் 22 அன்று மு.ப. 10.30 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு முத்திரையிடப்பட்ட அனைத்துக் கேள்விகளும் (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியுடன்) பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்புச் செய்தல் மேற்கொள்ளலாம்.

05. கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படுவதுடன், அவ் வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற முகவர்கள் சமுகமளித்திருக்கலாம்.

06. இது தொடர்பாக பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும். (055-2222803)

தலைவர்,
அமைச்சின் பெறுகைக் குழு,
சுகாதாரம், சுதேச வைத்தியம்,
நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு,
மகளிர் விவகாரம் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு,
ஆர்.எச். குணவர்தன மாவத்தை, பதுளை.
2023.04.26

சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு

312
வெற்றிடங்கள்
தொழில் நுட்பம்

எமது நிறுவனத்திற்கு டின்கர் பெயின்டர் தேவை. தங்குமிட வசதி களுடன். நுகேகொடை. 0777252876. 023627

318
வெற்றிடங்கள்
டிரைவர்கள்

சாரதிகள் (DRIVERS) கொழும்பு பாதைகள் பற்றி நல்ல அனு பவமுடைய வெள்ளவத்தை வீட்டில் தங்கி வேலை செய்யக்கூடிய ஒடோ (Auto), கார் ஓட்டத்தெரிந்த சாரதிகள் (DRIVERS) தேவை. வயதெல்லை 40 - 55. இலவச தங்குமிட வசதி வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு கீழ்க்காணும் முகவரிக்கு வரவும். இல. 18, வெளிஅமுன வீதி, ஹேகித்த, வத்த ளை. தொ.பே. இல. 0766200300. 025041

The easiest & convenient way to send your Marriage Proposal Ads, classified@lakehouse.lk
SUNDAY OBSERVER Marriage Proposals
for 15 Words - Rs. 1,000/- Easy way to make your payment :- BOC - A/c No. 00000377 Online Transfer
For Inquiries - Piyumi - 011 2 429 383 | 011 2 429 347 | Gayani - 011 2 429 342 / 343

திமுத், மதுஷ்க சாதனை இணைப்பாட்டம்: இமாலய ஓட்டங்களை நோக்கி இலங்கை

3ஆம் நாள் ஆட்டத்துக்கு மழை இடையூறு

திமுத் கருணாரத்ன மற்றும் நிஷான் மதுஷ்கவின் சாதனை இணைப்பாட்டத்தின் மூலம் அயர்லாந்துடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியை ஆடும் இலங்கை அணி மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது முதல் இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டை மத்திரம் இழந்து 357 ஓட்டங்களை பெற்றுள்ளது.

மூன்றாம் நாள் ஆட்டம் மழை காரணமாக முன்கூட்டியே முடிவுக்கு வந்தது.

இதில் விக்கெட் இழப்பின்றி 81 ஓட்டங்களுடன் நேற்று தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை அணி தொடர்ந்தும் ஓட்டங்களை அதிகரித்துக் கொண்டது. அயர்லாந்து தனது முதல் இன்னிங்ஸில் 492 என்ற இமாலய ஓட்டங்களை பெற்ற நிலையில் அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் இலங்கையின் துடுப்பாட்டம் இருந்தது.

ஆரம்ப வீரர்களான கருணாரத்ன மற்றும் மதுஷ்க இருவரும் 228 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்துகொண்டனர். இது காலி மைதானத்தில் 2000ஆம் ஆண்டு சனத் ஜனசூரிய மற்றும் மார்வன் அத்தபத்து ஆரம்ப விக்கெட்டுக்குப் பெற்ற 193 ஓட்ட இணைப்பட்ட சாதனையை முறியடிப்பதாக இருந்தது.

அதேபோன்று ஆரம்ப விக்கெட்டுக்காக இலங்கை அணி பெற்ற மூன்றாவது அதிகூடிய இணைப்பாட்ட ஓட்டங்களாகவும் இது இருந்தது.

இதில் தனது 16ஆவது டெஸ்ட் சதத்தை பெற்ற கருணாரத்ன 133 பந்துகளில் 15 பௌண்டரிகளுடன் 116 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். இதன்போது அவர் 116 பந்துகளிலேயே சதம் பெற்று தனது டெஸ்ட் வாழ்வில் அதிவேக சதத்தை பதிவு செய்துகொண்டார்.

இந்த ஆண்டில் கருணாரத்ன தனது ஆறு இன்னிங்ஸ்களில் இரு சதங்கள் மற்றும் மூன்று அரைச்சதங்களுடன் 521 ஓட்டங்களை பெற்றிருப்பதோடு இதன் ஓட்ட சராசரி 83.50 ஆகும்.

மறுபுறம் தனது மூன்றாவது டெஸ்ட் போட்டியில் ஆடும் மதுஷ்க தனது கன்னி சதத்தை பெற்றார். அவர் குசல் மெண்டிஸுடன் சேர்ந்து முதல் விக்கெட்டுக்காக பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 129 ஓட்டங்களை பகிர்ந்துக்கொண்டார். மூன்றாம் நாள் ஆட்டம் மழை காரணமாக முன்கூட்டியே முடிவுக்கு வரும்போது மதுஷ்க ஆட்டமிழக்காது 149 ஓட்டங்களை பெற்றிருப்பதோடு குசல் மெண்டிஸ் 96 பந்துகளில் 83 ஓட்டங்களுடன் உள்ளார்.

இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் அயர்லாந்தை விடவும் தொடர்ந்து 135 ஓட்டங்களால் பின்தங்கி உள்ளது. எனினும் அந்த அணியின் ஒன்பது விக்கெட்டுகள் தொடர்ந்தும் எஞ்சியுள்ளன.

இலங்கை தனது 100ஆவது டெஸ்ட் வெற்றியை எதிர்பார்த்தே இந்தப் போட்டியில் ஆடுகிறது. எனினும் ஆட்டத்தின் இரண்டு நாட்களே எஞ்சி இருக்கும் நிலையில் போட்டியில் வெற்றியீட்டுவது என்பது பெரும் சவாலாக மாறியுள்ளது.

இன்று போட்டியின் நான்காவது நாளாகும்.

மாத்தறை சம்பியன்ஸ் லீக் ஏப்ரல் 29 அன்று ஆரம்பம்

மாத்தறை சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் தொடர் நான்வாது முறையாகவும் எதிர்வரும் ஏப்ரல் 29, 30ஆம் திகதிகளில் பகலிரவு ஆட்டங்களாக மாத்தறை தாருல் உலூம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பதினாறு அணிகள் பங்குபெறவுள்ள இந்தத் தொடரில் சம்பியன் அணி மற்றும் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் அணிக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படவிருப்பதோடு சிறந்த பந்துவீச்சாளர் மற்றும் சிறந்த துடுப்பாட்ட வீரர் மற்றும் சிறந்த ஆட்டக்காரருடன் தொடர் நாயகன் விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

மாத்தறை நகரின் சிறந்த வீரர்களை இனங்காணும் வகையில் இந்தத் தொடர் வருடா வருடம் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மென்செஸ்டர் கால்பந்தாட்ட அணிகள் இந்தியா பயணம்

இந்தியாவின் பெங்களூரில் நடைபெறவுள்ள கால்பந்தாட்டப் பயிற்சியகங்களின் அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இலங்கையின் மென்செஸ்டர் கால்பந்தாட்ட பயிற்சியகம் பங்குபற்றவுள்ளது.

இந்த கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் மொத்தமாக 12 கால்பந்தாட்ட பயிற்சியகங்கள் பங்குபற்றவுள்ளதுடன் மென்செஸ்டர் கால்பந்தாட்டப் பயிற்சியகம் சார்பாக 3 அணிகள் விளையாடவுள்ளன.

12 வயதுக்குட்பட்ட, 14 வயதுக்குட்பட்ட, 16 வயதுக்குட்பட்ட மூன்று அணிகளே பெங்களூரில் நடைபெறவுள்ள இந்த சுற்றுப் போட்டியில் பங்குபற்றவுள்ளதாக மென்செஸ்டர் கால்பந்தாட்ட பயிற்சியகத்தின் ஸ்தாபகத் தலைவரும் தலைமைப் பயிற்றுநருமான ஒகஸ்டின் ஜோர்ஜ் தெரிவித்தார்.

இப் போட்டியில் பங்குபற்றும் மென்செஸ்டர் கால்பந்தாட்ட பயிற்சியக வீரர்கள் நேற்று (26) பெங்களூர் நோக்கி பயணமாகினர்.

மென்செஸ்டர் கால்பந்தாட்டப் பயிற்சியகத்தின் 12 வயதுக்குட்பட்ட அணி 6 போட்டிகளிலும் 14 மற்றும் 16 வயதுக்குட்பட்ட அணிகள் தலா 4 போட்டிகளிலும் பெங்களூரில் விளையாடவுள்ளன.

காலி தடல்ல அல் முபாரக் பாடசாலை மைதானத்தில் நோன்புப் பெருநாளை முன்னிட்டு தடல்ல பிரிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றிய எம்.எப்.எம்.மிப்லால் தலைமையிலான பைன் ஸ்டரைக்கர்ஸ் கிரிக்கெட் அணியை படத்தில் காணலாம்.
(படம்: பேருவளை விசேட நிருபர்)

சாப் கால்பந்து தொடரில் இலங்கை அணியின் இடத்திற்கு மாற்று அணியை அழைக்க திட்டம்

இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு பிஃபா தடை விதித்திருக்கும் நிலையில் 2023 சாப் கால்பந்து போட்டியில் இலங்கை அணியின் இடைவெளியை மற்றொரு பிராந்திய அல்லது பிராந்தியத்திற்கு வெளியில் உள்ள அணியைக் கொண்டு நிரப்ப தெற்காசிய கால்பந்து சம்மேளனம் ஆலோசித்து வருகிறது.

இந்தத் தொடரை இந்தியாவின் பெங்களூரில் எதிர்வரும் ஜூன் 23 தொடக்கம் ஜூலை 3 ஆம் திகதி வரை நடத்த அகில இந்திய கால்பந்து சம்மேளனம் மற்றும் தெற்காசிய கால்பந்து சம்மேளனம் தீர்மானித்துள்ளன.

இந்தத் தொடரில் இலங்கை உள்ளடக்கப்படாததை அடுத்து போட்டியில் பங்கேற்கும் அணிகள் ஏழில் இருந்து ஆறாக குறைக்கப்பட்டுள்ளது.

இதில் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம், மாலைதீவு மற்றும் பூட்டான் அணிகள் தமது பங்கேற்பை உறுதி செய்திருப்பதாக தெற்காசிய கால்பந்து சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தெற்காசிய கால்பந்து சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் கடந்த மார்ச் 31 ஆம் திகதி மெய்நிகர் கூட்டமாக இடம்பெற்றது. இதன்போதே பெங்களூரில் போட்டியை நடத்துவது உறுதி செய்யப்பட்டுள்ளது. தவிர, சாப் பிராந்தியத்திற்கு வெளியில் இருந்து ஒன்று அல்லது இரண்டு அணிகளை இந்தத் தொடரில் பங்கேற்க அழைப்பு விடுப்பது குறித்து நிறைவேற்றுக் குழுவில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் பங்கேற்கும் அணிகளின் எண்ணிக்கையை எட்டாக உயர்த்தி அதிக போட்டி கொண்ட தொடராக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

மற்றொரு இருமல் மருந்து குறித்து புதிய எச்சரிக்கை

மார்ஷல் தீவுகள் மற்றும் மைக்ரோனேசியாவில் அசுத்தமான இந்திய தயாரிப்பு இருமல் மருந்துகளின் தொகுதி ஒன்று அடையாளம் காணப்பட்டதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

பஞ்சாபை தளமாகக் கொண்ட மருந்து உற்பத்தி நிறுவனத்தின் Guaifenesin TG சிரப் மருந்தின் மாதிரிகள் சோதிக்கப்பட்ட போது அதில் "ஏற்றுக்கொள்ள முடியாத அளவு டைதிலீன் கிளைகோல் மற்றும் எத்திலீன் கிளைகோல் இருந்தது" என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த இரு கலவைகளும் மனிதர்களுக்கு நச்சுத்தன்மை வாய்ந்தது என்பதோடு அவைகளை உட்கொள்வது உயிராபத்துக் கொண்டதாகும். இந்த மருந்தினால் யாரேனும் சுகவீனமுற்றார்களா என்பது பற்றி அந்த அமைப்பு எந்த விபரத்தையும் வெளியிடவில்லை.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வேறு இருமல் மருந்துகளால் காம்பியா மற்றும் உஸ்பகிஸ்தானில் உயிரிழப்பு சம்பவங்கள் பதிவானது பற்றி உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்து சில மாதங்களிலேயே இந்த புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது.

வளர்ந்துவரும் நாடுகளின் மருந்துத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் உலகின் மிகப்பெரிய பொது மருந்து உற்பத்தி நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. எனினும் பல இந்திய மருந்து உற்பத்தி நிறுவனங்களின் தரம் பற்றி அண்மைக்காலத்தில் விமர்சனங்கள் வலுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச செய்திகள்

நோர்வேயில் விழுந்த சுவீடனின் ரொக்கெட்

வடக்கு சுவீடனில் இருந்து அந்நாட்டு விண்வெளி நிறுவனத்தால் ஏவப்பட்ட சோதனை ரொக்கெட் ஒன்று செயலிழந்து அண்டை நாடான நோர்வேயில் விழுந்துள்ளது.

பூமிக்கு மேல் 250 கிலோமீற்றரில் ஈர்ப்பு விசையற்ற பகுதியில் மேற்கொள்ளப்படும் சோதனைக்காகவே இந்த ரொக்கெட் ஏவப்பட்டுள்ளது. எனினும் அந்த ரொக்கெட் எதிர்பார்த்ததை விடவும் சற்று நீளமானதாகவும் மேற்கு நோக்கி சென்றதாகவும் அந்த விண்வெளி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் இந்த ரொக்கெட் நோர்வேயின் மல்செல்வ் மாநகரசபை பிராந்தியத்தில் மனிதர்கள் இல்லாத பகுதியில் கடந்த திங்கட்கிழமை விழுந்துள்ளது.

இது தொடர்பில் மன்னிப்புக் கேட்டிருக்கும் சுவீடன் விண்வெளி நிறுவனம் விசாரணைகள் நடத்தப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளது. எனினும் சுவீடன் இது பற்றி தமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கத் தவறிவிட்டதாக நோர்வே அதிகாரிகள் குறைகூறியுள்ளனர்.

தலிபான்களால் ஐ.எஸ் குழுத் தலைவர் கொலை

காபுல் விமான நிலையத்தின் குண்டு வெடிப்புக்குக் காரணமாகக் கருதப்படும் ஐ.எஸ் குழுவின் தலைவரைத் தலிபான்கள் கொன்றதாக அமெரிக்க அதிகாரிகள் உறுதிசெய்துள்ளனர். எனினும் கொல்லப்பட்ட அந்தத் தலைவரின் பெயர் வெளியிடப்படவில்லை.

2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடந்த குண்டுவெடிப்பில் குடிமக்கள் 170 பேரும் 13 அமெரிக்கத் துருப்பினர்களும் கொல்லப்பட்டனர். ஐ.எஸ் குழுத் தலைவர் சில வாரங்களுக்கு முன் கொல்லப்பட்டதாகவும் அதை உறுதிசெய்ய நேரம் எடுத்ததாகவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

புலனாய்வுத் தகவல்கள், வட்டாரக் கண்காணிப்பு மூலம் அவர் மரணத்தை உறுதிசெய்ததாக அமெரிக்க அதிகாரிகள் கூறினர். 2021 தாக்குதலுக்கு அவரே பொறுப்பு என்பதை எப்படித் தெரிந்து கொண்டனர் என்பது பற்றி அமெரிக்க அதிகாரிகள் ஏதும் கூறவில்லை.

ஐ.எஸ் குழுவின் தலைவர் தலிபான்களால் குறிவைக்கப்பட்டுக் கொல்லப்பட்டாரா அல்லது தலிபான்களுக்கும் ஐ.எஸ் குழுவுக்கும் இடையிலான சண்டையில் அவர் கொல்லப்பட்டாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

சூடானிலிருந்து 1,687 பேரை வெளியேற்றியது சவூதி

போர் இடம்பெறும் சூடானில் இருந்து ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 1,687 பேரை ஏற்றி புறப்பட்ட கப்பல் ஒன்று நேற்று (26) சவூதி அரேபியாவை சென்றடைந்துள்ளது. இது அந்த நாடு இதுவரை மேற்கொண்ட மிகப்பெரிய வெளியேற்ற நடவடிக்கையாக உள்ளது.

சூடானில் கடந்த ஏப்ரல் 15 ஆம் திகதி போர் வெடித்தது தொடக்கம் சவூதி அரேபியா வான் மற்றும் கடல் மார்க்கமாக பல சுற்று வெளியேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் சூடான் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட சவூதிக்கு சொந்தமான கப்பல் துறைமுக நகராக ஜித்தவை அடைந்ததாக சவூதி வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதில் 13 சவூதி நாட்டவர்களுடன் மத்திய கிழக்கு, ஆபிரிக்கா, ஐரோப்பா, ஆசியா மற்றும் அமெரிக்க பிராந்தியங்களைச் சேர்ந்த மக்களும் இருப்பதாக அந்த அமைச்சு குறிப்பிட்டது.

சூடானில் இருந்து சவூதிக்கு தமது நாட்டின் 560 பிரஜைகளை வெற்றிகரமாக வெளியேற்றியதாக இந்தோனேசிய வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

சூடான் இராணுவத் தளபதி அப்தல் பத்தா அல் புர்ஹான் மற்றும் பலம்மிக்க துணை இராணுவப் படையான விரைவு உதவிப் படையின் தளபதி மொஹமத் ஹம்தான் டக்லோ இடையில் ஏற்பட்டிருக்கும் முரண்பாடே அந்நாட்டில் கடும் மோதலை ஏற்படுத்தியுள்ளது.

இந்த உக்கிர மோதல்களில் கடந்த செவ்வாய்க் கிழமை வரை குறைந்து 459 பேர் கொல்லப்பட்டு 4,000க்கும் அதிகமானவர்கள் காயமடைந்திருப்பதாக ஐ.நா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா மத்தியஸ்தத்தில் போர் தரப்புகளுக்கு இடையே ஏற்பட்ட மூன்று நாள் போர் நிறுத்தத்தால் தலைநகர் கார்டூமில் சற்று அமைதி திரும்பியபோதும் வான் தாக்குதல்கள் பற்றி செய்தி வெளியாகி இருப்பதோடு பிரதான எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மற்றும் மின் உற்பத்தி நிலையம் ஒன்றை கைப்பற்றியதாக துணை இராணுவப் படை குறிப்பிட்டுள்ளது.

இந்தப் போர் காரணமாக சூடானில் இருந்து வெளிநாட்டினர்கள் மற்றும் இராஜதந்திரிகளை வெளியேற்றும் செயற்பாடு தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. இதில் சவூதி அரேபியா பிரதான பங்காற்றி வருகிறது.

இதுவரை 2000க்கும் அதிகமான வெளிநாட்டினர்கள் உட்பட சூடானில் இருந்து 2,148 பேரை சவூதி அரேபியா வெளியேற்றி இருப்பதாக சவூதி வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஏப்ரல் மாதம் 27ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.